

உ

கணபதி துணை.

சேறைக்கவிராசபிள்ளை

இயற்றிய

# திருக்காளத்திநாதருலா.

இஃது,

ஆலங்காடு

ம-ள-ள-ஸ்ரீ

ராம. சிதம்பரசெட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி,

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய அரும்பதவுரை முதலியவற்றுடன்

சென்னபட்டணம்:

வைஜயந்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

குரோதி௵ புரட்டாசி௴.

1904

விலை அணா. ௬.

*Copyright Registered.*

# இப்புத்தகத்திலடங்கியவை.


௧. முகவுரை. ௧.

௨. நூலாசிரியர் வரலாறு. ௪.

௩. திருக்காளத்திநாதருலா ஆராய்ச்சி: ௭-௧௦.

[இதில், ஸ்தலத்திற்குரிய நாடு, ஸ்தலவிநாயகர் திருநாமம், ஸ்வாமியின் திருநாமங்கள், அம்பிகையின் திருநாமங்கள், ஸ்தலத்தின் திருநாமங்கள், தீர்த்தங்கள், ஸ்தலவிருக்ஷங்கள், மலைகள், வழிபட்டுப் பேறுபெற்றோர்களுடைய திருநாமங்கள், இதிலுள்ள மடங்கள், திருக்கோயிலில் தொண்டுபூண்டொழுகியவர்கள் இன்னார் இன்னாரென்பது, விசேடச்செயல்கள், ஸ்தலத்திற்குரிய ஆகமம், தேவாரங்கள், ௧௧-ம் திருமுறைப்பிரபந்தங்கள், வடமொழிப் புராணங்கள், தமிழ்ப்புராணங்கள், தமிழ்ப்பிரபந்தங்கள் என்னும் இவற்றை முறையே அறிந்துகொள்ளலாம்.]

**௪. திருக்காளத்தி நாதருலா. ௧-௬௪.**

௫. திருக்காளத்திநாதருலாப் பாடபேதம். ௬௫-௬௮.

௬. திருக்காளத்திநாதருலா அரும்பதவுரை. ௬௯-ரு0.

# இத்தலத்திற்குரிய
# தமிழ்ப்பிரபந்தச் செய்யுட்கள்:

## திருக்காளத்திநாதர் கட்டளைக்கலித்துறைமாலை.

தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் றன்செருப்பு
மருமூர்ந்து வேணிக் கணிமா மலரவன் வாயுதகந்
திருமஞ் சனப்புனல் பல்லா லவன்மென்று தின்றதசை
யருமந்த போனக மன்றோநங் காளத்தி யப்பருக்கே.

## திருக்காளத்திநாதர் கட்டளைக்கலிப்பா.

இருப்புக் காலினும் வன்காலென் காறின
மிரப்புக் காக நடக்கவென் றுலெந்தை
பொருப்புக் கால்வலஞ் செய்யென்று மேலவர்
புகன்றக் காலிது பொய்க்காலென் சொல்லுவேன்
செருப்புக் காலொற்றிச் செவ்வாய்ப் புனல்விட்டுச்
சென்னிப் பூப்பெய்து செங்கையி லூன்வைத்துக்
கருப்புக் கான்மட்டுந் தின்றூ லெணநின்ற
கண்ணப் பன்பணி காளத்தி வாணனே.

## திருக்காளத்திநாதர் பதிகம்.

பஞ்சணைய சிற்றடிப் பேரமர்க் கட்கொடிய
பாவையர் திறந்து மழலைப்
பன்மகார் தந்திறத் துந்தேக வபிமான
பாசநே சத்தி றத்தும்
விஞ்சுபல காலம்யான் பாழுக் கிறைத்தமன
வெப்பெலா மாறு மாறு
விரிதிரை சுருட்டுமணி யொளிவீசு பொன்முகரி
வெள்ளநீ ராடு வித்துத்
தஞ்சமா முன்றிருச் சேவையெனு மமுதசஞ்
சீவியுந் தந்த ளித்தாய்
தரையில்யா னினிவழுவி யுற்பவக் கொடியபொந்
தளையுறு வரம ளிப்பாய்
கஞ்சனுங் கஞ்சவிழி மஞ்சனுந் தேடக்
கனற்பிழம் பான வொளியே
காளத்தி மலைமேவு கருணைமலை யேதிருக்
கண்ணப்பர் காதன் மலையே.

உ

கணபதி துணை.

# முகவுரை.

"காளத்தி காணப் பெற்ற கண்களே கண்க ளென்றுங்
காளத்தி நகருக் கேகுங் கால்களே கால்க ளென்றுங்
காளத்தி புகுங்க ருத்தே கருத்தென் றுங் கைலை நாமக்
காளத்தி புகழு நாவே நாவென் றுங் கற்றோர் சொல்வர்."

உலாவென்பது, தமிழ்ப்பாஷைக்குரிய தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒருவகை நூல்; ஒருதலைவன், * பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாகிய ஏழுபருவ மகளிர்களும் தன்னைக்கண்டு காதல்கூரும்படி † வீதியிற் பவனிபோந்தானென்று கலிவெண்பாவாற் கூறல்வேண்டுமென்பது அந்நூலுக்குரியவிதி. இதனை, "திறந்தெரிந்த பேதை முதலெழுவர் மெய்யை, மறந்தபர வந்தான் மறுகென்-றறைந்தகலி, வெண்பா வுலாவாம்" என்னும் வச்சணந்திமாலையால் உணர்க. இப்பிரபந்தத்தின் இலக்கணவிரிவு, பன்னிருபாட்டியல்முதலிய பழைய பாட்டியல்களில் விளங்கக் காணப்படும்.

தாம் வழிபடுதற்குரிய கடவுளர்மீதும் தம்மை ஆதரித்த தலைவர்கள்மீதும் பண்டைக்காலந்தொடங்கிப் பெரியோர்கள் செய்துபோந்த பற்பல உலாக்கள் இத்தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. ஆதியுலா முதலியவைகளும், மூவருலா முதலியவைகளும் மேற்கூறிய இருபகுதிகளுக்கும் முறையே உதாரணங்களாகும்; அவற்றுள்,

திருக்காளத்திநாதருலா வென்பது, திருக்காளத்தியிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபெருமான்மீது சேறைக்கவிராச பிள்ளை யென்னும் கவிஞர்பெருமான் இயற்றியது; இதில், ௫௱௮-கண்ணிகளுள்ளன.

பாட்டுடைத்தலைவராகிய திருக்காளத்திநாதருடைய பெருங்கருணைத்திறமும், இத்தலவிசேடமும், தீர்த்தவிசேடங்களும், இங்கேவழிபட்டுப் பேறுபெற்ற மெய்யன்பர்களுடைய அருமை பெருமைகளும், வேறுதலங்களின் விசேடங்களும், பழைய சிவபுராணங்களிலுள்ள

---

* பேதைமுதல் ஏழுபருவமாதர்களாவார்: பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்பவர்கள்.

† வீதியென்றது, இங்கே உருத்திரகணிகையர்வீதியை; [illegible]

விசேட சரித்திரங்களும், தேவார திருவாசகமுதலிய அருட்பாக்களி லுள்ள அருமைப்பிரயோகங்களும், பொருளை வருத்தமின்றி இனிது விளக்கும் பலவகையான மடக்கணிகள், சிலேடைகள், கேட்டோர் வியத்தற்குரிய தொனிகள் முதலியனவும், அக்காலத்தில் இத்தலத்தி லிருந்தமடங்கள் இன்னவென்பதும், இத்திருக்கோயிற்குரிய பலவகை யான திருத்தொண்டுசெய்துபோந்தவர்கள் இன்ன இன்னவகையா ரென்பதும், பிறவும் இந்நூலிற் காணலாகும்.

கிடைத்த கையெழுத்துப்பிரதிகளிற் பாடபேதங்கள் பலவாறு வேறுபட்டு மிகுதியாகக் காணப்பட்டமையின், அவற்றைத் தனியே தொகுத்துப் புலப்படுத்துப்படி சேர்ந்தது. இந்நூல் பதிப்பித்தான பின்பு கிடைத்த இரண்டு கையெழுத்துப்பிரதிகளிற் கண்ட வேறு பாடங்களுள் பொருட்சிறப்புள்ளவற்றிற்குமுன்னே * இவ்வடையா ளம் அமைக்கப்பட்டிருக்கிறது.

எனக்குத் தோற்றியவளவு ஏதோ ஒருவாறு குறித்திருக்கும் அரும்பதவுரையை அறிஞர்கள் க்ஷமித்து அங்கீகரிப்பார்களென்று நம்புகிறேன்; சிலகண்ணிகளின் கருத்து விளங்காமையால், அவற்றிற் குப் பொருளெழுதவில்லை. ௩௧-ஆம் கண்ணியிற் சிவபெருமான் இத் தலத்தில் ஆகாயவடிவாக எழுந்தருளியிருக்கின்றனரென்று கூறி யிருப்பதற்குத் தக்க ஆதாரம் கிடைக்கவில்லை.

கையெழுத்துப் பிரதிகளுள் ஒன்றன் தலைப்பில்மட்டும் இந்நூல் இரட்டையர்களியற்றியதென்று எழுதப்பட்டிருந்தது; சேறைக் கவி ராசபிள்ளை இயற்றியதாகத் தக்க ஆதாரங்கள் கிடைத்தமையாலும் அவரியற்றிய வேறு உலாக்களுக்கும் இதற்குமுள்ள (பிம்பப்பிரதிபிம் பம்போன்ற) நடையொற்றுமையாலும் இரட்டையர்களுடைய செய்யு ணடைக்கும் இதற்குமுள்ள நடைவேறுபாட்டினாலும் இஃது இவ ரியற்றியதென்றே நிச்சயிக்கலாயிற்று.

இந்நூல் ஸம்பந்தமாக அறியவேண்டியவற்றை அறிந்துகொள் ளுதற்குச் சிலவருடங்களுக்குமுன்னர்த் திருக்காளத்திக்குப் போ யிருந்தேன்; அப்போது அங்கே மானேசராக இருந்த ம-ா-ா-ஸ்ரீ, ஏ. எஸ். பொன்னுஸாமிஐயரவர்கள் வேண்டிய சகாயம் செய்தார்கள்.

இந்நூற் பரிசோதனை முதலியவற்றிற்கு உடனிருந்தவர்களுள், சென்னை நியூயிங்டன்ஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய ப்ரஹ்மஸ்ரீ திரு.

கிருஷ்ணையரவர்கள் மிக்க அன்புடன் செய்துவந்த பேருதவி மறக்கற்பாலதன்று.

## கிடைத்த கையெழுத்துப் பிரதிகள்.

திருக்கைலாய பரம்பரைத்

திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதி க

திருநெல்வேலி மேலை ரதவீதி,

ஸ்ரீ அம்பலவாண கவிராயரவர்கள் வீட்டு ... ,, க

மேலகரம்,

ஸ்ரீ சண்பகக் குற்றாலக்கவிராயரவர்கள் ... ... ,, க

சென்னை, சூளை,

ம-ா-ா-ஸ்ரீ அப்பன் செட்டியாரவர்கள் ... ... ,, க

மன்னார்கோயில் தாலூகா, நொச்சியூர்,

,, வைத்தியலிங்கசேர்வைகாரரவர்கள் வீட்டு ,, க

,, கனகசபைச்சேர்வைகாரரவர்கள் வீட்டு ,, க

சென்னை,

,, தோ. வே. திருநாகேசுவர முதலியாரவர்கள் * ,, க

,, முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் * ,, க

ஆகப் பிரதிகள்...அ

நொச்சியூர்ப்பிரதிகளிரண்டும், பின்னத்தூர், ப்ரஹ்மஸ்ரீ நாராயண சாமி ஐயரவர்களாற் கிடைத்தன.

* இந்த அடையாளமுள்ளவைகள் இந்நூலைப் பதிப்பித்தபின்பு கிடைத்த பிரதிகள்.

மேலேகாட்டிய உபகாரிகளுக்கு நான்செய்யும் கைம்மாறு யாதுளது; திருவருள் துணைசெய்யவேண்டும்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

# நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய சேறைக் கவிராசபிள்ளையென்பவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை; வீரைக்கவிராசபண்டிதர், செங்கோட்டைக்கவிராசபண்டாரமென்னும் பெயர்களை நோக்குங்கால், பண்டைக்காலத்திற் சிலருக்குக் கவிராசரென்றே இயற்பெயரிருந்ததாகத் தெரிகின்றது.

சேறைக்கவிராசபிள்ளை யென்று இவர்பெயர் வழங்குதலால், இவருடைய ஊர் சேறையென்று தெரிகின்றது; சேறையென்பது, சோழநாட்டிலுள்ளதும் தேவாரம்பெற்றதுமாகிய திருச்சேறையென்பதோ அல்லது சேற்றூரென்பதன் மரூஉவோ யாதும் தெரிந்திலது. இந்நாட்டிற் சேற்றூரென்றுபெயருள்ள ஊர்கள் பலவுள்ளன. இவர், ஒருசமயத்திற் பாண்டிநாட்டினரைநோக்கி,* 'இந்தத் தேசப் புலவர் மனத்துக்கிடியென வந்தேன்காண்' (௫) என்று கூறியிருத்தலின், பாண்டிநாட்டினரல்லரென்று கருதப்படுகிறார்.

இவர் சாதியாற் கருணீகர்; இதனை, 'கருணேசன் சேறைக் கவிராசராசன்' (௩) என்பதனாலுணர்க.

சைவசமயம் பூண்டொழுகியவர்; முருகக்கடவுளை உபாசித்து மந்திரசித்திபெற்றவர்.

தமிழ்லக்கண இலக்கிய நூல்களிலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் சிவபுராணங்களிலும் மிக்க பயிற்சியுள்ளவர். சொல்லினிமை பொருளினிமைவாய்ந்த அதிவிசித்திரகரமான செய்யுட்கள்செய்தலில் வல்லவர். இவருடையசெய்யுட்கள் செம்பாகமானவைகள். இவர் இன்னராதல் இவருடையநூல்களுள் ஏதேனும் ஒருபாகத்தைப் படித்தறியும் விவேகிகளுக்கு நன்கு புலப்படும்.

தமிழ்ப்புலவர்கள்பால் மிக்க வணக்கமுடையவர்; வாதுக்கு வந்தோர்களை வென்று அடக்கும் ஆற்றலுமுடையவர்; ௪, ௫.

செய்யுட்களை விரைந்துசெய்யும் ஆற்றலுடையவராயிருந்தமையின் ஆசுகவிராசரென்றும், அங்ஙனம்பாடும் புலவர்பலரினும் மேம்பட்டு விளங்கினமையின் ஆசுகவிராசராசரென்றும் ஆசுகவிராசசிங்கமென்றும், வண்ணம்பாடுதலில் மிக்க ஆற்றலுடையவராக இருந்தமையின் வண்ணக்களஞ்சியமென்றும் வழங்கப்பெறுவர். இவர் வண்ணம்பாடுதலில் மிக்க ஆற்றலுடையவரென்பதற்கு "சிலைக்காம னுடலெரிய" என்னும் திருவண்ணாமலையார் வண்ணத்தில் உ-ஆம் கலையிற் சிவஸ்தலப்பெயர்களை அடைமொழியின்றி அமைத்திருத்தலே போதிய சான்றாகவுள்ளது.

திருக்காளத்தியிலிருந்தவரும் செங்குந்தர்மரபினரும் சிவபத்திச்செல்வம் வாய்ந்தவருமாகிய வேங்கடராசமுதலியாரென்னும் பிரபுவின் அருமைப்புலவராகவிருந்து அவரால் அன்புடன் ஆதரிக்கப்பெற்று அந்தத்தலத்திற் பெரும்பாலுந்தங்கிக் காலங்கழித்தவர். அவர்பால் மிக்க நன்றியறிவுடை

---

* இந்தச்செய்யுளின் முழுப்பாகத்தையும் பின்னர்க்காட்டப்பட்டவற்றின் முழுப்பாகத்தையும் இவ்வரலாற்றின் பிற்பாகத்திற்காண்க.

யவர் ; 'தக்கிண கயிலையில்வாழ், செங்குந் தக்குல வேங்கட ராயன் றிருவா சற்புலவன்' (ரு) எனத்தம்மை இவர் புலப்படுத்தியிருத்தலால் இதனையுணர்க. திருக்காளத்திநாதருலாவைச் செய்வித்தவர் மேற்கூறிய பிரபுவாகவேயிருக்கவேண்டுமென்றும் இதனால் தெரிகிறது.

அந்தப் பிரபுவினாலும் பிற கொடையாளிகளாலும் பல்லக்குவரிசை முதலியனவும் மிக்க பரிசில்களும் பெற்றவர்.

பாண்டிநாட்டிலிருந்த சீவலிமாறருடைய பரம்பரையைச் சார்ந்தவரும் இராமபாண்டியரென்று பெயர்பெற்றவருமாகிய சிற்றரசரொருவரிடம்சென்று விரைவாகப்பாடும் தம்முடையஆற்றலைப் புலப்படுத்தி அவரை வியப்புறச்செய்து பலபரிசில்கள்பெற்றுமீண்டவர் ; ரு.

திருவண்ணாமலைநாதர்மீது வண்ணம்பாடிக்கொண்டு அரங்கேற்றுதற்காக அத்தலத்திற்கு இவர் பலசிறப்புடன் சென்றாரென்றும், அக்காலத்தில் அவ்வூரிலிருந்த உண்ணாமுலையெல்லப்பநயினாரென்னும் தமிழ்ப்புலவர் இவர் வரவைக்கண்டு ஒதுங்கி மறைந்தாரென்றும், அதுதெரிந்த பரமேசுவரப் புலவரென்பவர் அவரை அவமதித்துக்கூறினரென்றும் தெரிகின்றன.

அந்தகக்கவிவீரராகவமுதலியார், தாமியற்றிய சேயூர்முருகன்பிள்ளைத்தமிழில் (அம்புலி. ௧௦) 'தவிராத' என்னுஞ்செய்யுளில் இவர்செய்த சேயூர் முருகனுலாவைப் பாராட்டிக்கூறியிருத்தலால், இவருடைய காலம் அவருடையகாலத்திற்கு முந்தியதென்று தெரிகின்றது. தமிழ்நாவலர்சரிதையில் அம்முதலியாருடைய செய்யுட்களுக்கு முன்னே இவருடைய செய்யுட்கள் வைக்கப்பெற்றிருத்தலும் இதனை வலியுறுத்தும். தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் கவிஞர்பெருமானென்று புகழ்படைத்துவிளங்கிய அம்முதலியார் மேற்கூறியசெய்யுளில் திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தபுராணமாகிய இவற்றின்வரிசைகளில் இவரியற்றிய உலாவின்பெயரை வைத்திருத்தலன்றி, 'திருவுலாவைக்கற்றுருகலாம்' என்றும் அருமையாகப் பாராட்டிக்கூறியிருத்தல் இவருடைய வாக்கின் உயர்வையும் அதன் நடையின் இனிமையையும் அதிலமைந்துள்ள பத்திச்சுவையையும் விளங்கச்செய்கின்றது.

மேற்கூறிய சேயூர்முருகனுலாவில், 'சேறைக் கவிராசன், சொன்னவுலாப்படித்துச் சோதிபெறத் தாலாட்டி' (உ) என்றுகூறியிருத்தலையும், திருக்காளத்திநாதர் கட்டளைக்கலித்துறைமாலையில், "செவிராசியம்" என்னும் ௭௭-ம் செய்யுளில், 'புவிராச பாண்டியன் சித்தத்துக் கேற்பப் புகன்ற சித்ர, கவிராச ராச கயிலா புரேசநங் காளத்தியே' என்று துதித்திருத்தலையும் பிறசெய்யுட்களில் இங்ஙனங்கூறியிருத்தலையும் நோக்குகையில், தம்முடையவாக்கில் தம்முடைய பெயரையும் தம்முடையசெய்யுணயத்தையும் எந்தவகையாகவாவது எடுத்துக்காட்டும் ஒருவகைவழக்கம் இவருக்கிருந்ததென்று தெரிகின்றது.

திருவண்ணாமலைப் பரமேசுவரப்புலவர், உண்ணாமுலைஎல்லப்பநயினார் முதலியோர்கள் இவர்காலத்திருந்த புலவர்கள்.

திருக்காளத்திநாதருலா, திருக்காளத்திநாதர் கட்டளைக்கலித்துறைமாலை, சேயூர்முருகனுலா, திருவாட்போக்கிநாதருலா, திருவண்ணாமலையார்வண்ணம் ஆகிய இந்நூல்களும் சிலதனிப்பாடல்களும் இவராற்செய்யப்பெற்றனவென்று இப்பொழுது தெரிகின்றன.

திருக்காளத்திநாதருலாவில் ௭அ-ஆம் கண்ணிமுதலியவற்றிற்காலவிசேடப்பெயர்களும், அ௩ - ஆம் கண்ணிமுதலியவற்றில் பன்னிரண்டு இராசிப் பெயர்களும், ௯௦ - ஆம் கண்ணிமுதலியவற்றிற் பருத்திநூற் காரியப்பொருள்கள் பலவற்றின் பெயர்களும், உ௭௦ - ஆம் கண்ணிமுதலியவற்றிற் பலவ

கையான நீர்நிலைப்பெயர்களும் ௯௨-ஆம் கண்ணிமுதலியவற்றில் ஸ்தலப் பெயர்களும் தொனிக்கும்படி இவர்பாடியிருத்தலேயும், பின்னும் ஆங்காங்கு அமைத்துள்ள செம்பாகமான பலவகை அடிமடக்குகள், சிலேடைகள் முதலியவற்றையும், சிலேடைத்தருக்ஷங்களேயும் உற்றுநோக்குகையில், இவருடைய செய்யுள்நடை திருவானைக்காவுலாவுடையாராகிய காளமேகப்புலவருடைய அதிவிசித்திரகரமான செய்யுள்நடைபோல மதிக்கப்படுகின்றது.

இவ்வரலாறு, கர்ணபரம்பரைச்செய்தியாலும் சில பழையசெய்யுட்களாலும் தெரிந்து எழுதப்பெற்றது. அச்செய்யுட்கள் வருமாறு:—

சேயூர்முருகன்பிள்ளைத்தமிழ், அம்புலிப். ௯௦.

க. தவிராத வெவ்வினை தவிர்க்குமுரு காறுந்
தரித்தா றெழுத்தோதலாஞ்
சந்நிதிக் கருணகிரி நாதன் றிருப்புகழ்ச்
சந்தம் புகழ்ந்துய்யலாம்
புவிராசன் வளவன் கழுக்குன்றன் வளமைபுரி
புண்ணியந் தரிசிக்கலாம்
பொருசூர னைப்பொருங் கதைமுதற் கந்தப்
புராணக் கடற்காணலாங்
கவிராச னிப்பிரான் மிசைசெய்த திருவுலாக்
கவிவெள்ளை கற்றுருகலாங்
கவிவீர ராகவன் சொற்றபிள் ளைக்கவி
கலம்பகக் கவிவினவலா
மவிராட கக்கோயில் புக்குவிளை யாடலா
மம்புலீ யாடவாவே
யயிலவன் செய்கையின் மயிலவன் கந்தனுட
னம்புலீ யாடவாவே.

---

* சேயூர்முருகனுலா, கண்ணி, ௬௩௨ - ௬௩௬.

௨. செவிரா சியங்கடந்த சேறைக் - கவிராசன்
சொன்ன வுலாப்படித்துச் சோதிபெறத் தாலாட்டிக்
கன்ன லறிந்தந்திக் காப்பேற்றி - யன்னநடை
காட்டியிடை காட்டியுடை காட்டிவிழி காட்டிமொழி
காட்டியியல் காட்டிமயல் காட்டியே - நாட்டவரைப்
பூவரடி யாராக்கிப் புன்முறுவ லாலுருக்குந்
தேவ ரடியார் திறஞ்சூழ.

ஷை உலாச்சிறப்புப்பாயிரம்: வெண்பா.

௩. கொற்றவரெண் செய்யூர்க் குமர.........
கற்றவ ரெல்லாங் களிக்கவே - வெற்றிக்
கருணைசன் சேறைக் கவிராச ராசன்
......... .............சொன்ன வுலா.

---

* இவ்வுலாவை இச்சமயத்துத் தந்துதவியவர், ம-ா-ா-ஸ்ரீ, க. குப்பு சாமிமுதலியார், B. A.

## தமிழ் நாவலர் சரிதை :

**ஆசுகவிராசசிங்கம், கடிகையாரைப்பாடியது :** வெண்பா.

௪. செந்தமிழோர் தங்களிரு சீபாத தூளிபொர
வந்த புலவோர்த மார்பாணி - கந்த
னடிகையா ரப்பரவு மாசுகவி ராசன்
கடிகையார் கோலா கலன்.

**பாண்டியராசா ஆரென்று கேட்டபோது இவர் பாடியது:** விருத்தம்.

௫. தென்பா ராளு மறிவிற் குறுமுனி தெக்கிண கயிலையில்வாழ்
செங்குந் தக்குல வேங்கட ராயன் றிருவா சற்புலவ
னென்பேர் வண்ணக் கட்சிய தன்றி யெதிர்த்தவர் மார்பாணி
யிந்தத் தேசப் புலவர்ம னத்துக் கிடியென வந்தேன்கா
ணுன்பால் யான்வர வாசற் காரர்க் குத்தா ரம்பண்ணி
யுள்ளுக் கென்னை யழைப்பித் தாசி லுரைக்குங் கவிதைகள்கேட்
டென்பால் வரிசைகள் பரிசில்க ணல்கி யிரட்சித் திடவேணு
மிராமா சிவிலி மாறு பாண்டிய ராச வரோதயனே.

**திருவண்ணாமலையிற் பரமேசுவரப்புலவர் பாடியது :**

கட்டளைக்கலித்துறை.

௬. கண்ணார் மதிக்கும் கவிராச சிங்கங் கடந்துதிரு
வண்ணா மலையப்பர் மேல்வண்ணம் பாடிமுத் தாலத்திகொண்
டெண்ணா யிரமட வார்சூழப் பல்லக்கி லேறிவந்தா
னுண்ணா முலையெல்லன் மூலைக டோறு மொதுங்கினனே.

**பழைய தனிப்பாடல் :** வெண்பா.

எ. ஆறுமுக னாணை யவனடியார் தம்மாணை
யேறு மயிலாணை யென்னாணை - வீறுபுகழ்
தேறு கவிராச ராசன் றிருவாணை
யேறிய கொம்பா விறங்கு.

இந்தவெண்பா, நல்லபாம்புதீண்டப்பெற்று ஒருவர் மயங்கியபோது விஷவேகத்தை இறக்குதற்கு இவருடையமாணாக்கரொருவர் சொன்னதென்பது கர்ணபரம்பரைச்செய்தி.

[குறிப்பு: (க)—முருகாறு - திருமுருகாற்றுப்படை. வளவன்கழுக்குன்றன் - சேயூர்க்கோயிலிற் றிருப்பணிசெய்த ஒருபிரபு. திருவுலா - சேயூர் முருகனுலா. பிள்ளைக்கவி - சேயூர்முருகன் பிள்ளைத்தமிழ். கலம்பகம் - சேயூர் முருகன் கலம்பகம். செய்கை - செய்யூரென்பதன் மரூஉ; சேயூர்க்குச் செய்யூரென்றும் பெயருண்டு. (உ)—ராசியம் - இரகசியம். உலா-சேயூர்முருகனுலா. கன்னல்-நாழிகை. (ங)—கருணேசன்-கருணீகச்சாதியாருடையதலைவர். (௪)—கடிகையார்-கடிகைப்புலவர். (௫)—தக்கிணகயிலை-திருக்காளத்தி. வண்ணக்கட்சி-வண்ணக்களஞ்சியம்; கட்சி - கூடு. உத்தாரம் - கட்டளை; உலகவழக்கு. ஆசில் - விரைவில். (௬)—கண்ணார் - பகைவர். கடந்து - பகைவரை வென்று. உண்ணாமுலையெல்லன் - உண்ணாமுலையெல்லப்பநயினாரென்னும் புலவர்.

# திருக்காளத்தி நாதருலா ஆராய்ச்சி.

இத்தலத்திற்குரிய விசேடங்களைப் பலவகையாக இந்நூலுள் ஆசிரியர் அமைத்திருத்தல், மிகவும் இன்புறற்பாலது; ஒவ்வொன்றற்கும் பின்னுள்ள எண்களாற்சுட்டப்படும் கண்ணிகளைப் படித்தலால்விளங்கும்.

இத்தலமுள்ள நாடு, ஆற்றூர்வள நாடு. கண்ணி-௯௨, ௫௩௭.

**ஸ்தலவிநாயகர் :** அஞ்சத்திவிநாயகர்; இப்பெயர் ஐஞ்சத்தியென்றதன் மரூஉ; காப்பு, ௫௩௯.

## ஸ்வாமியின் திருநாமங்கள் :

ஸ்ரீகாளத்திநாதர்.—சிலந்தி காளனென்னும்பாம்பு யானை என்னும் இம்மூன்றாலும் வழிபடப் பெற்றவரென்பது இதன்பொருள்.

திருக்காளத்திநாதர். ௭௭, ௫௩௭.

அழைத்து வாழ்வித்தவர். ௭௯, ௨௪௧.

ஆயிரநாமத்தவர். ௩௫, ௨0௯.

ஆராவமுதர். ௭௯, ௨௮௩, ௨௯௫, ௫௫௮.

ஆல். ௫௫௭.

ஐந்துகொழுந்து. ௩0௭.

கணநாதர். ௨௭௫.

கரும்பு. ௨௮௪.

கல்லாலடிக்கரும்பு. ௨௨௧, ௨௭௯, ௩0௭.

கல்லாலடியார் (கல்லாலடி). ௫௮, ௯0, ௧௧0, ௩0௩, ௪00, ௪௨௯, ௪௪0, ௪௮௭, ௫௬௧, ௫௭௪.

கல்லாலின் கனி. ௨௩௮.

காபாலி. ௫௮, ௩௩௧.

காளத்தி. ௪௬.

காளத்தியானை. ௧௪௬, ௪௫௭, ௫௫௫.

சார்ந்தாரைக்காத்தவர். ௭௪, ௨0௩, ௨௩௯, ௫0௬, ௫௫௯.

சேர்ந்தார்க்கினியார். ௨0௩.

சோதிப்பெருந்தேவர். ௨0௫.

சோதிவிடங்கர். ௭௪, ௨0௫, ௩௭0, ௫௭௭.

தருமமுரைத்தவர். ௫0௬.

தென்கைலைநாயகர். ௧௧௫, ௫௩௬.

பச்சிமவாயிற்பரமர். ௯௫, ௭௬, ௪௯௧.

புலி. ௮௫, ௨0௬, ௪௬0.

மலைக்கொழுந்து. ௨0௭, ௩௧௯, ௫௫௩. செவ்வந்திப்புராணம், திருமலைச்சருக்கம், ௪௮, ௪௯-ஆம் பாடல்களைப்பார்க்க.

மாணிக்கச் சோதிமலை. ௨0௧.

மும்முடிச்சோழபுரமூர்த்தி. ௬௪.

மெய்த்தேவர். ௭௪.

யானைத்துணை. ௨0௪.

வரந்தருவார். ௪௧௧, ௫௪௧.

## அம்பிகையின் திருநாமங்கள் :

ஞானப்பூங்கோதை. இப்பெயர் ஞானப்பூவெனவும் ஞானமெனவும் வழங்கும். ௭௩, ௧௧௧, ௨௩௭, ௫௬௬.

வண்டார்குழலாள். ௫௯, ௫௬௭.

**ஸ்வாமியின்பீடம் :** ஆகமபீடம்.

**தக்ஷிணாமூர்த்தியின்பீடம் :** வைதிகபீடமெனவும் தென்பீடமெனவும் வழங்கும். ௧௩௫.

## ஸ்தலத்தின் திருநாமங்கள்.

கண்ணப்புரம். ௯௫.

கயிலை. ௨௫0, ௩௧௯, ௪௮0.

திருக்காளத்தி. ௪௬.

தென்கயிலை=தக்ஷிண கைலாஸம். ௯, ௧௧௫, ௨௯௫.

மும்முடிச்சோழபுரம். ௬௪.

## தீர்த்தங்கள் :

பொன்முகரியாறு. ௧௫-௨௩, ௧௩௪,

கசக, உருஅ, ஙOஅ, சகூஉ, ருஙசு, ருசுங.

அரகரதீர்த்தம். ஙரு.

உருத்திரதீர்த்தம். ஙஎ.

மகாகாளிதீர்த்தம். ஙசு.

மகாமோகினிதீர்த்தம். ஙசு.

மணிகங்கை அல்லது மணிகர்ணிகை. ஙஅ.

மாயூரச்சுனை. ஙசு.

மார்க்கண்டதீர்த்தம். ஙசு.

வச்சிரதீர்த்தம். ஙச.

## விருக்ஷம் :

அகண்டவில்வம். கOக.

கல்லால். இது சிலைவடம், கனகக் கல்லாலெனவும் வழங்கும். ருஅ, ககO, உஉக, உஙஅ, உஎகூ, ஙOங, ஙOஎ, சOO, சஉகூ, சசO, சஅஎ, ருகக, ருசக, ருருஎ, ருஎச.

## மலைகள் :

அகத்தியமலை, கங.

துர்க்கைமலை. ஙச.

தென்கைலைமலை. கூ, ககரு, கககூ, கசசு, ருஙசு.

நீலமலை. ஙஎ.

## வழிபட்டுப்பேறுபெற்றோர் :

அக்கினிப்பிரமன். உஎ.

அரிச்சந்திரன். சருங.

அருச்சுனன். சருங.

ஆதிசேடன். உஙச, ருஎசு.

இந்திரன். உசு.

கண்ணப்பர். சஎ - ருஉ, கஉO, கசO, கஅசு, உOச, உஉங, உஉசு, உசஎ, உருச, உசுங, ஙருO, ஙகூரு, சOஅ, சஅச, ருஉசு, ருசுரு, ருஎசு.

கன்னியரிருவர். ருசு, கஉக, கஅஅ, ஙசுகூ, ருஉக, ருஎசு.

காளனென்னும்பாம்பு. சக - சசு, கஉக, கசகூ, கஅரு, உஙசு, உசரு, உகூஉ, ஙகூங, ஙகூசு, சஅO, சஅஎ, ருஉச.

கௌசிகர். உஅ.

சனகாதிகள். உஅ, ககக.

சித்திரசேனன். உகூ, ருஎரு.

சிலந்தி=சிலம்பி. ஙகூ - சO, கஙக, கஅரு, ஙOகூ, ஙகூஎ, சஅங, ருஉசு, ருஎசு.

சிலந்தி முதலிய எண்மர். ஙOகூ.

சிவகோசரியார்=சிவகோசன். சகூ - ருஉ, கஅஎ, உOங, உசகூ, ருஎரு.

சுந்தரபாண்டியன். சுரு.

சோழர்மூவர். சுங, ககூO.

திருமால். கக, கஉஉ, ருஙஎ.

துர்க்கை. ஙச.

நக்கீரர். ருச, கஅஎ, உசஅ, சஅகூ, ருஉங, ருசுச, ருஎசு.

நீலி. உசு.

பகீரதன். சருங.

பிரமன். கஎ - உங, சகூO, ருஙஎ.

மகாகாளி. ஙசு.

மணிமான். உகூ, ருஎரு.

முசுகுந்தன். உசு.

மூகனொருவன். ருசுசு.

யாதவன். சுசு - எஉ, ககூக.

யானை. சக - சசு, கஉக, கசO, கஅசு, உஙசு, உசசு, ஙகூச, ருகூ, ருஉஉ, ருஎரு.

வசிட்டர். உஅ. ருசுச.

ஸரஸ்வதிதேவி. உச, ஙசுஅ, ருஙசு,

---

இத்தலத்திற் பண்டைக்காலத் திருந்த மடங்கள் இன்னவென்பதும் திருக்கோயிலிற்றொண்டு பூண்டொழுகியவர்கள் இன்ன இன்ன வகையாரென்பதும் இன்ன இன்ன செயல் விசேடமென்பதும் இந்நூலால் விளங்குகின்றன; அவை வருமாறு :—

## மடங்கள்:

பதினெண்மடம். ககூச.

பரத்துவாசாச்சிரமம். ஙஎ.

மணிகங்கை மடம். ககூங.

வடமடம். ககூங.

## திருத்தொண்டு பூண்டொழுகியவர்கள்:

ஆறுகொத்தார். ககூச.

எட்டுக்கொத்து இளையநாயக்கர்கள். ககூஎ.

கோயிற் கணக்கர். ககூசு.

சிட்டயராமன். ககூஉ.

பத்துக்குடி வேதபாரகர். கசுரு.
மந்திரவோலைக்கணக்கர். கசுஎ.

### விசேடச் செயல்கள்:

தென்கைலையை வலம்வருதல். ரு௩௪, ருஉ௮.

மேற்குச்சாளரவாயிலின் வழியே திருக்காளத்திநாதனைத் தரிசித்தல். ருஉ௪.

---

இத்தலத்திற்குரிய ஆகமமும் தேவார முதலியனவும் வருமாறு:—

### ஆகமம்:

காரணம்.—கநக, சகூரு-ஆம் கண்ணிகளைப் பார்க்க.

### தேவாரம்:

#### திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

சந்தமாரகிலொடு—கொல்லி.
வானவர்கடானவர்கள்—சாதாரி.

#### திருநாவுக்கரசு நாயனார்.

விற்றூணொன் றில்லாத—திருத்தாண்டகம்.

#### சுந்தரமூர்த்தி நாயனார்.

செண்டாடும் விடையாய்—நட்டராகம்.

### கக-ஆம் திருமுறை.

#### நக்கீர தேவநாயனார்.

கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி.
போற்றிக்கலிவெண்பா.
கண்ணப்பதேவர் திருமறம்.

#### கல்லாட தேவநாயனார்.

கண்ணப்பதேவர் திருமறம்.

### புராணங்கள்:

#### வடமொழி.

தக்ஷிணகைலாஸ மாகாத்மிய முதலாகிய புராணங்கள் - எ.

#### தெலுங்கு.

தூர்ஜடிகவி இயற்றிய புராணம்-க.
[இதன் மொழிபெயர்ப்பே தமிழ்ச் சீகாளத்திபுராணம்.]

#### தமிழ்.

திருக்காளத்திபுராணம் - க.
சீகாளத்திபுராணம் - க.

### தமிழ்ப் பிரபந்தங்கள்:

திருக்காளத்தி நாதர் கட்டளைக் கலித்துறைமாலை, செய்யுள் - க00.

திருக்காளத்தி நாதர் கட்டளைக் கலிப்பா - உ0.

திருக்காளத்தி நாதர் பதிகம் - க.

வடமொழியில் இத்தலத்திற்கேயுரிய ஸஹஸ்ர நாமமும் பலவகை ஸ்துதிகளும், தமிழிற் பல தனிப்பாடல்களும் உள்ளன.

விசாரித்துப் பார்த்ததில் இப்பொழுதுதெரிந்தவை இவ்வளவே.

வடமொழிநூல் தமிழ்நூல்களிற் கூறப்பெற்றுள்ள திருக்காளத்தியின் விசேடங்கள் இன்னும் எவ்வளவோ பற்பல இருப்பினும் இவ்வுலாவில் வந்துள்ளவற்றைமட்டும் விளக்குதற்பொருட்டே சுருக்கமாக இங்ஙனம் தெரிவிக்கலாயிற்று.

திருக்காளத்திநாதர் துணை.

கணபதிதுணை.

# திருக்காளத்தி நாதருலா.

## காப்பு.

### நேரிசைவெண்பா.

காருலா வுஞ்சோலைக் காளத்தி யாள்வார்க்குச்
சீருலா விண்ணப்பஞ் செய்யவே - பாரில்
விளங்கருளஞ் சந்தியான் வேழமுக மானான்
களங்கருளஞ் சந்தியான் காப்பு.

## நூல்.

க. சீர்பூண்ட ஞானச் சிறப்பிற் பராபரமா
யார்பூண்ட கொள்கைக்கு மாதியா - யேர்பூண்ட

உ. மூலமாய் மூலத்தின் முப்பொருளா யப்பாலைக்
கோலமாய்க் கோலக் குணக்குன்றாய்க் - காலமாய்ச்

௩. சண்டமா யங்கடந்து தன்வேலை யைந்தியற்றப்
பிண்டமா யாட்டுவிக்கும் பேராள - னண்டங்க

### தலவிசேடம்.

௪. ளாணியா கச்சமைத்த வன்றே தனக்கமைத்த
காணியா குந்தென் கயிலாயன் - பேணி

௫. வடகயிலா யத்தொருநாள் வானோ ரயன்மா
லடகயிலா யத்தோ ரவைக்கே - புடையிருந்த

௬. மாதேவி நின்றுதனை வாழ்த்தியே நின்பதிக
ளோதேது பாரி லெனக்கேட்க - மேதினிமே

௭. லாயிரத்தெட் டுண்டுபதி யாய்ந்தாய்ந் தவற்றெடுத்த
நாயகமா கும்பதிக ளைந்தவற்று - ளீயெம்மைக்

௮. கூடிவிளை யாடுவது கோலவட காசியிலே
யாடல் புரிவதுபொன் னம்பலத்தே - நீடுமுது

௯. குன்றிற் குலாவல் குடும்பத் துடனிருக்கை
தென்றிக் கயிலையிலே சேயிழையா - யென்றலுமே

க0. வேத வியாதன் விடைகொண்டு காசிபுகப்
போதன் முதிய பொருப்பேற - மாதலத்தோர்

கக. மன்றுதொழத் தன்னெதிரே மாவிரண்டு யோசனையி
னின்றுதொழுங் கல்லாலி னீழலான் - மன்றலுமை

கஉ. யம்மை மணத்தி னருள்கொண்டு தெற்கில்வருஞ்
செம்மை முனியயனைச் சென்றேத்தி - யிம்மை

கங. யகத்தியமாக் குன்றி லமைத்த நதியாய்ப்
பகுத்தபெருங் கங்கையிலோர் பங்காய்த் - தொகுத்த

கச. மருவா ரிருகரையு மாகடலின் மட்டாய்த்
திருவார் சிவாலயங்கள் செய்தே - சுரர்முனிவர்

கரு. சீலத் தவம்புரியச் செம்பொன் கொழித்துநடந்
தாலிக்கும் பொன்முகரி யாற்றினான் - பாலர்

கசு. சதுரா னனற்குமொழித் தையலுக்கு மூன்று
பதினா யிரர்பிறந்தேழ் பாரு - மதிரப்

கஎ. பரதாரங் கொண்டரக்கர் பல்கோடி நல்கி
விரதா திகளழிக்க விண்ணோர் - கருதிவிதி

கஅ. யானோனைக் கண்டுரைக்க வாங்கவனுந் தன்னவரைத்
தானோர் மகவீன்று சாவென்னப் - போனோன்

ககூ. கடிந்தவரைக் கொல்லத்தன் காளையர்க ளெல்லா
மடிந்தபம்ம கத்தி வரலும் - படிந்தரனைப்

உ0. பூசித்தா லன்றியிது போகாதென் றஞ்செழுத்தும்
பேசித் தவஞ்செய் பிரமற்கா - மாசி

உக. வரமகத்திற் றோன்றியே மற்றவனைச் சூழ்ந்த
பிரமகத்தி யைப்போக்கப் பின்னுந் - திரமகத்திற்

உஉ. பொன்முகரி யாடியவன் புத்திரன்வேண் டிப்போற்ற
நன்மகவை யீந்தருந்த நாளிலே - நின்முகரி

உங. யாடிவலஞ் செய்தோ ரனைவர்க்கு மைந்தர்களு
நாடியது நல்கென்ன நல்கினோ - னீடுதவப்

உச. பாங்கலனோ டோவாது பாடி யவன்சபிக்க
மூங்கைவடி வாய்வெண் முளரியா - னீங்கிறைஞ்சத்

உரு. தாக்குகொடுஞ் சாபந் தவிர்த்துச் சகலகலை
வாக்குவி யாக வரந்தந்தோன் - கோக்குலிசத்

உசு. திந்திரன்பூ சித்தருளு மெம்பிரா னீலையெனுந்
தந்திரமா சத்திதொழுந் தம்பிரா - னந்தமுசு

உஎ. குந்தன் பணிவான் குளிரக் கினிப்பிரபன்
வந்தன் புடனே வழிபட்டோன் - சந்தன்

௨௮. வசிட்டன் கவுசிகன்முன் வாசவனை வைத
விசிட்டன் சனகாதி மேலோர் - கசட்டறிவு

௨௯. சென்றமணி மான்வீணைச் சித்திரசே னன்பணிவான்
குன்றமணி மாசித்தி கூட்டுவோன் - கன்றையூ

௩0. ராளுரி லேபுவியா யானைக்கா விற்புனலாய்ச்
சீரூ ரருணையிலே செந்தீயாய்ப் - பேரூரு

௩௧. மேகாம் பரத்தி லியங்கொலியாய்த் தன்னூரி
லாகாய மாய்நிற்கு மாடலான் - மாகாயம்

௩௨. பொன்னுக்குந் தன்னூற்றிற் பொன்றிற் பரமுத்தி
யின்னார்க்கென் னும மினிதளிப்போன் - முன்னாளிற்

௩௩. கல்லென்ற தாருகனைக் காளி தனைவகுத்துக்
கொல்லென்று விட்டான் குழையிட்டான் - வல்லியிடைத்

௩௪. துற்கை யிருந்து தொழுமலையா னிந்திரனார்
செற்குலிசத் தாற்கண்ட தீர்த்தத்தா - னிற்கு

௩௫. மரகதீர்த் தத்தி லமர்ந்தருள்வான் பேரா
யிரமுடையன் பொற்கோயி லீசன் - பரமளிக்கு

௩௬. மார்க்கண்டன் மாகாளி மாமோ கினித்தடத்தான்
சேர்க்கு மயூரத் திருச்சுனையா - னார்க்கு

௩௭. முருத்திரதீர்த் தத்தா னுயர்நீல வெற்பான்
பரத்துவச னாச்சிரமப் பாங்கான் - கருத்தொலைக்கு

௩௮. மென்மணிகங் கைத்தடத்தா னீங்கிவையெல் லாஞ்சூழ்ந்த
தன்மலையைத் தான்சூழுந் தன்மையான் - கன்மமற

௩௯. நெஞ்சிலந்தி வண்ணனே நித்தா வெனப்போற்றிச்
செஞ்சிலந்தி நூலினாற் செய்கோயில் - பஞ்சிலங்கு

௪0. தீபம் படவதுதன் சீவன் விடத்தோன்றி
நீபங் கயத்தாளி னில்லென்றோன் - கோபக்

௪௧. கடுவரிக்கா லன்மணியைக் கல்லென்று தள்ளித்
தடமதக்கைந் நீராட்டித் தந்தி - யிடுமலரைச்

௪௨. செற்றையெனப் பாம்பிகழச் செய்ந்நாளின் மற்றிரண்டு
மொற்றை யொருநா ளுவாவரலும் - புற்றரவ

௪௩. மூக்கிற் புகுந்து முடிகுடைய வெய்யவிடந்
தாக்கித் தலைமண்டை தான்கொண்டு - மாக்கிரியை

௪௪. முட்டிநா கப்பெட்டி முத்துமா ணிக்கத்தின்
பெட்டிபோற் கும்பம் பிளந்திரண்டும் - பட்டளவிற்

௪௫. கைந்நாகம் பைந்நாக கங்கணம்பூ ணப்பொருமப்
பைந்நாகங் கைந்நாகப் பட்டுடுக்க - முன்னாகித்

# திருக்காளத்தி நாதருலா.

௪௬. தாளிற் கலந்தவற்றாற் றன்பேருங் கொண்டோருங்
காளத்தி யூராகக் கற்பித்தோ - னீளத்

௪௭. திருவார் சடையிற் செருப்புக்கா னீட்டி
யருவாது வாய்நீர்கொண் டாட்டி - மருவாரும்

௪௮. பச்சிலையைச் சூட்டிப் பசித்ததெனச் சீராட்டி
யெச்சி லிறைச்சி யினிதூட்டி - வைச்சிருந்த

௪௯. சீரன்ப னன்பைச் சிவகோச னேமறைந்து
பாரொன் றிருத்தியொரு பார்வைக்கே - சோரிவிடச்

௫௦. சென்றடியான் கண்டு தியங்கி மயங்கிமருந்
தொன்றிலுமா றுமலுபாயம்போய் - நின்றிடந்து

௫௧. தூயவிழி யப்பியிடச் சோரிபோய் மற்றைவிழி
பாய வவனுங்கண் பாய்ச்சாமுன் - வாய்திறந்து

௫௨. கண்ணப்பா வென்றுருகிக் கண்டமறை யோனுடனே
வண்ணப்பா தங்கொடுத்து வாழ்வித்தோ - னண்ணிக்

௫௩. கயிலை மலைபாதி காளத்தி பாதி
பயிலுமறை நூறெரிந்து பாடிச் - சயிலமிசை

௫௪. யந்தாதி கீர னருளத் திருமேனி
யிந்தாதி யாக மெனத்தந்தோ - னந்தாத

௫௫. பாண்டிவள நாட்டிலு பாவலனைப் போலவே
யீண்டி யிருங்கதிமை யெய்தவே - வேண்டி

௫௬. வருப்புண்ட ரீகவிழி மானுனைத் தாளி
லிரும்புண்ட நீராக்கு மெங்கோன் - சுரும்புண்ட

௫௭. பொன்னின் சரணப் புகலியார் வேந்தனுக்குச்
சின்னங் கொடுத்த சிவபிரான் - வன்னமறைத்

௫௮. தேவார வாகீசர் செம்பொற்கல் லாலடியிற்
காவாலி யென்ற கணநாத - னுவலான்

௫௯. கொண்டாட வண்டார் குழலா ருடன்புகுந்து
செண்டா டியவிடையான் சீருடையான் - பண்டைநூற்

௬௦. பண்ணை மறைத்தோதப் பாகவத னம்மானைக்
கண்ணை மறைத்தோதக் கண்ணீந்தோன் - விண்ணவரும்

௬௧. பூசச்சூ ழூந்திருமேற் பூச்சினன் பூசலிடு
மோசைக் கலிங்க னுயிருண்டோன் - வாசவனூர்

௬௨. பொன்னுலகைப் பூஞ்சோலை பூவுலக மாக்கவே
மன்னிவள ராற்றார் வளநாடன் - முன்னே

௬௩. மதிவிக்ர மச்சோழன் வண்குலோத் துங்கன்
றுதிபெற்ற ராசேந்த்ர சோழன் - கதிபெற்ற

சுச. செம்மையர்க ளாகத் திருப்பணிக ளாற்பணியு
மும்முடிச் சோழபுர மூர்த்தியான் - மெய்ம்மைக்

சுரு. கனசுந் தரமாறன் கண்டமணி வாய்தற்
புனிதன்கண் ணப்ப புரத்தா - னனகனணி

சுசு. யாதவற்குத் தால மிடுவாளைப் புல்கிநீ
போதியெனப் போதுபோய்ப் போந்தானை - யாதவனுஞ்

சுஎ. சீரளகங் கொய்யத் திரும்பிவந்து கைவாளைத்
தாரளகங் கூடத் தடவியே - பேரவென

சுஅ. வந்தானைக் கூந்தல் வருவித்தா ராரென்னத்
தந்தாரைச் சொல்லவிறை தாள்போற்றி - யெந்தாய்

சுகூ. தலமே தெனக்கயிலைச் சங்கமனு முன்னை
நலமேவப் பண்ண நடந்தே - முலகி

எ0. விரும்பெல்லாங் கூட்டென் றிரதவா தஞ்செய்
தரும்பொ னளகேச னுக்கித் - திரும்பவுந்தன்

எக. கோபுரங்கண் மண்டபங்கள் கோயில் வலமேறு
மாபுரங்கொள் வீதி மணித்தேர்கள் - சோபனங்க

எஉ. ளாகத் திருப்பணிகொண் டந்தத்தி லேயவனை
யோகக் கதவுதிறந் துட்கொண்டோன் - பாகத்து

எ௩. நாலெட் டறம்வளர்க்கு ஞானப்பூங் கோதையிடு
மாலைக்கு வாய்த்த மணவாளன் - சூலத்தன்

எச. மெய்த்தேவன் சோதி விடங்க னிருநான்கு
கைத்தேவன் சார்ந்தாரைக் காத்தபிரான் - மொய்த்தேறு

எரு. நாகநில யத்திமையோர் நாயகன் மாவிடப
வாகன தேவன் மகதேவன் - சேகரித்த

எசு. பச்சிம வாயிற் பரமனு ராவமுதன்
மெச்சி யழைத்துவாழ் வித்தருள்வோ - னச்சன்

எஎ. கயிலாய மேவினன் காளத்தி யாள்வா
னுயர்திருக்கா ளத்தி யுடையான் - பயனறிந்து

எஅ. சொல்வார்க் கணுவன் றுடியன் கலைகாட்டான்
மல்வாய்த்த பேய்க்கணத்தான் மாத்திரையா - னெல்லைக்

எகூ. கடிகையா னண்பகலான் காலையுச்சி வைத்தா
னடியிரவன் செவ்வந்தி நாத - னெடிய

அ0. வுருத்திதியன் வார னொருவனன்பு காணத்
திருத்திய னக்கத் திரத்தன் - மருத்தடைத்து

அக. வைத்தமக யோகன் கரணன் மறமிகுத்துப்
பத்திபுரி யோனாயுள்ளான் பஞ்சாங்கன் - சத்தியெனு

# திருக்காளத்தி நாதருலா.

௮௨. மாத னுவாவருடன் வானுகத்தன் கற்பத்தன
தாதுண் சடைச்சுரும்பர்ச் சங்காரன் - போதுநீர்

௮௩. வைகைக் கெதிரே வருமேடன் சைவத்தார்க்
குய்கை மறையோ ருபரிடவன் - செய்கை

௮௪. யிதமிதுநந் தொண்டற் கெனத்தூது சென்றோன்
கதிரொளிவீ சுங்கற் கடக - னுதயகலைச்

௮௫. சிங்கப் புலியன் சிலர்க்கன் னியனானோன்
சொங்கொண்ட சங்கத் துலாத்தினா - னங்கை

௮௬. விரிச்சிகத்தா ராதிப்பான் வீணைத் தனுசன்
கரத்திலிசை பாய்மகரக் காதான் - புரத்தகையன்

௮௭. விற்சாத கும்பன் விதிக்குமீ னங்கெடுத்தோ
னெற்சாம கீத விராசியான் - பொற்சாயற்

௮௮. கையே றியதலையான் கண்ணே றியநுதலான்
மெய்யே றியநாவான் மேற்காலான் - செய்யார்

௮௯. திருமுல்லை வாயான் சிறந்தகுட மூக்கான்
கருமங்கு மஞ்சைக் களத்தா - னருமந்த

௯0. பச்சை வடத்தான் பலகலைமேற் கட்டியா
னச்சிறுபா கைக்குள்ளே யாட்கொண்டோ - னச்சரவப்

௯௧. பேரணையான் பாகன் பெருங்காழிச் சட்டையான்
பாரியகச் சூரான் பவந்தடுப்பான் - சீரநறுந்

௯௨. துப்பட்டி யாட்டினான் துண்டப்புள் பூசித்தான்
முப்பத் திரண்டறமு முட்டாதா - னெப்பொழுதுந்

௯௩. கோவணத்தான் போர்வையான் கோயிலிலே தேவொலா
மேவி விளைத்தபரி வேட்டியா - னேவருக்கு

௯௪. மந்திரவஞ் சக்கரத்தான் மாற்கருளஞ் சக்கரத்தான்
றந்திரவீ ணைக்கனகஞ் சக்கரத்தான் - முந்திவருங்

௯௫ காலகா லன்பலநூல் காட்டினான் காட்டினா
னாலகா லன்பழசை யாட்டினான் - கோலநான்

௯௬. மாடன்மா டன்மதனை மாட்டினான் மாட்டினான்
வேடன்வே டன்முயலை வீட்டினான் - மூடர்களைச்

௯௭. சோதியான் சோதியான் றோலைத்தோ லாக்கினா
னாதியான் மாலைமா லாக்கினான் - பாதிதுகி

௯௮. ராகத்தா னாகத்தா னம்பினா னம்பினா
னாகத்தா னாகத்தா னம்பினான் - சேகில்

௯௯. கெழுமிவள ராகாச கேசன் மகேசன்
பழகி யறிபாசன் பாச - னழகார்

௧௦௦. நகுவெண் டலையனா னந்த னனந்தன்
றகுசெங் கனற்சந்தன் சந்த-னகிலங்

௧௦௧. கடிவில்லன் வில்லன் கதனல்ல னல்லன்
வடிவங் குழைவல்லன் வல்ல - னடியார்

௧௦௨. பணியும் பணியான் பணியும் பணியா
னணியு மணியா னணியா - னணிய

௧௦௩. மலையான் மலையான் மலையா னிலவின்
கலையான் கலையான் கலையான் - புலையகலுங்

௧௦௪. கேதாரன் கொக்கினிற கேதாரன் மூவிரட்டி
யாதார னெவ்வுயிர்க்கு மாதாரன் - வேதா

௧௦௫. மதித்தவளத் தண்ணா மலையான் கனலா
மதித்தவளத் தண்ணா மலையான் - விதித்ததிருக்

௧௦௬. கச்சாலை யானாடுங் கம்பத்தா னாடுதூர
கச்சாலை யானாடுங் கம்பத்தான் - விச்சரன்

௧௦௭. திருப்பாசை யானடங்குஞ் சித்தான் பவுரி
திருப்பாசை யானடங்குஞ் சித்தான் - றருப்போ

௧௦௮. விரங்குகயி லாயமலை யேற்றான் பலபு
விரங்குகயி லாயமலை யேற்றான் - மருங்கு

௧௦௯. தரவாத்தி னான்கடுக்கைத் தாரான் பிறவித்
தரவாத்தி னான்கடுக்கைத் தாரான் - விரவியபொற்

௧௧௦. கல்லா லடியான் கடாவினான் போர்வென்றான்
கல்லா லடியான் கடாவினா - னல்லாவி

௧௧௧. னால்வர்க்கும் போதித்தான் ஞானத்தின் பாகத்தான்
மால்வர்க்கஞ் சோதித்தான் மாயத்தா - னால்வர்க்க

௧௧௨. மேலானான் மேலானோர் வீடானான் வீடாதோர்
பாலானா னென்னாவின் பாலானான் - வாலாருந்

௧௧௩. தும்பையன் சண்பையன் சுந்தரன் சந்தரன்
சம்புவண் டன்சிவன் சங்கரன் - சிம்புளன்

௧௧௪. வானனிலந் தீநனிலம் வாரியெனா மைந்தொகைதா
னானவன் பேதமு மானவன் - மீனவன்

௧௧௫. பற்கன் விசிட்டன் பரம பதமென்னுந்
தெற்கண் கயிலைச் செகநாதன் - முற்கோலி

௧௧௬. வேதப் பெருமான் விதித்த பெருமாசி
மாதத் திருநாளின் மற்றொருநா - ளாதி

௧௧௭. பூரண பரஞ்சோதி பொன்மண் டபத்தே
பூரணகலை வீற்றிருந்து முன்னாட் - பொருளுதவத்

ககஅ. திண்காப் பணிகரத்திற் சிந்தா மணிகளுமிழ்
வண்காப் பணிந்தருளி மற்றைநா - ளொண்கதிரோன்

கககூ. றென்கயிலா யம்பணிந்து செல்வான் வடவெள்ளிப்
பொன்கயிலா யப்பணியப் போனதற்பி - னன்கருணைக்

கஉ0. கள்ளவிழிக் கண்மணிதான் கண்ணப்பன் கண்மணிக்கா
வுள்ளொதுங்கி மேல்வந் துதித்ததெனை - நள்ளருளின்

கஉக. கோலத்தி லேகலந்த கோளரவி னுலமென
நீலக் கரிமதத்தி னீரென்னப் - பாலடைந்தார்

கஉஉ. துன்றளக மென்னத் தொழுதெதிரோ கோடேறி
நின்ற முராரி நிழலென்னச் - சென்றுவளை

கஉங. முன்கையபி ராம முளரிக் கலங்கரித்த
மென்கடக நீலமணி விம்பமெனத் - தன்களங்கந்

கஉச. திங்கள் சொரிந்ததெனச் சித்தசவே ளன்றெரியப்
பொங்குவிழி யின்னும் புகைந்ததென - வங்குரிக்க

கஉரு. வெங்கோபங் கொண்டெழுந்த வீரன் கருவென்னச்
செங்கோ கனகத்துத் தேனென்னத் - துங்கத்

கஉசு. திருவிற் குனித்துச் செருமுகத்தே வாங்கும்
புருவத் திடைநாண் புரளக் - கரியகணை

கஉஎ. வைத்ததெனக் காமன் வடிவழகை வாங்கிவைத்த
சித்ரமெனக் கங்கை செயலெல்லா - மெத்தெனவே

கஉஅ. யொற்றிருந்து கேட்கு முமையென்னத் தேவருடன்
மற்றவரைக் காத்த மறுவென்ன - நெற்றித்

கஉகூ. திலகமுற நீலத் திருச்சாந்து சாத்தி
யலகிலணி பூண்ட வழகா - யுலக

கங0. மொருமூன்று நான்மறையு மும்பர்களும் போற்றத்
திருவீதி போந்து திரும்பி - யருளியபின்

கஙக. பண்பட்ட நூற்சிலந்தி பத்திமையா லுண்மகிழ
வெண்பட்டு நூலாடை மேற்சாத்திக் - கண்பனிப்பக்

கஙஉ. கற்பூரஞ் சாத்திக் கலவைகுளி ரச்சாத்திச்
சொற்பூந் தவளத் தொடைசாத்தி - நற்புடையில்

கஙங. வெண்சா மரையிரட்ட வேயுறுதோ ளாற்பரித்துத்
தண்சாய லுமைகளிர் சங்கமாய்ப் - பண்சாரச்

கஙச. செந்தீபக் கஞ்சந் திரண்டலரப் பொன்முகரி
யிந்தீ வரமுண் டிளந்தென்றல் - வந்துலவத்

கஙரு. திங்க ணிலாவெறிப்பத் தென்பீட முன்றிலிலே
யங்க ணுலாப்போந் தருளியபி - னெங்கள்பெருஞ்

௧௩௬. சைவ மறையோர் சதுமறையின் காரணத்துத்
தெய்வமகா பூசை செலுத்துதலுங் - கையி

௧௩௭. லரும்பள்ளி வேளைய்ய வன்றவனைப் பாரா
வரும்பள்ளி வாச மணுகி - விரும்பி

௧௩௮. யகிலாண்ட மீன்றாளை யன்றிரவிற் கூடி
யகிலாண்ட பூண்முலைப்போ ராடி - மிகவுறங்கிச்

௧௩௯. செங்கதிரோன் கைமலரச் செந்தா மரைமலர
மங்கையுடன் செங்கண் மலர்ந்தருளிக் - கங்கைநீர்

௧௪0. கண்ணப்பன் வாய்நீர் கரியுமிழ்நீர் கண்ணப்பன்
வண்ணச் செருப்பிருந்த வார்சடைமே - லெண்ணத்திற்

௧௪௧. புக்கார் பவங்கடியும் பொன்முகரி நீராடி
மிக்கான பூசை விதிகொண்டு - திக்காடை

௧௪௨. மண்டுகரி யேற மதவாடை கொம்புகொளப்
புண்டரிக வாடை பொறிதாக்கக் - கண்டிகழா

௧௪௩. நீவிக் கலைசாத்தி நீடலையி லேழுலகைப்
பூவிட்ட கச்சுப் புறத்தார்த்து - மூவுருவு

௧௪௪. மொன்றாதல் காட்டு முபவீத மார்பணிந்து
பொன்றாத தொல்லைப் பொருளெல்லாஞ் - சென்று

௧௪௫. முடியு மிடத்தே முடிபுனைந்து சேணார்
சடையு மிளம்பிறையுந் தாழப் - பிடியிடஞ்சே

௧௪௬. ரிக்கயிலைக் காளத்தி யானைக் கியலோடை
தக்கதெனப் பட்டந் தரித்தருளி - நக்கநக்குத்

௧௪௭. தேங்குழையுந் தோடுஞ் சிலையிடத்தி லுள்ளவெனப்
பூங்குழையுந் தோடும் புடைசூட்டி - மூங்கிற்

௧௪௮. சகோதரனொன் றூரத் தழீஇக்கழுத்து முத்த
மகோததிநீ லத்தை மறைக்கக் - ககோதரநற்

௧௪௯. பையரா மெய்க்குளுமிழ் பன்மா மணிவடப்போற்
செய்யமா ணிக்கஞ் சிறந்திலங்க - வெய்யிற்

௧௫0. கணத்தணியாய்ப் பல்லுலகாய்க் கங்கைப் படியாய்
மணிப்பதக்க ராசி மலியப் - பணிக்கிரணப்

௧௫௧. பாந்தண் மலைவலியைப் பார்த்துச் சுழலவிட்டுப்
போந்ததென வாகு புரிவயங்கக் - காந்தி

௧௫௨. யுருக்கொள்வல யத்துமணி யொன்பதுக ளூற்ற
திருப்பதிக மென்னத் திகழ - மருப்பதத்துச்

௧௫௩. சந்திரனு மந்தகனுந் தாருகனை வென்றாளுஞ்
சிந்தை யதிரச் சிலம்பதிர - வந்தரத்திற்

௧௫௪. கோத்தபெரு வெள்ளங் குடிக்கப் பசிகொண்டு
காத்திருந்த வங்கி காத்தோங்கக் - கோத்திரத்தி

௧௫௫. லம்மை மருங்கிற் கலந்ததலை மோதுவபோற்
சும்மைகொடு செங்கைத் துடிதுடிப்பக் - கொம்மைத்

௧௫௬. தனங்களுடை யார்வீதி சார்வளவு நில்லென்
றநங்கனையங் கோர்கை யமைக்கப் - புனைந்தமணிப்

௧௫௭. பச்சைக் கொழுந்தைப் பசும்புற் கொழுந்தெனவே
நச்சிக் கரகவ்வி நாநீட்ட - மெச்சு

௧௫௮. பணியாட நீராடப் பைங்குவளை மாலை
யணியாடப் பொன்னிதழி யாட - மணமுண்டு

௧௫௯. வண்டாடக் கோடிதலை மாலையா டச்சுருதி
கொண்டாடத் தேவர்குழாங் கூத்தாடச் - சண்ட

௧௬0. முரசதிரத் தெய்வ முழவதிர நாக
சுரமதிரச் சங்கந் தொனிப்ப - வரையனையன்

௧௬௧. மாக்கற் பகவல்லி வாவிக் கிரணவிழி
தாக்கத் திருவாடு தண்டேறி - நோக்கினுற்

௧௬௨. சீறுமத னுக்குதவி செய்யவோ வென்றணுகிக்
கூறு மதிபோற் குடைநிழற்றத் - தேறுமுத

௧௬௩. லன்னமா னன்கண் டதிசயித்துப் பார்க்கவுழல்
வன்னமாய் வெண்சா மரையசையத் - தன்னை

௧௬௪. யலக்கணற வாழ்த்து மடியார் பவத்தை
விலக்குவபோ லாலவட்டம் வீசத் - தூலக்குமணி

௧௬௫. யம்பொற் களாசி யடைப்பைவரக் கஞ்சுகிகள்
செம்பொன் மணிவேத் திரம்பிறங்க - வெம்பரிதித்

௧௬௬. தேசு பெறுங்கனகத் திண்கோ புரநிரையின்
வாசல் பலகடந்து வந்தருளி - வீசுகதி

௧௬௭. ராழியாற் பொற்கொடியா ளாடகப் பொற்றேருடையால்
வாழி மணிவடத்தான் மாலையாற் - கேழ்கிளருஞ்

௧௬௮. சங்க மணிக்குரம்பந் தாங்கலாற் பாகத்துச்
செங்கணெடு மாலனைய தேரேறி - மங்கையுடன்

௧௬௯. சங்கு திமிலை தடாரி குடமுழா
மங்கல கீத மகரயாழ் - பொங்கிய

௧௭0. சச்சரி பேரி தலைமயங்கிக் கம்பிக்கப்
பிச்ச வணிகள் பிறங்கியிட - வுச்சியிலே

௧௭௧. யண்சந் திரன்வளர வாண்டவற்குச் சந்திரன்போல்
வெண்சந் திரவட்ட மேலாடக் - கண்சாத்து

௧௭௨. வள்ள லுருபமத்து மாலுமய னுங்கருடப்
புள்ளுமன்னப் புள்ளும் பொலிந்தேறத் - தள்ளிக்

௧௭௩. கிரியி னரியுமெரி கின்றலனும் வெள்ளைக்
கரியு மரியுங் கடவப் - பெரிய

௧௭௪. தடமையுரு வானவனுந் தானவனும் பொற்பா
ரிடமயிட மேறி யிறைஞ்சக் - குடதிசையிற்

௧௭௫. கானேறு நீர்க்கரசைக் கந்தச் சமீரணனை
மீனேறு மானேறு மேற்கொள்ள - வானோருஞ்

௧௭௬. சுற்றமா கக்கலந்த தோழனுந் தோழனும்
பெற்றவிமா னத்தேறிப் பின்செல்ல - வொற்றைமருப்

௧௭௭. பாளிதுடி யாளியெனு மாபூதர் பூதர்பெருஞ்
சாளியினு ஞாளியினுந் தானூன்ற - வேளூ

௧௭௮. நயச்செண் டடிப்பவனு நற்புடைக்கே சொற்கே
கயத்துங் கயத்துநங் களிப்ப - வியற்காளி

௧௭௯. துங்கக் கலையேறச் சூலிநெடும் பேயேறச்
சிங்கத்தி லேறச் செழுங்கன்னி - சங்கமா

௧௮௰. யோரெழுவ ரோரொண்ப தொன்பதின்ம ரோர்பதின்மர்
பாரப் பதினொருவர் பன்னிருவ - ரீரெழுவர்

௧௮௧. தத்தம் விமானந் தமிலேறக் கந்தருவர்
சித்தர் முனிவர் திரண்டேத்த - முத்தமிழாற்

௧௮௨. பல்லக்கைப் பெண்ணாகப் பாடினோன் வெண்டரளப்
பல்லக்கி லேயிருந்து பண்பாடக் - கல்லொக்க

௧௮௩. மேனாண் மிதந்தானை மெய்க்கா வணமேந்த
மாநா வலினரசை மாவேந்தக் - கான

௧௮௪. நரிக்குதிரை கொண்டோ னரவா கனத்தே
தருக்கமணித் தண்டேறத் தண்டி - திருக்கழலை

௧௮௫. நூலின்வழி கண்டோனு நொந்நின்ற கற்சுமத்திக்
கோலுஞ் சிவபதத்தைக் கொண்டோனுங் - காலிரண்டுங்

௧௮௬. தாவென்ன வெற்பிற் றலைமோதி நின்றோனுஞ்
சீவன் செலவழியே சென்றோனும் - பூவுலகி

௧௮௭. னண்பாக வேநம்பி நான்வந்தே னென்றோனும்
வெண்பா விளக்கேற்றும் வித்தகனும் - பெண்பாகம்

௧௮௮. பெண்க ளுடைமையெனப் பேரின்பம் பெற்றோருங்
கண்களிக்கக் கேடகத்திற் காட்சிதரப் - பண்களிக்கப்

௧௮௯. பாடியுமர்ச் சித்தும் பணிந்தும் பதம்பெறும்பல்
கோடி யடியார் குழாங்கொள்ள - நாடளித்த

௧௯௦. சோழ ரிருமருங்குஞ் சூழ்ந்துவரத் தொண்டையரும்
பூழி யருமருங்கு போற்றிசெய - வூழி

௧௯௧. யெழுபிறப்புந் தானறுத்த யாதவர்கோ னின்று
செழுமணிப்பொற் செங்கோல் செலுத்தத்-தொழுகோயிற்

௧௯௨. சட்டமிடத் தோன்றிச் சதகோடி வைபவஞ்செய்
சிட்டய ராமனின்று சேவித்துக் - கிட்ட

௧௯௩. வடமடத்து மாமுனியு மாமணி கங்கைத்
திடமடத்து வாழ்தே சிகனுங் - கடலனைய

௧௯௪. கொண்டற் கொடையாறு கொத்தாரும் வெண்ணீற்று
வண்டற் பதினெண் மடத்தாரும் - புண்டரத்துச்

௧௯௫. சுத்த சிவாகமத்துத் தொல்லைநூற் காரணத்துப்
பத்துக் குடிவேத பாரகரு - மத்தனருள்

௧௯௬. வைத்திடுகோ யிற்கணக்கு மந்திரவோ லைக்கணக்கு
முத்திரிக்குங் கூர முறையாரும் - பத்திபுரி

௧௯௭. யெட்டுக்கொத் தான விளையநா யக்கர்களும்
வட்டக் களபமுலை வண்ணவா - யிட்ட

௧௯௮. சிறுபத்தி முல்லைநகைத் தேவரடி யார்க
ளறுபத்து நாலுவகை யாரு - முறுதியின்மற்

௧௯௯. றுள்ள வடியாரு மோங்கு தமிழோருந்
தெள்ளிய பாடகருஞ் சேவிப்பக் - கள்ளமதன்

௨௦௦. பூமழையு மேற்சொரிபொற் பூமழையு மந்தணர்கைப்
பூமழையு மண்டம் பொதிந்தேற - மாமறுகி

௨௦௧. லாணிக் கனகத் தமைத்தசிலை யான்வந்தான்
மாணிக்கச் சோதி மலைவந்தான் - பாச

௨௦௨. பத்துப் பிறப்பிற் பகழிப் பிரான்வந்தான்
செத்துப் பிறவாத தேவன்வந்தா - னித்தனையிற்

௨௦௩. சார்ந்தாரைக் காத்த தயாவா ரிதிவந்தான்
சேர்ந்தார்க் கினிய சிவன்வந்தான் - கூர்ந்தசிவ

௨௦௪. நம்பிக்குந் திண்ணனுக்கு நம்பிக்கை யான்வந்தான்
றும்பிக்கை யானைத் துணைவந்தான் - செம்பவளச்

௨௦௫. சோதிப் பெருந்தேவன் சோதி விடங்கன்வந்தான்
போதிக்க வொண்ணாப் பொருள்வந்தான் - கோதற்ற

௨௦௬. வாயிரநா மத்தான்வந் தானன்று செங்காட்டிற்
போயிரந்த பிள்ளைப் புலிவந்தா - னேயமென்றும்

௨௦௭. வைத்த மலைக்கொழுந்தான் வந்தான்வந் தானென்று
பத்திபுரி சின்னம் பணிமாறத் - துத்திவரி

## குழாங்கள்.

௨௦௮. நாக ருலகமணி நாக நிதம்பியரும்
பாக ருலகமொழிப் பாகரு - மேகமணி

௨௦௯. சந்திரனே போன்றமுக சந்திரலோ கத்தாரு
மிந்திரனூ ரிந்திரைக ளெல்லாருங் - கந்தருவ

௨௧௦. கன்னியருஞ் சித்தரிளங் கன்னியருங் கின்னரர்தங்
கன்னியருங் கிம்புருட கன்னியரும் - பொன்னின்

௨௧௧. சிலைவா ழநங்க சிலைப்புருவத் தாரு
மலைவாழ் முகிலளகத் தாரு - நிலையாய

௨௧௨. கண்ண னுலகமலர்க் கண்ணூரும் பூலோக
வண்ண மகளிர் வடிவெய்திப் - பண்ணையா

௨௧௩. யீட்டு மரவிற் கிடங்கொடுத்த தென்னென்று
கூட்டமிடுந் தோகைக் குழாங்களோ - காட்டுமுன்னே

௨௧௪. யெங்க ணதிலைய யிவரடக்க லென்னென்று
பொங்கி வருமெகினப் புட்களோ - பங்கமகத்

௨௧௫. தோடு முழையை யுரித்தா ரிவரென்று
தாடி வருமானின் சங்கமோ - சூடேற்றி

௨௧௬. மீனக் கொடியானை வென்றகொடி யாரெனச்சூழ்
கானக் குயிலின் கணங்களோ - யானை

௨௧௭. பிடித்தபிடி யாயுரித்த பேராளனைப்பின்
பிடித்த பிடியின் பெருக்கோ - சடைக்கு

௨௧௮. ளிளைத்தமதி சிக்கியதென் றெவ்வுடுவுங் கூடி
வளைத்தனவோ வென்று மருளக் - களித்துமணி

௨௧௯. மாளிகையிற் சூளிகையின் மண்டபத்திற் கோபுரத்தி
லாளிநிரை முற்றத்தி லாடரங்கிற் - சாளரத்தின்

௨௨௦. மாடத்தி லாலயத்தின் மாமகர தோரணத்திற்
கூடத்திற் கூடிக் கொடியிடையீ - ரோடிவருங்

௨௨௧. கல்லா லடியிற் கரும்பினிர தந்தன்னை
யெல்லாருங் கண்ணு லினிதருந்தீர் - பொல்லாத

௨௨௨. வாலால முண்டுலகை யாளு மடையாளக்
கோலா கலக்குறியைக் கும்பிடீர் - காலா

௨௨௩. லுதைத்தமுடி யார்வந் துலாத்துமது பாரீர்
பதைத்ததிரு வாபரணம் பாரீ - ரதற்கடங்கா

௨௨௪. வெண்மதியைப் பாரீரவ் வெண்மதிபோற் சிக்காமற்
பெண்மதியை நன்றாப் பிடித்திடீர் - திண்மலையா

௨௨௫. யிச்சுதர்கள் வீறிரு ரித்தேவி யார்க்கின்னம்
பச்சுடம்பென் பாமலென் பகர்ந்திட - ரொச்சி

௨௨௬. விறைச்சிறுகர் வோமென் றெலும்பணிய வேண்டா
மறைச்சுவிடு மென்று வணங்கீர் - குறிச்சணிய

௨௨௭. விந்தத் திருவுரத்துச் சேனக்கொம் பென்கொங்கைத்
தந்திக்கொம் பாகாதோ தான்கேளீர் - முந்தியதா

௨௨௮. யோங்கியவோங் காரத்தி னுட்பொருளாய் நின்றதுபோற்
றேங்குதிரு வாசியினைச் சேவியீ - ராங்கார

௨௨௯. மாலு மயனு மறிக்கமிறிக் கப்பெற்ற
காலின் முயலகனைக் கைதொழீர் - கோலியெதிர்

௨௩௦. நில்லீ ரெனவெதிரோ நிற்பார் கதிரோனைப்
பல்லீருங் கையைப் பரவுவார் - வல்லி

௨௩௧. திருத்தோடு நிற்கச் சிவந்தபா திக்குக்
கருத்தோடு நெஞ்சங் கனாவா - ரொருத்தோனே

௨௩௨. வில்லடிமே லெயிந்த மெல்லடியா ளாரென்பார்
வல்லடியோ வந்த வரத்தென்பார் - நல்லடியான்

௨௩௩. கண்களைப் பட்டுங் கலையாத கன்னெஞ்சம்
பெண்களையோ நாடுமெனப் பேசுவார் - திண்கிரணத்

௨௩௪. தெண்மணிக ளோசாத்திச் சேடன்பூ சித்தவர்மேற்
கண்மணிக ளோசாத்திக் காட்டுவா - ருண்மயங்கிப்

௨௩௫. பூசலா மென்றாலும் பூசலாஞ் சந்தனத்திற்
பேசலா மோவென்று பேசுவா - ராசையா

௨௩௬. லத்தியா னேழுருவா லக்காள னேரானேம்
பத்தியா லாளீர் பரிந்தென்பார் - புத்தியெல்லாம்

௨௩௭. போயிரங்கு வீர்ஞானப் பூவையணைந் தீரினீர்க்
காயையணை யீரென்று கண்பிசைவார் - நேயங்

௨௩௮. கனியார்கல் லாலின் கனியார் மடவார்க்
கினியா ரினியாரிங் கென்பார் - முனியாம

௨௩௯. லேத்தவரு மெங்கட் கிரங்கீரோ சார்ந்தாரைக்
காத்தவரே யென்று கழறுவார் - பூத்த

௨௪௦. பணியிதழி மார்பெமக்கே பங்கென்று கேட்கக்
கனியிதழி மாலைக் கடிவார் - தினமு

௨௪௧. மழைததுவா ழ வித்தவமோ யானென் மடவீ
ரிழைப்பரோ வெம்மைநமக் கென்பார் - தழைத்தசுனைக்

௨௪௨. காய்வீணை யிட்டீரோ கைத்தாய ராவெமக்கு
வாய்வீணை யிட்டீரோ வந்தென்பார் - பாய்வார்போற்

௨௪௩. பாணிமா னுக்கெதிரே பார்வைமா னைத்துரப்பார்
நாணிமா னித்தோமே நாமென்பார் - பூணே

௨௪௪. டுறுவார் வடக்கி லுளமூச லாடப்
பெறுவா ரிவரிலொரு பேதை - குறுகாத

## பேதை.

௨௪௫. தாயிற் சிறந்தானைச் சாரும் புயங்கேசன்
வாயிற் பெறுதவிள மாணிக்க - நாயனார்

௨௪௬. செம்பொற் சரணஞ் செறியுங் களியானைக்
கொம்பிற் பிறவாக் குறுந்தரள - நம்பனார் [ருஞ்

௨௪௭. வேட்டிருக்கத் திண்ணனார் வேட்டம்போய்க் கொண்டுவ
ரூட்டிறைச்சி கோயார் சுவைச்சிறுதே - னூட்டியத்தர்

௨௪௮. தண்டா மனையடிசேர் சங்கத்தோ னந்தாதி
யண்டா முழுச்சிற் றலங்காரந் - தொண்டாகித்

௨௪௯. தண்கயிலை யானைத் தழுவுஞ் சிவகோசன்
வண்கைப் புகுதா மருக்கொழுந்து - வெண்கிரணச்

௨௫௦. சோமன் செறிசடையார் சொற்கயிலை வீதிதொறுங்
காமன் வளையாக் கருப்புமுளை - பீமனார்

௨௫௧. கங்கைக் கரைக்காமன் காவிபோற் கூடலிலே
வெங்கழுவிற் புக்கார் விரதம்போ - லங்கவரைச்

௨௫௨. சொல்லா மகத்திற் சுரரெடுத்த வாயுதம்போற்
கல்லாக் கொலைபடைத்த கண்ணினு - ளெல்லார்க்குந்

௨௫௩. தம்பிரான் பாலொடுந் தந் தக்கோ ரிருவருமா
யம்பினு கத்தொடுங்கு மண்டமுமாய்ச் - சம்பந்தன்

௨௫௪. வண்ணக் குடக்கென்பு வைத்தெழுப்பு மங்கையுமாய்த்
திண்ணற் கொளித்திருக்குஞ் செங்கையுமாய்க் - கண்ணிரு

௨௫௫. மண்டத் தமரு மருஞ்சக்ர வாகமுமாய்த் [ளு
துண்டப் பணிவாய்ச் சுடர்களுமாய்த் - தெண்டிரைவா

௨௫௬. யான்றவமு தக்குடமா யாகத் திருந்தினிமேற்
றோன்றி வளருந் துணைமுலையா - ளென்றுவிட

௨௫௭. முண்டார் திருச்சடைமே லுன்மத்த முண்குதலை
வண்டாய் மிழற்று மழலையாள் - சண்டேசன்

௨௫௮. போற்றும் பரமனார் பொன்கொழிக்கும் பொன்முகரி
யாற்றி னறல்போ லளகத்தாள் - கூற்றிலே

௨௫௯. யாங்கவுரி யல்லா தரும்பியவெண் ணைன்கறமுந்
தாங்க முயன்றனைய தந்தத்தாள் - பாங்கியென

௨௬0. நின்றுதனை நீங்கா நிழலை யுடன்கொண்டு
சென்று மனைபுகுந்து தேடுவாண் - முன்றிலிலே

௨௬௧. மெத்துமணற் சிற்றில் விருந்தருந்த வாவென்று
சித்திரத்தி னோடொல்கிச் செப்புவாள் - கைத்தாயை

௨௬௨. நீங்கிப் பிரியா னிலைக்கண்ணா டிப்பொருளை
வாங்கித்தா வென்று வருத்துவா - ளாங்கருணை

௨௬௩. யாய்நீர்மை வேட னபிடேக மேனியைப்போல்
வாய்நீ ரமுதொழுகு மார்பினா - டேய்நீர்மை

௨௬௪. வள்ள லடியார் மனம்போ லுணாவளவுங்
கள்ள மடையாக் கருத்தினாள் - கிள்ளையுடன்

௨௬௫. றாவித் தனைவளர்க்குந் தாயரள கச்சுரும்பை
நாவற் கனியெனவே நச்சுவாள் - பாவனையி

௨௬௬. லெண்ணிலா ஞானவெளி யேகாந்த யோகியைப்போற்
றன்னிலே தான்பேசுந் தன்மையா - ளன்னைமார்

௨௬௭. மாணிக்கக் கல்லால் வயிடூ ரியமணியா
லாணிக் கனகத்தா லாரத்தாற் - பேணிக்

௨௬௮. கொழுங்கமுகு நாட்டிக் குலாவியமுற் றத்தே
செழும்பவளப் பொன்னூசல் செய்ய - வெழுந்திவளு

௨௬௯. மென்னை மணியூச லேற்று மெனவேற்றி
யன்னையர்க ளாட்டு மளவிலே - சின்னங்க

௨௭0. ளார்ப்ப மணிமுழவ மார்ப்ப வலம்புரிக
ளார்ப்ப வருமறைக ளார்ப்பவே - போர்க்கடலா

௨௭௧. னென்றுங் கழியான்பச் சேரியா னீர்க்குளத்தான்
குன்றுந்து மாற்கின்னுங் கால்வாயா - னின்றுதனை

௨௭௨. யேத்தத் துரவா னிருங்கி ணறுந்தாரான்
சாத்தியநீர் வற்றாத் தடாகத்தான் - கோத்த

௨௭௩. புரமடுவான் முத்தி புகற்கேணி யாவான்
சுரரிதய வாவியிலே தோய்வா - னிரவலர்நோ

௨௭௪. யாற்றினான் சூலத் தகழுதிரங் கைத்தலையி
லூற்றினா னன்னினைவி லோடையா - னாற்றெட்டுத்

௨௭௫. தாளத்தி லாடுதிருத் தாளன் கயிலாயன்
காளத்தி நாதன் கணநாதன் - வேளத்தன்

௨௭௬. கற்றைச் சடையன் கனகக் கொடியாடும்
வெற்றித் திருத்தேர்மேன் மேவுதலுங் - கொற்றமதன்

௨௭௭. மாசிப் புதுத்தேர் மருவினான் மற்றிவளு
மீசன் பழந்தேர்க் கிறங்கினா - ளேசத்தின்

உஎஅ. முத்தேர் நகையாரு முன்கொண்டு போய்த்தொழுதா
ரொத்தே தொழுதங் குழையோரை - யித்தேரி

உஎகூ. லாரொன்றுள் கல்லா லடிக்கரும்பென் றூதனைத்
தாரு மெனக்கென்னத் தாய்மாருங் - காரிகையே

உஅ0. யிந்தக் கரும்பெவர்க்கு மெய்தாக் கரும்புகா
ணந்தவயன் மாலுக் கரிதுகாண் - செந்தமிழ்சே

உஅக. ராலைவா யிற்பண்டு மாடுங்கா ணுடியுங்கல்
லாலை யடைந்துமழி யாதுகாண் - சாலவொரு

உஅஉ. சற்றுங்கோ தில்லைக்காண் சாற்றி லதிகங்காண்
சிற்றின்பர் நாவிற்சே ராதுகாண் - முற்றும்பே

உஅங. ரின்பப் பெருக்கங்கா ணிச்சை கடந்தேறு
மன்பர்க்கோ ராரா வமுதங்கா - ணென்பளவிற்

உஅச. றேருங் கரும்புந் தெருவகல நின்றமட
வாருங் கரும்பு பணிபுகுந்தார் - போர்மதனு

உஅரு. மிக்கரும்புக் கென்கருப்பை யீந்தானு மீவரெனக்
கைக்கரும்பைக் கொண்டு கடிதகன்று - ஞெக்குமே

உஅசு. பாலற் கவன்றந்தை பாற்கடலை யீந்தாரா
ராலைக் கரும்பளித்தா லென்றென்பார் - மேலொருத்தி

## பேதும்பை.

உஅஎ. தக்க வெழிற்பெதும்பை தானுநீங் காமுகுளப்
பக்குவப்போ தன்ன பருவத்தாள் - கைக்கு

உஅஅ. ளளவுமதன் செங்கோற் ககப்படா ளேனு
மிளவரசு தான்கொண் டெழுந்தாள் - களபவிளங்

உஅகூ. குன்ற முலையார் குறிப்பறியுங் கொள்கையாள்
கன்று தளிர்கோதுங் கல்வியா - ளொன்றியசெம்

உகூ0. பொன்னை யறியப் புழுகறியப் பூவறியத்
தன்னை யறியுந் தறுவாயா - ளன்னமா

உகூக. ரானு நடையா லலையே றிளவன்னக்
காலி னடைசிறிது கைவந்தாள் - கோலமத

உகூஉ. வெற்புவரு மட்டுமிறை வென்னிலொடுங் கிப்பார்க்குஞ்
சற்ப முகத்துமுனை தன்னைப்போற் - புற்புதம்போற்

உகூங. சித்தர்கடங் கையிற் சிவலிங்கம் போற்சிறிது
முத்திவரத் தோற்று முலையினா - ளத்தனுவே

உகூச. ளேழுலகு மோரிலக்கா வெய்ய வெனக்கினிமே
லேழு கணையா மெனுங்கண்ணாள் - சூழலகோர்

உகூரு. பூராயக் காட்சியே போதுமெனத் தென்கயிலை
யாரா வமுத ரணிகொண்டாள் - பாரிரந்த

உகூசா. தெண்டிரைமா லென்னச் சிறுகிக் கருகியடிக்
கொண்டுவளா ராநின்ற கூந்தலா - ளொண்டொடியா

உகூஎ. ளொத்திலங்கு மையெழுதி யோதிகோ திப்பின்னி
நித்திலப்பூட் டத்தரித்து நின்றிடுவாள் - சித்தசன்றன்

உகூஅ. வாம்பரியுங் காகளமு மானத்தே ருங்குடையும்
பூம்பகழி யும்பயிலும் பூங்காவி - லாப்பளிக்கு

உகூகூ. மண்டபத்திற் சோதி மணிக்காந்த வேதிகையிற்
புண்டரிக மான்போற் பொலிந்தேறி - வெண்டரள

௩00. வாரமொளிவீசு முத்தின் பருங்கழங்குங்
காரளக நீலக் கருங்கழங்கு - மாரமுதச்

௩0க. சேமவித ழைப்போற் சிவந்தபவ ழக்கழங்குங்
காம ருகிர்வயிரக் கற்கழங்குந் - தாமமலர்க்

௩0உ. கைச்செம் பதுமரா கக்கழங்கும் பொற்கழங்கும்
பச்சை மயிலியலின் பைங்கழங்கு - மெச்சவெடுத்

௩0௩. தொன்றென் றுலகமெலா மொன்று மொடுங்கிவிடு
மன்றுமுள கல்லா லடிபாடி - நன்றென்

௩0ச. றிரண்டென் றெழிலடியா ரீடேற நல்கும்
பரந்தவிரு பாதங்கள் பாடி - நிரந்தரமு

௩0ரு. மூன்றென்று மூன்று முதல்விகளுந் தாம்புகழுஞ்
சான்ற சுருதித் தமிழ்பாடி - யான்றவொரு

௩0சா. நாலென்று மாசிமக நாடோறுந் தெண்டனிடு
மூல மறையின் முடிபாடிச் - சாலவே

௩0எ. யஞ்சென்று கல்லா லடியிற் கருப்பிலுய
ரஞ்சு கொழுந்தி னடிபாடி - நெஞ்சுருகி

௩0அ. யாறென்று நாளு மமரர்புகுந் தாறுடி
நீறணியும் பொன்முகரி நீர்பாடி - வீறுடனே

௩0கூ. யேழென்று முன்சிலந்தி யெய்தொளியைப் பின்சூடி
வாழு மெழுவர் வளம்பாடிக் - கேழின்

௩கO. மிசையேழு மாட விழியாட நாவி
லிசையேழு மாட விருந்தா - ளசையுமின்னூர்

௩கக. போது மடமயிலே போது மெனச்செங்கைப்
போதின்விளை யாடல்விடும் போதிலே - பூதப்

௩கஉ. படையான் பணித்தொடையான் பாணிச் சடையா
னுடையான் புலித்தோ லுடையான் - விடையான்

௩௧௩. கழைத்தாயன் கண்டங் கரியா னருளுங்
கழைத்தாயன் கண்டங் கரியான் - குழைக்காதன்

௩௧௪. வேதப் பரியினான் வேத ரூமலியான்
வேதப் பொருளினான் வேதாந்த - ஞாதன்

௩௧௫. குடங்கையணி நீயன் குளிர்ந்தகயி லாயன்
றடம்பணில மாயன் சகாயன் - கடம்பவன

௩௧௬. னன்கழ லாடி நமன்கழல வேதாக்கும்
பொன்கழ லாடிநேர் போந்திடலுங் - தன்கழலை

௩௧௭. யேழு பிறப்பு மொறிவ தெனவெறிந்தா
டோழிமார் தாய்மார் தொழத்தொழுதாள் - கீழிற்

௩௧௮. படிகிரையு மால்பிரமன் பல்வெளியுங் காணு
வடிமுடியைக் கண்ணு ளைந்தாண் - முடியிற்

௩௧௯. கலைக்கொழுந்து சூடுங் கயிலாயச் செம்பொன்
மலைக்கொழுந்தின் மீதிலே வைக்க - முலைக்கொழுந்து

௩௨௦. போதா தெனச்சிறிது புந்தியிலே சிந்திப்பாண்
மாதா யவைப்பார்த்திம் மாதிவளா - ராதிக்

௩௨௧. கிசைய வினிதிருந்தா ளென்னையொரு பாவி
லிசைய விருத்துமென வன்னார் - வசமோ

௩௨௨. மலைக்கு மலைகொடுத்த வாருய்க் கயிலை
மலைக்கு மலைகொடுத்த மானை - விலைக்கியொரு

௩௨௩. மாதளிப்பா ருண்டோ மயிலேயென் பாரைநீ
ரேதறிவீர் பாரீ ரிவர்வேணி - மீதிவளை

௩௨௪. யென்றவர்க்குக் கையா லிசைவித்தா ளவ்வளவிற்
சென்றாது நிண்டோர் செலநோக்கி - நின்றமே

௩௨௫. ராசை யுடையீ ரறியாச் சிறியாளை
யாசையுடை யாருக்குள் ளாக்கினீர் - சீசியுமைச்

௩௨௬. சொல்லாது சொல்லியலர் தூற்றுமோ தோற்றீர்போம்
புல்லா லிலையெடுத்துப் போடோமோ - சல்லாபக்

௩௨௭. கல்வினைறிந் தாறலைப்புக் காணுமோ கைகொட்டி
யெல்லவரு மம்பலத்தி லேற்றுமோ - நல்லுடம்பைக்

௩௨௮. குத்துடம்பு செய்யோமோ கூத்தாடல் காணுமோ
நித்தமொரு காலி னிறுத்தோமோ - கற்றவர்முன்

௩௨௯. சங்கித் திடோமோ தலையி லடியோமோ
பங்கச் செருப்பேந்தப் பண்ணோமோ - செங்கைவிரன்

௩௩௦. மூக்கிலே தான்வைத்து முந்திச் செவிபுதைத்து
வாக்கிலே நன்றாக வையோமோ - நோக்கியுமைக்

௩௩௧. காபாலி யென்றோமோ காட்டஞ் சுமத்தோமோ
வாபோவென் றேவி வருத்தோமோ - பாப

௩௩௨. மதித்துவட ராக்கோமோ மன்றாடி ஞானு
மெதிர்த்தகொடு நஞ்சை யிடோமோ - புதைத்திவற்றைப்

௩௩௩. பொய்தானென் றீரோ புறம்பிடோ மோபண்டு
செய்தானை யேதேனுஞ் செய்தீரோ - கைதவத்தை

௩௩௪. யேழைக்குக் காட்டுவீ ரீடேறு வீரதனல்
வாழு மிரப்பகன்று வாழுமென - யாழுனையைக்

௩௩௫. கொண்டு மனைபுகுந்தார் கோலமே எப்பருவங்
கண்டு சிறிதுசில காணான்போல் - விண்டகன்றான்

## மங்கை.

௩௩௬. வேறொருத்தி பூமங்கை வெண்டா மரைமங்கை
தேறு மிமயச் செயமங்கை - கூறொரு

௩௩௭. மும்மங்கை யர்க்கடந்து மூவரைமெய்க் காவலிடுஞ்
செம்மங்கை யாகிவளர் சீர்மங்கை - வெம்மைமலிட

௩௩௮. மன்றே தரித்தா னமுதகலா மண்டலமே
யின்றே யெழுந்த தெனுங்கண்ணாள் - மன்றேறி

௩௩௯. யாடும் பதத்தா னவன்சுரதக் கூத்தினுக்குக்
கூடியன தாளக் குவிமுலையாள் - பாடகக்காற்

௩௪0. பொற்றொடியாள் பாகன் புணர்ந்துபுக வீணையுள்ளாள்
பற்றுதுடி யுள்ளாள் பணியுள்ளாள் - முற்றிவளை

௩௪௧. * மோசைமுதற் கங்காளன் முன்னாக்கப் பின்னாக்கு
மாசையிருட் டன்ன வளகத்தாள் - மாசில்

௩௪௨. * விடைபிரிந்த வோதிமத்தின் மென்பெடைபோ லன்னை
யிடைபிரிந்து சேரு மினத்தாள் - கொடிமகரச்

௩௪௩. * சித்தச வேந்தன் சிறந்தகலை நூல்படித்துப்
புத்தரங்கி லேறப் பொருந்துவாள் - மத்தகத்துக்

௩௪௪. * கண்பொடிசெய் தானந்தோ காற்பொடிசெய் தானிலையே
பெண்பெருமா னுக்கென்னும் பெற்றியாள் - பண்பிலவ

௩௪௫. னெய்யு மலரு மொழிலோ தியினலருஞ்
செய்யுஞ் செயலறியுஞ் செய்கையாள் - பெய்வளைக்கைத்

௩௪௬. தோழியருந் தானுமிளந் தோகைக் குழாமெனவே
யேழுநிலைக் குன்றத் தினிலேறி - வேள்வியிலே

௩௪௭. தன்னைமறந் தாட்டுத் தலைபடைத்த வம்மானை
யன்னைதனை யின்றமலை யம்மானை - முன்னைநாட்

---

* இக்கண்ணிகள் ஒரேபிரதியில்மட்டு மிருந்தன.

௩௱௪௮. கொங்கையொரு மூன்றுடைய கொம்பையரு ளம்மானை
யங்கையிலே வீற்றிருக்கு மம்மானைக் - கங்கையெனு

௩௱௪௯. மம்மானைப் பெற்றசடை யம்மானைப் பாடியவ
ளம்மானை யாடு மளவிலே - கைம்மானைச்

௩௱௫0. சீரா டியதுடையான் செண்டா டியவிடையான்
வேரா டியசடையான் வேடன்வாய் - நீராடிப்

௩௱௫௧. பாலாடி நெய்யாடிப் பண்டைத்தீ யாடியயன்
மாலாடி நின்றுதொழு மன்றாடி - மேலாடி

௩௱௫௨. செம்பொற் கொடியாடுந் தேர்மீது தோன்றுதலு
மம்பொற் கொடியாட லாங்கொழிந்தா - ளெம்பிரான்

௩௱௫௩. பாதம் பணிந்தாள்பின் பார்வையிலே யம்பணிந்தாள்
போதம் பணிந்தாள் புலனழிந்தாள் - காத

௩௱௫௪. லடிமூள மூத்தணிக ளத்தனையு நீறாய்ப்
பொடிமூ டியதழலைப் போன்றா - ளுடையானைக்

௩௱௫௫. கண்ட பொழுதே கறுத்தாள் கறுத்தவே
ளண்ட வருமினியென் றஞ்சுவாள் - விண்டிவளுந்

௩௱௫௬. தாதியரை நோக்கித் தமியேனை யாள்வாரோ
மாதினிடத் தாரொன்றுண் மற்றவருங் - கோதையே

௩௱௫௭. வண்டிலங்கு மேனியிலே வாழு மடவாரைக்
கண்டிலையோ நெஞ்சங் கரந்தாயோ - பண்டுநீ

௩௱௫௮. கற்றகலை யெல்லாங் கழன்ற கலையுடனே
யற்றவோ நின்னை யவர்கொண்டா - லுற்றணைக்க

௩௱௫௯. மாமியா ருண்டோ மலையிற் பெருநீலி
யாமவளுஞ் சக்களத்தி யாகாளோ - காமிக்கை

௩௱௬0. தோற்சேலைக் கோபிச்சைச் சோற்றுக்கோ வோட்டுக்கோ
மேற்சாம்பற் கோசுடலை வீட்டிற்கோ - நாற்சந்தி

௩௱௬௧. யம்பலத்துக் கோவெலும்பி னாபரணம் பூணுகைக்கோ
வெம்பணிமா லைக்கோபேய் வேலைக்கோ - சம்பந்த

௩௱௬௨. நல்லிடத்திற் சோதித்தாய் நப்போ லியரிருக்கு
மில்லறத்திற் கித்தனையு மேற்குமோ - வல்லதுமிவ்

௩௱௬௩. வாண்டா ரொருவர்க் ககப்படுவ ரோவல்லர்
காண்டாயே யன்றிந்தக் கள்வரே - வேண்டினுற்

௩௱௬௪. சீரு ரரியுரத்துச் செங்கமல மங்கைக்கா
வாரூரி லேசென் றருளன்பு - மோரூர

௩௱௬௫. ளாசைப் பரவைதனை யப்பரவை மங்கைமுன்னே
நேசத் துடனே நிகழ்த்தன்பும் - பாச

௱௬௬. வலைச்சேரி யிற்பிறந்த மங்கைக்கா வந்நா
ளலைக்கே வலைவீசு மன்புந் - தலைக்கொண்ட

௱௬௭. கங்கைதனை யேவிவருங் கம்பையிலே யோர்மங்கை
கொங்கை தழுவக் குழையன்பு - மிங்கே

௱௬௮. சகலகலை மங்கை தவம்புரிந்து போற்ற
வகில கலையருளு மன்பு - நிகரில்லாப்

௱௬௯. பாகொத்த செய்யமொழிப் பாண்டிவள மங்கையனை
யாகத்தி லேவைத் தருளன்பு - நீகருதி

௱௭௦. மாதவத்தைச் செய்துவரு மங்கையர்க ளாகென்றே
யாதரித்துத் தேற்று மனவிலே - சோதி

௱௭௧. விடங்கர் விடங்கனித்தார் வேணியர்பொற் றிண்டே
ரடைந்த தயல்வீதிக் கப்பான் - மடந்தை

## மடந்தை.

௱௭௨. கரியகுழற் கள்ளினத்தாள் கார்ப்புருவ நெற்றி
யரியதிரு விற்கோல மானாள் - வரிபரந்த

௱௭௩. காமர் விழியாலங் காட்டினா ளாசிகுமிழ்
மாமலரோ டொப்பூ வணத்தினாள் - சோமகலை

௱௭௪. நன்னிலவே யன்ன நகைமுல்லை வாயினாள்
கன்னமணி வள்ளைக் கருக்காதாள் - பன்னியபுட்

௱௭௫. சாற்றுங் களந்தனக்குச் சங்கநேர் கூடலாள்
போற்றுந்தோள் வேணு புரத்தினாள் - கோற்றொடிக்கை

௱௭௬. மேவுகம லாலயத்தாள் விம்பமுலைச் செங்கோட்டாள்
கோவுதர மாமாலக் கோயிலா - ளாவலா

௱௭௭. ஊற்றல்செ லாமுழுகு முந்தி வலஞ்சுழியாள்
சிற்றிடைநூ லாங்குறுக்கை சிந்தியாள் - வெற்றிசெறி

௱௭௮. வன்ன பணியல்குன் பாணிக்க நாகத்தா
ளன்ன துடையி னரம்பையாள் - கன்னியர்கைக்

௱௭௯. கஞ்ச மிசையிற் கணைக்கான் பகரத்தாள்
பஞ்சடியி னாற்கச்ச பாலயத்தாள் - செஞ்சொலாள்

௱௮௦. பூணு மழகும் புறப்பொருளுந் தன்னிழலிற்
காண வழகெறிக்குங் காந்தியாள் - வீணைமொழிப்

௱௮௧. பாங்கியரோ நாளும் பணிந்துறங்கும் பாயலிலே
யீங்கொருவ னொன்கனவி லெய்தினு - ராங்கவனை

௱௮௨. யாமொன்றே னென்றெரிய லாமொன்று மொத்தரோ
நீயொன்றேன் சென்னியிலே நீயொன்றார் - பாருமிவர்

௩௮௩. பந்தென்றே னின்குதிபூம் பந்தென்றார் வெண்ணீறே
சந்தென்றேன் போய்வந்தேன் சந்தென்றா - ரெந்தவூர்

௩௮௪. நாடென்றே னல்லுறவே நாடென்றார் கையிலே
யோடென்றேன் கோபமே யோடென்றார் - போடுமிது

௩௮௫. கோதென்றே னீயதரங் கோதென்றா ரிங்குண்டோ
வாதென்றே னாடினேன் வாதென்றா - ரோதுசடைப்

௩௮௬. புல்லென்றேன் வந்திழுகப் புல்லென்றார் நெஞ்சிவர்க்குக்
கல்லென்றே னோசமினிக் கல்லென்றார் - நல்லறிவர்

௩௮௭. வம்பென்றே னின்முலைக்கே வம்பென்றா ரெண்ணியதெ
னம்பென்றே னம்மையே நம்பென்றார் - கொம்புமிவர்

௩௮௮. வாக்கென்றே னுடனேயே வாக்கென்றா ராருடனே [ரென்
தாக்கென்றேன் கொங்கையொடு தாக்கென்றார் - போக்க

௩௮௯. போமென்றே னல்வேதம் போமென்றார் பித்தரிவ
ரோமென்றே னேதுமறியோ மென்றார் - தாமரைக்கைத்

௩௯௦. தீயேதென் றேன்காமத் தீயென்றார் கண்விழித்தேன்
போயே மறைந்தார் புறம்போகா - ராயவரைச்

௩௯௧. சொல்லி யருளுமெனத் தோகையே கோகிலமே
மெல்லியலே கொம்பே விளைத்தேனே - வல்லியே

௩௯௨. பொன்னே யிளமானே பூவையே பொற்கிளியே
மின்னே யரங்கன் விசயமே - யன்னமே

௩௯௩. கேளுநின் கனவு கிடையாக் கனவுகா
ளுளுந் துணையிறைவ னுனன்காண் - காளனுடன்

௩௯௪. செங்கையத்தி பூசித்த தெய்வத் திருவுடம்புன்
கொங்கையத்தி பூசைதனைக் கொள்ளுங்காண் - சங்கரனை

௩௯௫. நற்கனிவாய்ப் பூசித்தா னன்கனிவாய் நீபோலுன்
பொற்கனிவாய் நீரும் புலப்படுங்காண் - கற்கனிந்து

௩௯௬. நல்குநா கத்தை நயந்தபிரான் பேரருளா
லல்குல நாகத்தை யறியுங்காண் - செல்கோயிற்

௩௯௭. சேமநா விற்செய் சிலந்தியையாட் கொண்டவனுன்
காமநா விற்குங் கனிவான்காண் - டாமதியா

௩௯௮. னென்று பொருள்விரிக்கு மெல்லைக்க ணெவ்வுலகுஞ்
சென்று பணியரனார் சிற்பரனார் - குன்றதனிற்

௩௯௯. சப்பாதி போற்றினார் சங்கார நீற்றினார்
பம்பா நதியார் பரகதியார் - செம்பொற்

௪௦௦. சிலைவடத்தார் கஞ்சன் சிரமடர்த்தார் விண்ணோர்
தலைவடத்தா ரந்தகனைச் சாய்த்தார் - றலைவடர்த்தா

௪௦௧. ரன்பர்க்குத் தோற்றுவா ரையர்கா ளத்தியா
ரின்பத் திருத்தேர்மே லெய்துதலு - முன்பிரவிற்

௪௦௨. கண்ணாரக் கண்ட கனவை வரக்கண்டாள்
பெண்ணா மவர்க்கிதுவே பேறென்று - ளெண்ணியவர்

௪௦௩. தம்மைப்போற் செங்கைத் தளிர்முடிமேற் சூட்டினா
ளம்மைக்கண் மஞ்சனநீ ராட்டினாள் - வெம்மைமனம்

௪௦௪. பித்தேறி னாள்பெண் பிணைத்தேறி னாளம்பூங்
கொத்தேறி யங்கங் குழைந்திட்டாள் - புத்தரசை

௪௦௫. மீளத்தி யாணியீர் வேதத் தியானத்தீர்
காளத்தி யாரே கடிதென்று - டோளிற்

௪௦௬. கொதிகொ ளரவக் கொடும்பசிக்கு மாதர்
மதியை யிரையிடவோ வந்தீர் - புதிய

௪௦௭. வுடப்போ டுயிரோ டொருநரைப் பூண்ட
வடம்போல வாக்கவோ வந்தீர் - படிந்து

௪௦௮. பரவு மிருவர்விழி பற்றும லெங்கள்
வரிவிழியுங் கைக்கொளவோ வந்தீர் - கருதி

௪௦௯. யெலிக்கு முடியிடுநீ ரின்றே யிவளைப்
புலிக்கு முடியிடவோ போந்தீர் - பலிக்கு

௪௧௦. மொருமாலை வேண்டி யொருமாலைக் கஞ்சும்
பெருமாலை நீக்கீர் பிரானே - யுருகி

௪௧௧. வருவார்க்குப் பேசி வரந்தருவீ ரன்றே
திருவாய் மலரீர் சிவனே - துருவி

௪௧௨. யெரிகால் விடம்போ லிருள்வந்தா லென்ன
பரிகாரஞ் சொல்லீர் பரனே - யரிவளர்த்த

௪௧௩. வெற்றிக் கணைக்காமன் வெஞ்சாபப் போர்க்குநீர்
நெற்றிக் கணைக்காட்டி நில்லென்னீர் - முற்றும்

௪௧௪. பொருளாள ராயிருந்தும் பூண்டவளை கொண்டீ
ரருளாள ரோசலமென் னாளீர் - மருளானேன்

௪௧௫. பிள்ளைப் பழிபோதும் பெண்பழிவேண் டாமென்னுங்
கிள்ளைக் குரலிரக்கங் கேளாதே - தள்ளி

௪௧௬. நடந்தா ரிவளிங்கே நன்மரம்போ னின்றுண்
மடந்தா யெனவழைத்து மானார் - கடந்ததற்பின்

அரிவை.

௪௧௭. ஆரமுத வண்ணத் தலங்காரத் தூரியத்தைச்
சீருடனே தோய்த்துத் திசைமுகத்தோன் - பாரிற்

௪௧௮. சதிராக வோவியத்தைச் சஞ்சரிக்கக் கீறு
மதிரூப லேகை யரிவை - புதியவுறுப்

௪௧௯. பத்தனையுந் தத்தமிலே யாபரணம் போலுடலுக்
கொத்தழகு பொங்க வொழுகுவாள் - மெத்து

௪௨0. மதுர விளந்தென்றன் மன்றலிளங் காவி
னிதழி விளமெல் லியலாள் - முதியபகி

௪௨௧. ரண்ட மலைய வகிலாண்ட முங்குலையக்
கண்ட வரிபிரமர் கண்மூடப் - பண்டைநா

௪௨௨. ளோரம் பணைப்பெற்றூ ரோகிப் பலிக்காடும்
பேரந்த காரப் பெருங்குழலாள் - சூரஞ்சத்

௪௨௩. தாண்டும் விடைப்புனிதன் சங்கார தாண்டவத்திற்
பூண்ட பிநாகப் புருவத்தாள் - பாண்டரங்கன்

௪௨௪. பூசலிலே முன்பு புவனமெலாஞ் சுட்டெரிக்கும்
பாசு பதமனைய பார்வையா - ளீசன்

௪௨௫. மிகைத்தபுரந் தூளாக வில்வளைத்துச் சற்றே
நகைத்தநகை யன்ன நகையாள் - பகைத்தெண்

௪௨௬. பகட்டைத் திசையொதுக்கிப் பண்டையய னண்ட
முகட்டையிடிக் கன்ன முலையாள் - வகுத்தகலை

௪௨௭. யோதுசம யங்க ளுணராமற் குத்திபடும்
வாதுபொரு ளொத்த மருங்கினாள் - பூதலத்தி

௪௨௮. லாதாரச் சேடனுமஞ் சல்குலாள் கூர்மத்தைப்
பாதாளத் தேதுரத்தும் பாதத்தாள் - மேதினிமேற்

௪௨௯. கல்லா லடியோற் கடவுளரு நான்முகனு
மெல்லாரு மேத்து மெழிலினாள் - பொல்லாக்

௪௩0. கறைபற்றி யீரொண் கலையோன் குறைய
வறுபத்து நாலுகலை யார்ந்தா - ளிறைவுற்

௪௩௧. றநங்கனதி காரியிருந் தங்கரங்க போகந்
தினங்கருதிச் செய்யச் சிறந்தா - ளினஞ்சூழ

௪௩௨. முன்னாட் செழுநிலா முற்றத் தரியணைமேற்
பொன்னாட்டி லிந்த்ராணி போலேறித் - தன்னைக்

௪௩௩. குறுகி யொருவிறலி கொண்டாடச் சாந்து
நறுவிரையும் பூமலரு நல்கி - விறலியே

௪௩௪. நாரியரை யாட்கொண்ட நாயகர்க்குள் ளேசிறந்த
பேரழகு நாயகரார் பேசென்ன - நேரிழையே

௪௩௫. தாயி லறம்புரிந்த தங்கைக்கு மாறூய
சேயிழையா ளுண்மைதனைச் செப்புதுபோ - தூய

௪௩௬. முகமிழந்து தன்மனைவி மூக்கிழந்து மின்ன
மகமகிழ்வா னைச்சொல்ல லாமோ - மகமதிலே

௪௩௭. தேய்ந்தானைப் பல்லொடியச் சென்றானைப் பூங்குயிலாய்ப்
பாய்ந்தானைப் பேசிற் பழுதன்றோ - காய்ந்தளவி

௪௩௮. னீன்றாயி னானை நிறத்திலுதை பட்டானைக்
கூறான கையானைக் கூறுதுபோ - தேறி

௪௩௯. லருத்தியுள்ள பெண்ணுக்கு மாணுக்கு நாதன்
பெருத்த சிவனேகாண் பெண்ணே - கருத்துனக்கென்

௪௪௦. சொல்லென்ற போதே சுடுதென்ற லேதென்றா
எல்லென்ற பாவிக் ககப்பட்டாள் - கல்லால்

௪௪௧. விரவிதேர் வந்தாலு மெல்லியலீர் நம்மூர்க்
கிரவிதேர் வாராதிங் கென்றாள் - கரதலத்தி

௪௪௨. லென்று திருவிளையாட் டானநாட் கண்புதைத்த
தின்று முளதோ விறைக்கென்றாள் - கொன்றைக்

௪௪௩. கிணைவிழியின் முத்துகுத்தா ளெய்யாதே யென்று
கணைமதனைத் தாழுங் கதைபோ - லிணைமேல்

௪௪௪. விழுந்தா ளெழுந்தஞ்சி வேதாவின் கற்பங்
கழிந்தாளிற் கங்குல் கழிந்தா - ளெழுந்தாள்பி

௪௪௫. னேனைக் கருங்குழலீ ரின்றைக்கெவ் வாறுபெரு
மானைப் பிடிக்க வகையென்றாள் - கானக்

௪௪௬. குழலிலே கண்ணிவைத்தாள் கொங்கையில்வா ரிட்டாள்
விழியைவலை யாய்த்திரைய விட்டாள் - பொழுதுணர்ந்து

௪௪௭. நின்றாள் வழிநோக்கி நிற்பா ணிலையறியச்
சென்றாடு தீர்த்தன் சிராப்பளியான் - கன்றாப்பூ

௪௪௮. ரொள்ளிய தாணு வொருபாலன் பாலாழிப்
பள்ள னயனெழுந்த பாகத்தான் - றள்ளித்தன்

௪௪௯. குன்ற மிடந்தவனைக் கொல்லாமற் பாரிடந்த
பன்றி சபதம் பரிகரித்தா - னன்றறியாப்

௪௫௦. பாணனிடத் தொன்றியருட் பாணனைக்காத் தான்வடநூற்
பாணனியாழ்ப் பாணன்பண் பாடினான் - சேணகரா

௪௫௧. னப்பாலைக் கப்பாலா னப்பாலற் கேவலைவா
னிப்பால னண்டநிறுத் தெண்கையான் - மூப்பாலா

௪௫௨. முத்தியான் முத்தியான் முத்தா வணமகிழ்வான்
மத்தியா னக்கதிரின் வைகுவான் - பத்தி

௪௫௩. யரிச்சந் திரனை யருச்சுனனைத் தன்கண்
கரிச்ச பகீரதனைக் காத்தான் - றரிச்ச

௪௫௪. மரிச்சவனை யென்று மரிப்பியா னண்ட
மரிச்சரிச்ச தூளே யணிவான் - விரிச்சிருவர்

௪௫௫. பாடுஞ் செவியான் பரத்தையடை யார்செவியா
னாடுஞ் செவியா னருட்செவியான் - காடணுகிப்

௪௫௬. பன்னியர்கள் கூறை பறித்தான் பசுங்கனக
மின்னியநற் றேரேறி மேவினான் - முன்னிவளுந்

௪௫௭. தானை கொடுநடந்து தாக்கினாள் காளத்தி
யானை வலையி லகப்படுமோ - வானமுய்ய

௪௫௮. வெம்புநர கேசரியை வெள்ளுகிரி னுள்ளுஞ்
சிம்பு ளொருவருக்குச் சிக்குமோ - வம்புதெரி

௪௫௯. வெஞ்சாப வேடன் விழிபறித்தே யுட்புகுத்த
பஞ்சா னனந்தான் பயப்படுமோ - கஞ்சநறும்

௪௬௦. பூவிற் புலிநகத்தன் பொற்கைநகத் தானுறக்கு
மாவிற் புலியொருவர்க் கஞ்சுமோ - நாவிலிவள்

௪௬௧. பன்கலைகற் றுண்டோ பயமுறுத்தப் போய்ப்புகுந்தா
டன்கலையுந் தோற்று டரங்கித்தாள் - புன்கலைகள்

௪௬௨. போலே பெருமானும் புன்முறுவல் செய்துதேர்
மேலேக மற்றை விழாவீதிப் - பாலொருத்தி

## தேரிவை.

௪௬௩. பக்கமலை வேதா வழகர்பு ராசியிலே
தக்க மதிமந் தரநாட்டி - மிக்க

௪௬௪. கரணவடம் பூட்டிக் கலையாற் கடையத்
திருவவதா ரஞ்செய் தெரிவை - சுருதிபணி

௪௬௫. நங்கயிலைக் குன்று நறைக்காந் தளுமனைய
செங்களபக் கொங்கையாள் செங்கையா - ளிங்கிதவேள்

௪௬௬. வில்லின் வரிநாரி மென்கதலித் தண்டனைய
வல்லி யுரோமத்தாள் வாமத்தாள் - சில்பொழுதி

௪௬௭. லல்கு மிமையோ ரமுதுஞ் சிவனமுது
நல்குமத ரோட்டத்தா ளோட்டத்தாள் - புல்காமல்

௪௬௮. வண்டகலுஞ் சண்பகமு மாயோன் வலம்புரியுங்
கண்டனைய துண்டத்தாள் கண்டத்தாள் - வெண்டரளச்

௪௬௯. சோதிக் கழையெனவே சூதத் தளிரெனவே
சாதிக்குந் தோளினா டாளினாள் - சீதளித்த

௪௭௦. நீண்மண் டிலத்து நிலாவு மிருளுட்போற்
கேழ்மந்த காசத்தாள் கேசத்தாள் - சூழ்மணியின்

சஎக. பைக்கொண்ட மாதளையும் பங்கயமு மென்றுலகோர்
கைக்கொண்ட தந்தத்தாள் கந்தத்தாள் - செய்க்குண்

சஎஉ. மடையோதி மப்பெடைக்கும் வஞ்சிக் கொடிக்கு
மிடையா நடையா ளிடையாள் - படைமதனால்

சஎந. வாசித்தார் கொங்கைகளை வாசித்தார் கூந்தலுக்கு
வாசித்தார் கொய்பூ வனத்திலே - தூசினிடை

சஎச. கண்டு கொடிகள் கடிது பறமேற
வண்டு விழியின் மறைவெய்தத் - தொண்டையிதழ்

சஎரு. தன்னை யுறநோக்கித் தத்தை முகஞ்சிவப்பக்
கன்னி மயில்வெருவிக் கண்பரப்ப - வன்னமுலை

சஎசு. வற்கண்டு கூட்டமிட மஞ்சரிகள் கண்டனைய
சொற்கண்டு நைந்துகனி சோர்ந்துவிழ - நிற்குங்

சஎஎ. கிளைத்தோளைக் கண்டு கிளைவளைய மூரன்
முளைக்கே முலைகண் முகிழ்ப்ப - வளைக்கடகப்

சஎஅ. பாணித் திரள்கண்டு பல்லவங்கள் கைகுலைப்ப
மாணிக்கப் பீடத்தில் வந்தேறி - நீணிலத்தி

சஎகூ. லஞ்ச மவற்றையெலா மஞ்ச லெனநிறுத்தி
வஞ்ச வசந்தனைநீ வாவென்று - விஞ்சியவென்

சஅ0. ஞைசை யுரைபோ யருட்கயிலை யார்க்கென்ன
பாசுணமுண் டஞ்சவேன் மற்றென்னப் - பூசலிடுங்

சஅக. கோகிலத்தை யேகென்னக் கோகிலமு மும்பர்கோன்
மாகுயிலாய்ப் பட்ட வகைசொல்ல - மோகத்தை

சஅஉ. யிட்டமத னுபோ யிசையென்ன மற்றவனுந்
துட்ட நயனஞ் சுடுமென்னக் - கிட்டிமால்

சஅந. வண்டு பகரென்ன வண்சிலந்தி நூல்பிணிக்கி
னண்டி விடுவிப்பா ராரென்னத் - தண்டலையிற்

சஅச. பூவைகா ளன்பர்பாற் போமென்ன வேடனுளன்
பாவையறி யாயோ பகரென்னக் - கோவித்து

சஅரு. மாங்குயிலின் மெய்கருக வண்டு பொறியுண்ண
தேங்கணைத்திற் பூவை திரையெய்த - வேங்கித்

சஅசு. துரத்துமிளங் காற்றுழலச் சூறைகொளும் பஞ்ச
சரத்தனரு வாகச் சபித்துத் - திருத்திழையீர்

சஅஎ. பொல்லா மரத்தின் பொழிலைத் துறந்துபோய்க்
கல்லா லடியதனைக் காண்பேமோ - நல்லபணி

சஅஅ. மத்தகத்தின் மீதிலே மாணிக்க மிட்டவர்க்கு
முத்தமிட நாமு முயல்வேமோ - பத்திநூல்

௪௮௯. கீரனு வைக்கொண்டு கேட்டார் தொடைநமது
கீரநா வைக்கொண்டு கேட்பேமோ - தாரணியி

௪௯0. லவ்வே தனைநினைந்தா ளையமோ யாசையெனு
மிவ்வே தனைநினையீ ரென்பேமோ - செவ்வேயாய்

௪௯௧. மெச்சிமவான் றன்மகளார் வேந்தை மடலெழுதிப்
பச்சிமவா சற்படிந்து பார்ப்பேமோ - நிச்சயித்துக்

௪௯௨. காமருவு நீழற் கழைமுகரி நீர்க்கனக
மாமணலிற் கூடல் வளைப்பேமோ - நாமெலாஞ்

௪௯௩. சொல்லீ ரெனவவருஞ் சோகமே னிப்பொழுதே
வல்லீ பவனி வருவரெனு - மெல்லைக்கண்

௪௯௪. வட்டக் குடையநந்த மாமன் மகத்திமையோ
ரிட்டத் தினைக்கெடுத்தா ரென்றூட - மூட்டத்தன்

௪௯௫. சீத விழியென்று சீர்ப்பதத்தை முன்பணியுஞ்
சோதி மலரைச் சுமப்பானும் - போதிலே

௪௯௬. தங்கித் தனது தலையென்று பிச்சைகொளுந்
துங்கக் கலத்தைச் சுமப்பானுஞ் - செங்கையிலே

௪௯௭. யாபரணந் தன்னை யருளிற் சுமப்பானுந்
தாபதரும் போற்றத் தடந்தேரிற் - பூபரண

௪௯௮. குண்டலத்தான் சைலங் குடிகொண்டா னோர்மூன்று
மண்டலத்தான் மூவிரண்டு மண்டலத்தான் - கண்ட

௪௯௯. சலந்தரனைக் கொன்றான் சதாசிவனாய் நின்றா
னலந்த வடியாரை யாள்வான் - பலந்தருநற்

௫00. காளகண்டன் விண்ணோர்கள் கண்டன் சசிகண்ட
னீளகண்டன் கண்ணின்ற நெற்றியான் - கீளுடையான்

௫0௧. பூளை யணிசடையன் போற்றியால் பூசிக்க
வாளையுமி ழாழி வழங்கினோ - னாளுந்

௫0௨. திடத்தொடுவந் தானிவளுந் தேருக்குத் தேரும்
வடத்துக்கு நேரே வடமுங் - கொடிக்குக்

௫0௩. கொடியுங் கொடுவந்தாள் கும்பமெதி ரிட்டாள்
வடிவஞ்சுக் கேயுண்ட மாற்றா - னிடையிலே

௫0௪. யெய்தா னிவளொருத்தி யென்செய்வா ளெய்தவனை
வைதாள் சிவன்கண்ணை வாழ்த்தினாள் - கைதா

௫0௫. னயர்த்தாள்பொன் பூண்டா ளவர்மேனி தீண்ட
வியர்த்தாள் பெருமூச்சு விட்டா - ளுயிர்த்தா

௫0௬. டருமமுரைத் தீரென்றாள் சார்ந்தாரைக் காத்தார்
விருதுவிடா தேமயிலை மீட்டார் - தெருவகல

## பேரிளம்பெண்.

௫0௭. மண்ணரசர் விண்ணரசர் மாற்றரசர் போற்றுபெரும்
பெண்ணரசெ னம்பணியும் பேரிளம்பெ - ணண்ணி

௫0௮. யியலு மிசையுமி ரெண்ணிரண்டுங் கண்டு
மயிலுங் குயிலு மருவாள் - புயலொழுங்கு

௫0௯. தீரத் தெழுதலிலாத் தெண்டிரைபோ லஞ்சனங்க
ளோரத் தெழுதாத வொண்கண்ணாள் - சேரத்

௫௧0. திருத்தி யெவர்க்குஞ் செவிபொருந்த விண்ணோ
ரருத்தி யசனவச னத்தா - ளொருத்தி

௫௧௧. முலைவளைத்த மார்பர்க்கோ முன்னிற்பே மென்று
தலைவளைத்து நின்றபடி தானோ - சிலைவடத்தா

௫௧௨. ரெம்மலையுந் தாழவா ழிக்கயிலை யைத்தாமுஞ்
செம்மையுட னேவணக்கஞ் செய்தவோ - தம்மி

௫௧௩. லுருக்கமறக் காணிக் குடன்பிறந்த மல்லா
னெருக்கியுடன் சாய்ந்த நிலையோ - செருக்கி

௫௧௪. வரிவண் புளக மலையான போதே
சரிவுந் தருமென்று தானோ - தெரியாத

௫௧௫. பொய்யென்பா ரிவ்விடையைப் பொய்யோமெய் யோவென்
னையவிறங்கி யெட்டிப் பார்த்தவோ - மெய்யா

௫௧௬. மிடையுமிடை யிங்கே யிருக்கொணா தென்று
படியி லிடந்தேடும் பண்போ - நடுவே

௫௧௭. யெழுகளியர் வாழ்வி லிறுமாந்தார்க் கவ்வாழ்
வொழிய முடிவளைத்தற் கொப்போ - விழியினாற்

௫௧௮. சிங்கத்தைப் பார்க்கச் சிறிதிழிந்து பின்னிடைந்த
வெங்கும்ப மாவின் விகாரமோ - பொங்கப்

௫௧௯. பொருப்பை வளைத்தானைப் போர்பொருவோ மென்று
விருப்புலகோ டாநின்ற வீறோ - மருப்பானை

௫௨0. யுற்றிறைஞ்சு மாகண் டுடல்வளைத்த வோவென்னச்
சற்றிறைஞ்சி நின்ற தனதடத்தாள் - கற்றைக்

௫௨௧. கரிய குழற்கிரண்டு கன்னியரே சேரு
மிருகழலே சூடுமல ரென்றுஞ் - சரிவுறினு

௫௨௨. மற்புதமாங் கொங்கைக் கடலானை பூசித்த
பொற்புடைய மேனியே பூணென்றுஞ் - சொற்பதத்தி

௫௨௩. னந்தா விளக்கெனவே நக்கீரர் சொன்னதிரு
வந்தாதி யேகா தணியென்றும் - புந்தியுடன்

௫௨௪. மெய்க்காளன் பூசித்தார் மேற்சா ளரங்கொழுகை
கைக்கா கியகங் கணமென்றுந் - திக்கெலா

௫௨௫. மின்னுதற்குச் செய்கோயில் வெள்ளிவட்டி னன்னீறே
தன்னுதற்குச் சிந்தூரந் தானென்றும் - பன்னுதற்கு

௫௨௬. வான்சிலம்பி பூசித்தார் வண்சிலம்பைச் சூழுவதே
தென்சிலம்பு பூந்தாட் சிலம்பென்று - மூன்சுவைத்தார்

௫௨௭. நற்பணிகள் செய்வதுவே நம்பணிக ளாமென்றும்
பொற்பணிகள் பூணுக பொற்பினாள் - கற்பகத்தி

௫௨௮. னேடலங்கு மாலை யிளம்பாளைத் தேமாலை
நீடரங்க முத்த நிலாமாலை - யாடரங்கிற்

௫௨௯. சோதி வயிரச் சுடரின் றவிசேறித்
தாதி யொருத்தி தனைநோக்கி - வேதிகையிற்

௫௩௦. சந்தமாப் பன்மணிக டன்முன் பரப்பென்ன
வந்த மணிக ளவைபரப்ப - முந்தி

௫௩௧. நிறைகூ டலைவளைத்தா ணீலத்தைக் கண்டா
ளிறையோன் களங்கண்டே னென்றாள் - பிறகினிய

௫௩௨. செம்பவளங் கண்டா டிருமேனி கண்டதுபோ
லும்பர்பிரா னாமுகை யுன்னினாள் - கொம்பனையாள்

௫௩௩. பச்சைதனைக் கண்டாளோர் பாதியையென் போல்வார்க்கு
வச்சவடி வோவென்று வாழ்த்தினா - ளிச்சை

௫௩௪. வயிரத்தைக் கண்டாள் வயிரத்தா ணைங்க
ளுயிருக்குச் சார்பென் றுவைத்தா - ளயர்வுடனே

௫௩௫. முத்தைக்கண் டாளிதுவேய் முத்தோவென் றாளயலா
ரொத்தைக்கண் டாயெனவே யேகினா - ரத்தனையுங்

௫௩௬. காணச் செழுந்தென் கயிலாய மாமலையா
னாணிச்செம் பொன்முகரி யாற்றினான் - வாணி

௫௩௭. யரிபிரமர் போற்றுபுரி யாற்றார்நன் னுட
னுரியதிருக் காளத்தி யூரான் - வரியளிகள்

௫௩௮. கூடிவிளை யாடுதிருக் கொன்றைச் செழுந்தாரான்
பாடியநால் வேதப் பரியினா - னாடினனை

௫௩௯. யாதரிக்கு மொற்றைமருப் பஞ்சந்தி யான்றிதியான்
மேதினியை யுண்ட விடைக்கொடியான் - மூதண்டஞ்

௫௪௦. சென்றதிரக் கம்பிக்குந் தெய்வ முரசுடையா
னன்றுதிரு நீல்கண்ட ராணையான் - மன்றற்

௫௪௧. கரந்தையான் செங்கனகக் கல்லா லடியான்
சுரந்தவன்பர் நெஞ்சத் துணைவன் - வரந்தருவா

௫௪௨. னத்துவிதன் சுத்த னருளாம்பெண் ணோர்பாகன்
வித்துவித மின்றி விளைவிப்பா - னத்தனைக்கு

௫௪௩. மான்பகுதி யாங்கார மாவிந்து நாதாந்தத்
தூன்பகுதி யாயுயிரா யுள்ளுறீஇத் - தேன்பா

௫௪௪. யனந்தவித நாம னனைத்துலகும் பெற்றான்
வனந்த சராசரத்தில் வாழ்வா - னினைந்தடியார்

௫௪௫. பாடவிரந் திட்டான் பசியாற்றி னான்சந்தா
யோடியுழன் றான்புறம்புக் குள்ளானான் - வாடு

௫௪௬. முதலைவாய்ச் சேயழைத்தான் மூங்கைகவி கொண்டான்
குதிரைநரி யாக்கிக் கொடுத்தான் - மதுரையிலே

௫௪௭. கூனகற்றி னான்வெங் கொதிப்பகற்றி னானங்கி
தானகற்றி னான்கற்பந் தள்ளினா - னீனர்களை

௫௪௮. யேடேற்றி வன்கழுவி லேற்றினான் கற்புணையைக்
கோடேற்றி நீற்றறைக் குளிர்வித்தான் - வீடேற்றி

௫௪௯. யீடேற்று வான்புழுக்க வீறாகத் தன்பதியின்
மாடேற்று வான்கட்டு வாங்கத்தான் - கோடை

௫௫௦. வசந்தா டவிதழைத்த வாறாய்ச் சிவந்த
பசந்தாடி யின்னலையின் பந்தி - யசைந்தாடப்

௫௫௧. பூவுலகெல் லாம்புகழப் பொற்பூவி னன்மாரி
தூவத் திருத்தேர்மேற் றோன்றுதலு - மாவலாற்

௫௫௨. கூட லொழிந்தோடிக் கூப்பிட்டாள் போகாதே
நீடு மணித்தேரி னில்லென்றா - டேடரிய

௫௫௩. வள்ளலே தெய்வ மலைக்கொழுந்தே மாமணியே
தெள்ளமுதே தேனே செழும்பாகே - யுள்ளத்

௫௫௪. தொளிவிளக்கே நான்மறைக ளோலமிடுங் குன்றே
தெளிபொருளே தொல்லைச் சிவனே - வெளிவெளியே

௫௫௫. காலக் கடைத்தனியே கண்ணேயென் காட்சியே
மாலைத் திருக்கூத்தே வாரணமே - ஞாலமே

௫௫௬. பல்லுயிர்க்குந் தாயே பசுபதியே பல்லுயிர்கள்
செல்லிடமே யெல்லோர்க்குஞ் செல்வமே - நல்லுறவே

௫௫௭. பாலே பழமேநூல் பாடும் பரங்கருணை
யாலே விளைவிளைவே யாதியே - மூலமே

௫௫௮. யாரா வமுதே யடியேன் மனமுனது
பாரா முகந்தனக்குப் பற்றுமோ - தீராமற்

௫௫௯. சார்ந்தாரைக் காத்தார்மெய்த் தன்மமோ வன்மந்தா
னோர்ந்தாரைத் தள்ளிவிட னீதியோ - சோர்ந்து

௫௬௦. பழைத்தவிழி நீரிலே வாடினேன் பாரீ
ரழைத்தெமைவாழ் விக்கு மரசே - யுழைத்தடக்கை

௫௬௧. யையரோ யும்மைப்போ லாக மெலும்பானேன்
வெய்ய வடிசில் விடமானே - னையம்புக்

௫௬௨. கோடி யுழன்றே னுமையே நினைவானேன்
கூடி யணையாக் குணங்கண்டீர் - வீடு

௫௬௩. ரலைப்பொன் முகரியிலே யாடுவீ ரிந்த
முலைப்பொன் முகரியிலே மூழ்கீர் - கலைத்தெளிவை

௫௬௪. வெண்பாவைக் கிங்கொருவன் வெண்பாவைக் கைக்கொண்
கண்பாவை துஞ்சக் கனிந்தருளீர் - பெண்பாவி [டீர்

௫௬௫. யிவ்வேட னண்ணி யிணைவிழிமேல் வைத்தானு
மவ்வேடன் போலுமக் காகாதோ - மைவேட

௫௬௬. ஞானப்பூங் கோதைக்கு நாயகரே யிப்பவனி
மானப்பூங் கோதையளா வாட்டாதோ - தேனக்கு

௫௬௭. வண்டார் குழலார் மணவாள ரேயுயிரை
வெண்டார் குழலாக்க வேண்டுமோ - தொண்டானோர்

௫௬௮. தாமபய மென்னச் சலதியிலே காத்தநீர்
காம பயமெனக்குக் கற்பித்தீர் - மாமையயி

௫௬௯. லிச்சைத்தீ வெம்மை யிருக்கவே யென்னுளிந்தக்
கொச்சைத்தீ யைக்கையிற் கொண்டீரோ - பச்சைநிற

௫௭௦. நீலிக் குறவான நிட்டூர மோகொன்றை
பாலிக்கி லீரிதென்ன பாவமோ - சாலவறம்

௫௭௧. பூண்டதிரு மேற்பூச்சைப் பூசநினைந் தேனோதான்
வேண்டுமணி மேனி வெதும்பவோ வாண்டகையே

௫௭௨. யாண்டருளீ ரென்பாளை யாண்டருளா தப்படியே
சேண்டரணி மாதர் திசைமாதர் - நீண்ட

௫௭௩. திரைமடவார் பூமடவார் தெய்வ மடவார்
வரைமடவார் நாக மடவார் - தரைமடவா

௫௭௪. ரொல்லாரு மால்கொண் டிறைவா வெனவிறைஞ்சச்
செல்லா டகக்கிரணத் தேரேறிக் - கல்லொலி

௫௭௫. னத்தன் சதுமுகன்மா லாயிரங்கண் ணன்மணிமான்
சித்திர சேனன் சிவகோச - னத்திசில

௫௭௬. வேடன் சிலந்தியிரு மெல்லியலார் நக்கிரன்
சேட னடைந்த சிவபிரா - னுடல்

௫௭௭. விருதுகட்டுஞ் சோதி விடங்கன்மால் வெள்ளை
யெருதுகட்டுங் காளத்தி யீசன் - சுருதித்

௫௭௮. திலகனபி ராமன் செறிவீதி தோறு
முலகறியப் போந்தா னுலா.

திருக்காளத்தி நாதருலா

முற்றிற்று.

# திருக்காளத்தி நாதருலாப் பாடபேதம்.

காப்பு: சந்தியார். ஆனார்.

௧. சிறப்பின்.

௨. முற்பொருள். குலக்குன்றாய். சிலமாய்ச்.

௩. ஐந்தியற்றி. கடந்து தான் புரியு மவ்வேலை. ஆக்குவிக்கும்.

௫. அடகயில்வார் போற்றும்.

௮. கொற்றமணிக் காஞ்சியிலே.

௯. தென்றற் கயிலை.

௧௨. தெற்குவருஞ்.

௧௩. அகத்திய மாங் குன்றி லழை த்த. பாங்காய் - மிகுத்த.

௧௬. மும்மைப், பதினா யிரர்.

௧௮. கண்டுதொழ. மற்றவரை.

௧௯. கொல்லென்ன. பிரமத்தி. பிர்ம்மகத்தி.

௨௧. தோன்றி மலரயனை. பின் னும் - பரமகத்து.

௨௨. அவன் போற்ற முகரிபுவா, நன்மகவை யீயவந்த நாளிலே.

௨௩. நல்கினேன் - பாடவிகல்.

௨௫. தாக்கிய சாபம். வாக்குவியா கும்படிக்கு வாய்தந்தோன்.

௨௬. சந்திரன்மா சத்தி.

௨௭. அக்கினிப் பகவன். சந்த.

௨௯. பெரிய சித்திரசேனன்.

௩௦. பேரூராம்.

௩௨. கபாலமுத்தி.

௩௫. தீர்த்தத் தமர்ந்தருள்வான். உடைய பொற்.

௩௬. மாயூரத் திருச்சுனை.

௩௭. பாங்கான் - திருத்துமுதல்.

௩௮. *கங்கைத்தலத்தான்.

௪௦. சிவன்பட.

௪௩. தான் கொள்ள.

௪௪. பட்டதற்பின்.

௪௫. பொருதும். பொருந்தப். உடு க்கச் - செய்ந்நாளில். முன்னாளில்.

௪௬. தன்னைப்பே ரிட்டோருங்.

௪௭. காறிட்டி. நீறிட்டி.

௪௯. கீர னவனன்பை. பாரென் றிருக்க.

௫௦. நின்றளவில்.

௫௧. அப்பிவிட. மற்றைக்கண்.

௫௨. எண்ணிக்.

௫௩. சயிலமடை.

௫௪. கீரற் கருளாற் சரீரத்தை.

௫௫. பாண்டியனார் நாட்டிலுந்தன் பாரத்திருவடியை, ஈண்டித் திருவ டியி லேறவே.

௫௬. மானாரை யிவ்வாறு.

௫௭. முன்னமறைத்.

௫௮. காபாலியென்னுங்.

௫௯. குழலா ருடன்புகழ்ந்த.

௬௦. மிறைத் தோதுகின்ற பாகவ தத் தம்மானை.

௬௧. பூசச் சுடுந்திரு. பூசியிடும்.

௬௨. ஆற்று வளநாடன்.

௬௫. புரத்தா - னனிதஞ்சை. நனிநஞ்சை. தனதஞ்சை. கனதஞ் சை.

௬௯. கயிலைச் சங்கரனும். நடந் தேமென் - றுலகில்.

௭௦. இரும்பையெலாங் கூட்டி.

௭௧. கோயி லலையேறு மாபுரங் கள்.

௭௨. பாகத்தில்.

௭௩. சச்சன்.

௭௮. *சொல்வார்க்கிலவன். கலை க்காட்டன்.

௭௯ - ௮௦. நடை யிரவன். ஒருத் தனன்பு. நாதன் - படியைக், கவ ரொண் படையெடுத்துக் காகருந் திதியான், மவுனன் கயிலைவடி வாள ன் - சுவையூ, ணருத்தியிடுங் கண்ண ப்ப னன்பறிய வேண்டித், திருத்திய ன். கருத்தடைத்து.

௮௧. யோககரணன். புரிவோரை.

௮௨. மாதுகத்தன். யோதுநீர்.

௮௩. சைவத்தா லுய்கை.

---

* இவ்வடையாள மிட்டவைகள் சிறந்த பாடங்களெனக்கொள்க.

௯௧. பேரணையான் றந்த. கீரனாருக். கீரைநாருக்.

௯௩. மேவி வளர்ந்த; விளைந்த.

௯௮. நாகத்தானம்பிறு னம்பிறன். சேகிற்.

௯௯. பழகியெறி.

௧௦௦. தலையின். தருகன்னச் சந்தனஞ்.

௧௦௨. பணியும் பணியும்.

௧௦௩. காட்டுதுர. நீடுதுர.

௧௦௮. கயிலாயவலை.

௧௧௨. * என்றுவிற் பாலானுன்.

௧௧௩. தும்பையன் சண்பகன் சுந்தரன் சங்கினன்; சுந்தரன் தந்திரன்.

௧௧௫. தெற்கின் கயிலை.

௧௧௭ - ௧௧௮. இரணியமெய்த், திண்.

௧௨௦. நள்ளிருளின்.

௧௨௧. கரந்த.

௧௨௩. * அபிராமி முளரிக்கு.

௧௨௪. * அங்குரித்து. அங்குதித்து.

௧௩௨. கலவைத் தளிர்சாத்தி.

௧௩௭. பாராது.

௧௩௮. அவ்விருளில்.

௧௩௯. மங்கையுடன் சேக்கை வளர்ந்தருளி.

௧௪௦. செருப்பணிந்த.

௧௪௭. தோடும் புறத்தார்த்து.

௧௪௮. சகோதரனென்று. மகோதரநீலத்தை.

௧௪௯. மா ணிக்கவடஞ் சேர்ந்திலங்க.

௧௫௨. ஒன்பதின்ம ருற்ற.

௧௫௩. தாருகனைக் காய்ந்தானுநஞ்.

௧௫௬. ஓர் செங்கை.

௧௫௭. நச்சுக்கிரநவ்வி.

௧௫௯. தொண்டர் குழாங்.

௧௬௦. நாக, சரமகிரச் சங்கந் தழங்க. செம்பொ, னரசகிரச் சங்கமதிர.

௧௬௨. போல்வெண் குடைநிழற்ற.

௧௬௩. பார்த்துழல.

௧௬௫. காளாஞ்சி.

௧௬௮. மணிகும்பம்.

௧௬௯. யாழ் - செங்கோடு.

௧௭௧. * அண்சந் திரனைவென் றுண்டவர்க்கு. அஞ்சந் திரற்குவே றுண்டவர்க்கு.

௧௭௨. வள்ளலனு மத்துவச.

௧௭௩. கிரியுமரியும். கரியுமறியுங் கடாவ.

௧௭௫. ஊனுருகிச்.

௧௭௬. தொழுனும் பொற், பெற்ற.

௧௭௭. * எனு மாதாரபூதர்.

௧௮௩. கழுநர்.

௧௮௪. தாக்க.

௧௮௫. கண்டோரும். கொண்டோரும்.

௧௮௬, நின்றோரும். * சிவன்செல் கன்வழியே சென்றோரும்-பாவனைக் குள்.

௧௮௭. விளக்கேத்தும் வித்தகரும்.

௧௮௮. பண்களித்துப்.

௧௯௦. * பூழியருங் கேரளரும்.

௧௯௨. சிட்டருயரநின்று சேவிப்ப.

௧௯௪. ஆறு கோத்திரரும். பண்டைநாற்.

௧௯௫. * சுத்தச்சிவாகமத்துத். வேதபாற்கரரும்.

௧௯௬. வைத்தகோயிற். உத்தரிக்குங் கூல முடையாரும்.

௧௯௮. தேவ ரடியா, ரறு.

௨௦௦. பொலிந்தேற. பொலிந்தோங்க.

௨௦௨. பத்துப்பிறப்புப். செத்துப்பிறவாச் சிவன். நித்திரையிற்.

௨௦௪. நம்பிக்கு முன்னின்ற.

௨௦௭. கொழுந்தன்

௨௦௮. நாக குலத்திலுள்ள நாக.

௨௧௪. * அலைவா ழலையளகத் தாரும்.

௨௨௫. தேவிமார்.

௨௨௭. முந்தித்தான்.

௨௨௮. தேங்கொடிரு மாலிகையைச் சேவியீர். திருவாசிகையைத் தெண்டனிடீர்.

௨௩௨. * மேலேயிருந்த.

௨௩௭. பூவையணிந்தீர். காயையணைவீர்.

௨௪௫. வாயிற் பிறவாத.

௨௪௬. குளிர்தாளம்.

௨௪௭. வேட்டிருக்குந்திண்ணனார்.

௨௪௯. தழுவும் புயங்கேசன்.

௨௫0. சோமனெறிச்சடை.

௨௫௧. காமன் காவியம் போல்.

௨௫௬. அமுதக்குடமு மாக விருந்து. என்றவிட.

௨௬௬. ஞானவொளி.

௨௭௨. ஏற்றத் துரவான். சாற்றிய நீர்.

௨௭௩. புரவலனேய்.

௨௭௯. எனக்கென்பாளை.

௨௮௨. நாவிற் செறியாகாண்.

௨௮௬. * பாற்கடலீந் தாரையார்.

௨௮௮. அகப்படாதென்ன. கொண்டிருந்தாள். நாட்கொண்டிருந்தாள்.

௨௯௧. * ஆலினடையா ளலையாற்றிள; ஆல் - வயிறு.

௨௯௩. சிறுத்து.

௨௯௪. கலையென்ன வெழுங்கண்ணாள்.

௨௯௫. அமுதரணி யாட் கொண்டாள்.

௨௯௬. * ஒண்டொடியார்.

௨௯௭. ஒத்துக்கண் மையெழுதி யோதியைக்கோதிப்பின்னி.

௨௯௮. * தேருங்குணமும்; குணம் - நாணாகிய வண்டு.

௨௯௯. பணிக்காந்தி.

௩0௭. விஞ்சவே.

௩௧௧. போதில் விளையாடும் போதிலே.

௩௧௩. கழைக்காயங் கண்டங்.

௩௧௭ - ௩௧௮. கீழும், படிநிரையுமாலயனும் பல்லுயிருங் காணு.

௩௧௯. மலைக்கொழுந்தன் மார்பிலே வைக்க.

௩௨௨. மான்மேல்.

௩௨௩. மீதொருத்தி.

௩௨௬. புல்லாவிலை.

௩௨௭ - ௩௨௮. நல்லுடம்பிற் - குற்றுடம்பு செய்யோமோ கூத்தாட்டங். குற்றுடம்பு - குறுமையான வுடம்பு; திருக்குற்றாலத்தில் திருமால் சிவபெருமானானது ஈண்டு அறியற்பாலது. நிற்றமொரு.

௩௨௯. சங்கத் திடோமோ.

௩௩௨. * மதிச்சுமடர்; —மதியாகிய சுமையடையை உடையவர்; மதுரையிற் பிட்டுக்கு மண்சுமந்தது ஈண்டு அறியற்பாலது. இதத்தோடு நஞ்சை யிடோமோ.

௩௩௬. ஏழைக்குக் காட்டினீர்.

௩௩௭. மூப்மங்கை யுங்கடந்து.

௩௩௯. ஆடும் பரதத் தவன் சுரதக் கூத்தாடக், கூடுமிரு தாளக்.

௩௪0. புகன்று புகல்.

௩௪௧. மோசமுறக்.

௩௪௨. விடைபிரித்த.

௩௪௪. * காற்பொடியா னேனிலையே. காற்பொடியொவ் வானிந்தப்.

௩௪௬. ஏழுநிலக்.

௩௫0. வேரோடிய.

௩௫௧. தொழ. மேலாடு.

௩௫௩. பணிந்தாள் புழுங்கினாள்.

௩௫௫. * அண்டவெளிதினி. விண்டவரும்.

௩௫௬. மாதினிடத் தாரென்ன.

௩௫௭. மடவாளைக் கண்டனையே நெஞ்சங் கரைந்தாயோ.

௩௬௩. அல்லல், காண்டா யெனுமிந்தக்கள்வரை.

௩௬௮. சீரூர் பரிபுரத்து. ஆரூரன்.

௩௭0. * செய்தாலம் மங்கையர் போல் வாயென்றே.

௩௭௪. * வள்ளை கருகாதாள்.

௩௭௬. * விம்முமுலை.

௩௭௭. * நூலாங்கொறுக்கை சிந்திப்பாள்.

௩௭௮. பன்னு துடையின் பரம்பையாள்.

௩௭௯. * கலைக் கால் வராலினத்தாள்.

௩௮0. புறம்பொருளும்.

௩௮௧. யானும்.

௩௮௮. போக்கரோ.

௩௮௯. பித்தரிவ, ராமென்றே னேதுமறி யாமென்றார்.

௩௯௩. ஆளுந் துறையிறைவ ரானோர்காண்.

௩௯௬. பேரருளன்.

௩௯௯. அம்பொற்.

௪௦௦. விண்ணோர் சிரவடத்தார் கஞ்சன்.

௪௦௪. * அம்பின், கொத்தேறி.

௪௦௫. வேதாத் தியானத்தீர்.

௪௦௭. ஆக்கிடவோ.

௪௧௩. சாபம் போக்கினீர்.

௪௧௬. நன்மான்போல். எனவணைத்தார்.

௪௧௮. அதிரூப ரேகை.

௪௧௯. அழகு செய்ய.

௪௨௪. பூசலிடு முன்னே.

௪௨௫. நகைத்தமுகை.

௪௩௦. * ஆய்ந்தாள்.

௪௩௧. அநங்கவதி காரியிருந் தந்தரங்க போகந்.

௪௪௨. * திருவிளையாட் டாடினாள் கண்புதைப்பது.

௪௪௪. அஞ்சுவேதாவின்.

௪௪௬. வலை யாய்த்திரைய வீசினாள்.

௪௪௭. நிலையறிவான்.

௪௪௮. * ஒருதாணு பாலாழி.

௪௪௯. பரிகரித்தான் மன்றேறி.

௪௫௧. முப்பாலான்.

௪௫௨. * முத்தா ளனைமகிழ்வான்- மூன்று திருவடிகளையுடைய பிருங்கி முனிவரை மகிழ்பவர்.

௪௫௯. * உட்புகுத்தும். உட்கொண்ட.

௪௬௧. * போய்ப்பயந்தாள்.

௪௬௬. வில்லி னிவர்நாரி.

௪௬௯. * சூதக்குழையெனவே.

௪௭௪. மறையெய்த.

௪௭௫. வெரிநிற் கண்புதைப்ப.

௪௭௬. மஞ்சரியைக் கண்டளகம்.

௪௭௮. * பாணித் தளிர் கண்டு. குலைய.

௪௭௯. அஞ்ச லெனவழைத்து.

௪௮௨. * சுட்டநயனம்.

௪௮௪. * பூவைகா ளன்றில்காள்.

௪௮௫. * தேங்கன்றில் பூவை சிறையெய்த. பூவை திரண்டேற-ஓங்கித்.

௪௮௬. * இளங்கால் சுழல.

௪௮௮. * முத்தமிட்டு.

௪௯௨. * கனமுகரி.

௪௯௪. மாசிமகத்து. இட்டத்தினி தெடுத்தார்.

௪௯௫. சீதவிழி யொன்றிடந்து சீர்ப்பதத்தி லேயணியுஞ்.

௪௯௬. தங்கிக் கிடக்குந் தலை. தங்கித் தனக்குத் தலையென்றே. தூங்கக் கமலஞ்சுமப்பானும், செங்கையினில்.

௪௯௮. சைவங். சண்டச்.

௪௯௯. அடியவரை.

௫௦௧. அணியன் புருடமான் பூசித்தான், காளைய னன்பகலாக் கண்ணினான்; புருடமான் - புருஷ மிருகம். சிவபெருமானைப் புருஷமிருகம் பூசித்துப் பேறுபெற்றதலம் திருமழபாடி; இக்கதையை அத்தல புராணத்தா லுணர்க.

௫௦௩. சிக்கே யுண்ட. சுக்கேயிட்ட.

௫௦௬. காத்த.

௫௦௮. இசையும் ரெண்ணிரண்டும்.

௫௦௯. * ஓரத் தெழுதவிலா.

௫௧௧. சிலைவடத்தால்.

௫௧௨. இக்கயிலைக்குத்.

௫௧௩. பிறந்தோமென்று.

௫௧௪. * தெரியாதார்.

௫௧௬. * இடையொடியும்.

௫௧௮. சிங்கத்தைக்கண்டு சிறிதிழிந்து செல்லாத.

௫௧௯. உலகோடாகின்ற.

௫௨௬. வான்சிலந்தி.

௫௩௫. * ஏசினார்.

௫௩௯. * அஞ்சந்தி யானையான்.

௫௪௨. அரிதாட்பெண்.

௫௪௪. * அநந்த சரா சரத்தி லாவான்.

௫௫௦. பசந்தாடியின்னிளையின் பந்தி.

௫௫௨. நீடுதிருத் தேர்மேல்.

௫௫௬. பல்லுயிருஞ் செல்விடமே.

௫௫௭. பழமே பரமே.

௫௬௫. இவ்வேட மன்றி.

௫௭௧. மெய்ப்பூச்சு. வேண்டி.

௫௭௫. கண்ணான் கலைமான்.

௫௭௭. வீதி விடங்கனார் வெள்ளை.

௫௭௮. அபிராமஞ்.

# திருக்காளத்திநாதருலா அரும்பதவுரை.

காப்பு. விளங்கு அருள் அஞ்சந்தியான். களங்கர் உளம் சந்தியான்.

நூல்.

ங. சண்டம் - கொடுமை. வேலையைந்து - பஞ்சகிருத்தியம்.

ரு. அடகு அயில் ஆயத்தோர் - இலைகளை உண்ணுகின்ற கூட்டத்தாராகிய முனிவர்.

அ - கூ. முதுகுன்று - விருத்தாசலம். தென்றி - தெற்கு.

க0. போதன் - பிரமன்.

கக. மன்று - சிதம்பரம். மால் இரண்டு யோசனையில் நின்றுதொழுமிடம் திருவேங்கடமலை; 'தொழுதெதிரே கோடேறி, நின்ற முராரி' என்பர்பின்னும்; கஉ.

கஉ. முனி - அகத்தியர்.

கங. பங்கு - கூறு.

கரு. ஆலிக்கும் - முழங்கும்.

கசா. மொழித்தையல் - கலைமகள். அதிர - நடுங்க.

கரு - கசா. பாலர்பிறந்து.

கஅ. மகவு - உக்கிரன்.

ககூ. பம்மகத்தி - பிரஹ்மகத்தி.

உக. மகம்-மகநக்ஷத்திரம்; இஃது இத்தலத்தில் மிக்க விசேடமுடையது.

உஉ. நன்மகவை - ரிபுவென்னும் முனிவரனை.

கசா - உங. பிரமதேவர்க்குப் புத்திரர்முப்பதினுயிரவர் பிறந்தது முதலியவற்றை, ஸ்ரீகாளத்திபுராணம் நான்முகச்சருக்கத்தாலுணர்க.

உஉ - உங. ஈந்து நல்கினேன்.

உச. பாங்கலன் - ஒருமுனிவர். வெண்முளரியாள் - கலைமகள்.

உசா. நீலை - ஒருயோகினிமங்கை; "அமரா, ருலக மாந்தருள் யோகினி நீலையென்பவளும்","கற்பகநறுநீழல், வள்ளலு நீலையெனும் யோகினி மடவரலும்" என்பவை திருக்காளத்திப் புராணம்.

உஎ. அக்கினிப்பிரபன்-ஓரசுரன்; "ஆதரந்திக முக்கினிப் பிரபனு மசுரன்" என்பதனுலுணர்க; திருக்கா.

உஅ. வைதவிசிட்டன் - கௌதமர்; விசிட்டன் - விசேடமுடையவர்.

உகூ. சென்ற-பெய்ய. மணிமான்-ஓர்இயக்கன்; சித்திரசேனன்-ஒருகந்தருவன்; "திகழ்மணிமான் முன்னியக்கர்", "இனிய சித்திர சேனன் முன் னெனயா முசையிற், பணிவிசும்பிடைச் கந்தரு வரும்பணிந் தனரால்"என்பவற்றுலுணர்க; திருக்கா. குன்றம் அண்ணி மா சத்தி கூட்டுவோன்,— தென்கயிலைக்குத் தெற்கே ஸ்த்தாசலமென்றுமலையொன்றுள்ளது; "அட்டமா சித்திக ளணைதரு காளத்தி" என்பது, திருஞா. தே. கொல்லி. கக.

ஙக. ஒலி - காற்று

ஙங. "வல்லைவரு காளியை வகுத்துவலி யாகிமிகு தார கனைநீ, கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை.................காளத்திமலையே" என்பது, திருஞா. தே. திருவி. ங.

ஙச. மலை-கனகதுர்க்காம்பாமலை; இதுதென்கைலைக்கு வடக்குள்ளது. செல் - இடி. தீர்த்தம் - வச்சிரதீர்த்தம்.

ஙரு. அரகரதீர்த்தம் - ஹரஹரனென்பவன் உண்டாக்கியதீர்த்தம்; சிவத்திரவியங்களை அபகரித்த கொடும்பாவத்தால் நரகத்திற்கிடந்து துன்புற்ற கரபனென்னும் ஆதிசைவனொருவன் தன்னைக்கண்டு சகியாமல் சாநந்தரென்னுமுனிவர் ஹரஹரவென்று கூறியதைக்கேட்டு அப்பாவம் ஒழியப்பெற்று ஹரஹரனென்று பெயருள்ள ஓர்ஆதிசைவனுகப்பிறந்து இத்தலத்தையடைந்து வழிபட்டு அவன் உண்டாக்கியது. அங்கேசென்றோர்,ஹரஹரவென்றால்தாரையாகத்

தீர்த்தம் மேலேயிருந்துவிழுமென்றும் சொல்லுவதுண்டு; "உரைதரு மதன்வடபா லோங்கரு வித்தாரை, யரகரவெனின்வீழுமரகர தீர்த்தமெனுச், சுரர்முனி வரர்சொற்றுர்" என்பதனுலுணர்க; திருக்கா. பேராயிரமுடையன் - ஆயிரம்திருநாமங்களையுடையவர்; திருக்காளத்திநாதருக்குத் தனியே ஒருஸஹஸ்ரநாமமுள்ளது; அன்றி, மூலத்தானத்துக்குத்தெற்கே ௫ - நாழிகைவழித்தூரத்திலுள்ள தருமக்ஷேத்திரத்தில் எழுந்தருளிய ஸஹஸ்ரலிங்கேசுவரரென்னும் சிவலிங்கப்பெருமானை இம்மொழிகூறியதாகவும் ஊகித்தற்கிடமுண்டு.

௩௬. மயூரத்திருச்சுனை - மயூரன் பொருட்டு உண்டாக்கியசுனை; கேரளதேயத்திற் பிறந்தவனும் பொருளைவிரும்பித் தந்தையைக் கொன்றமகாபாவியுமான மயூரனென்பவன் அப்பாவத்தால் வருந்தி இத்தலத்தையடைந்தபொழுது சிவபெருமான் கருணைகூர்ந்து விருத்தப்பிராமணவடிவங்கொண்டு தோன்றி அவன்பாவத்தை ஒழித்தற்பொருட்டுத் தமதுதண்டத்தால் மலையைக்குத்தி உண்டாக்கப்பெற்றது.

௩௭. உருத்திரதீர்த்தம் - திருக்காளத்தீசர் சந்நிதியிலுள்ளது. நீலவெற்பு - நீலமலை; இது மூலத்தானத்திற்குத்தெற்கேயுள்ளது; வைரவக்கடவுளெழுந்தருளியிருத்தலின், வைரவமலையென்றும் வழங்கும். பரத்துவசனுச்சிரமம் - பரத்துவாசமுனிவர் தவஞ்செய்த ஆச்சிரமம். இது மூலத்தானத்திற்கு அக்கினி மூலையில் மலையின்மேலுள்ளது. இதற்கு அருகே அம்முனிவரால் உண்டாக்கப்பெற்ற பரத்துவாச தீர்த்தமும் அதன் அக்கினி மூலையில் அவர்பூசித்த பரத்துவாச லிங்கமுமிருக்கின்றன.

௩௮. எல் - ஒளி. மணிகங்கைத்தடம் - மணிகர்ணிகா தீர்த்தம். இது மூலத்தானத்திற்குத்தெற்கே ஓரம்பு வீழெல்லையிலுள்ளது. மாசிமாதத்தில் நடக்கும் பிரஹ்மோத்ஸவத்தில் ௯-ம் திருநாளிலும் மகர சங்கிராந்தியிலும் திருக்காளத்திநாதர் வேட்டைக் கோலத்தோடு தென்கயிலைமலையைச்சூழ எழுந்தருளி வருதல் இயல்பு. இது மிருகயாவிநோதமென வழங்கும்.

௩௯. நெஞ்சில் அந்தி வண்ணனே.

௪௦. அது சிலந்தி.

௪௧. கடுவையும் வரியையுமுடைய காளனென்னும் பாம்பு.

௪௨. செற்றை - செத்தை. இரண்டும் செய்நாளில். உவா - யானை.

௪௩. யானையின்மத்தகம் உடைந்தபொழுது முத்தும் பாம்பின் தலையிலிருந்த மாணிக்கமும் வெளிப்பட்டன. கும்பம் - யானையின் மத்தகம்.

௪௫. கைந்நாகம் - யானை. பைந்நாகம் - பாம்பு. இந்த இரண்டும் சிவசாரூப முற்றன.

௪௬. அவற்றுற் கொண்டருளிய திருநாமம் காளத்திநாதரென்பது.

௩௯ - ௪௬. சிலந்தி, காளன், யானை இவைகள் சிவபெருமானை வழிபட்டு முத்திபெற்ற கதைகளைச் சீகாளத்தி புராணத்துள்ள சீகாளத்திச் சருக்கத்தாலுணர்க.

௪௯. அன்பன் - கண்ணப்பநாயனுர். பார்வைக்கு - பார்வையினிடத்தே.

௫௦. இடந்து - பெயர்த்து.

௫௨. மறையோன் - சிவகோசரியார்.

௪௭ - ௫௨. "வாய்கலச மாகவழி பாடுசெயும்வேடன்மலராகுநயனங், காய்கணையி னுலிடந் தீசனடி கூடு காளத்தி மலையே" என்பது திருஞா. தே. திருவி. ௪. கண்ணப்பநாயனுர் சரித்திரத்தைப் பெரியபுராணம், கண்ணப்பநாயனுர் புராணத்தாலும், சீகாளத்தி புராணம், கண்ணப்பச் சருக்கத்தாலு முணர்க.

௫௩ - ௫௪. அந்தாதி - கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி. கீரன் - நக்கீரர். தியாகம் இந்தாவெனத் திருமேனி தந்தோன். நக்கீரர் சரிதத்தைச் சீகாளத்தி புராணம்

நக்கீரச்சருக்கத்தாலுணர்க; "சங்கத் தோன்வேண்டச் சரீரத்தை யேயுதவித், துங்கத் தியாகியெனத் தோன்றுமக்கு" என்பது, இரத்தினகிரியுலா. 366

ருரு. பாவலன் - நக்கீரர்.

ருசு. புண்டரீக விழிமாதுார் - மதுரையிலிருந்த மாணிக்க வல்லியென்னும் பரத்தையின் புதல்வியர்களும் முறையே அம்பிர்தவல்லை, காந்திமதியென்னும் பெயரையுடையவர்களுமாகிய இரண்டுகன்னியர்கள். இரும்பு - நெருப்பிற் பழுக்கக் காய்ச்சிய இரும்பு. இவர்கள் முத்திபெற்ற சரிதையைச் சீகாளத்தி புராணம், கன்னியர்கதைச் சருக்கத்தாலுணர்க.

ருஎ(?). புகலியார் வேந்தன் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

ருஅ. "கல்லாலின் கீழிருந்த காபாலிகாண்" என்பது, திருநா. தே. திருத்தா. அ. கணநாதன் - ஷெ. க, ங, ச; சுந். தே. க, ங, கூ0. நாவலான் - சுந்தரமூர்த்திநாயனார்.

ருகூ. 'சென்டாடிய விடையான்' என்பர் பின்னும்; ங௫0. "சென்டாடும்விடையாய் சிவனேயென் செழுஞ்சுடரே, வண்டார் குழலாளுமை பாகமகிழ்ந்தவனே" என்பது, சுந். தே. க.

சு0. அம்மானை போன்ற கண்; "புகழாத வைணவர்தம் விழிமறைத்துப்பின்பு புகழவிழ் தந்திடுமலே" என்பது, சுப்பிரமணியக்கடவுள்க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ், திருக்காளத்தி, சிறுபறை. கூ.

சுரு. வரகுணபாண்டியர் வழிபாட்டனவொன்று வடமொழிப்புராணம் தெரிவிக்கின்றது.

சுசு. யாதவன் - நாராயண நகரத்தரசன்.

எக. சோபனம்=சோபானம் - படிகள்.

சுஎ - எஉ. இக்கண்ணிகளிலுள்ள கதையைச் சீகாளத்தி புராணத்துள்ள விடசங்கமச் சருக்கத்தாலும், சிலந்திமுதல மூற்கதைச்சருக்கத்தாலுமுணர்க.

எங. ஞானப்பூங்கோதை - அம்பிகையின் திருநாமம்.

எரு. நாகநிலயம் - விண்ணுலகம்.

எசு(?). பச்சிமவாயில் - மேற்குவாயில். அச்சன் - அத்தன்.

எஎ. திருக்கு ஆள் அத்தி உடை - திருக்கையுடைய யானையின் தோலாகிய ஆடை.

எஅ - அஉ. இக்கண்ணிகளில் முறையே அணு, துடி, கலை, காட்டை, கணம், மாத்திரை, எல், கடிகை, நண்பகல், காலை, உச்சி, இரவு, செவ்வந்தி, திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம், ஓரை, மாதம், உவா, வருடம், உகம், கற்பம், சங்காரமென்னும் காலவிசேடப்பெயர்களும் பஞ்சாங்கமென்னும்பெயரும் தொனித்தல்காண்க.

எகூ. அணுவன் - அண்ணுவார். துடி - உடுக்கை. கலைகாட்டான் - நூல்களாற் காட்டப்படாதவர். பேய்க்கணம் - பேயின்கூட்டம். மாத்திரை - மிக்க அலைகளையுடைய கங்கை. எல்லை - சூரியனை.

எசு. கடிகையான் - கடிந்த கையையுடையவர். நண்பு அகலப் பெருந்த கண்ணப்ப நாயனாருடைய காலை உச்சியில் வைத்துக்கொண்டவர். நடிஇரவன் - இரவில் நடிப்பவர். செவ்வந்திநாதரென்பது, திருச்சிராப்பள்ளியிற் கோயில்கொண்டருளிய சிவபெருமானுடைய திருநாமம்.

எசு - அ0. நெடிய உருத்திதியன் வாரன் - நீண்ட வடிவத்தையும் காத்தற்றொழிலையுமுடைய திருமாலிடத்தே அன்புள்ளவர்; 'முகுந்தப் பிரியர்' என்பது சிவபெருமானுடைய திருநாமங்களுளொன்று. ஒருவன் - கண்ணப்பர். திருத்தியன் - திருப்தியையடைந்தோர்; திருத்தியவரென்றுமாம். அக்கு அத்திரத்தான் - (நெற்றிக்) கண்ணாகிய அஸ்திரத்தையுடையவர். மருத்து - காற்று.

அக. மகயோகம்-சிவயோகம். காரணன் - காரணமாகவுள்ளவர். பத்திபுரியோரை உள்ளான் - பத்திசெய்

யாதவர்களை நினையாதவர். பஞ்சாங்கம் - ஐந்து அங்கங்கள் ; தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்களைந்தையும் ஐந்தங்கமென்றல் மரபு; பரவிய அங்கமெனினும் பொருந்தும்.

௮௧ - ௮௨. சத்தியெனுமாதன். - உமையென்கிற மாதை யுடையவர். உவாவருடன் - யானையால் திருமஞ்சனம் செய்யப்பெற்றவர். வாலுகம் - வெண்மணலாற்செய்த திருவுருவம் ; என்றது ஸைகத லிங்கத்தை. கற்பம்-திருநீற்றுவகையுள் ஒன்று. சுரும்பர் சங்க ஆரன் - வண்டின்கூட்டத்தையுடைய ஆரத்தை அணிந்தவர்.

௮௩ ௮௪. இக்கண்ணிகளில் முறையே மேடமுதலிய இராசிகள்பன்னிரண்டின்பெயரும் அமைந்துள்ளன.

௮௫. வரும் ஏடு. உபநிடவன் - உபநிடதத்தையுடையவர்.

௮௬, நம்தொண்டனுக்கு இஃது இதம் ; தொண்டன் சுந்தரமூர்த்திநாயனார். கற்கடகன் - மாணிக்கங்கள் பதித்த அத்தகடகங்களையுடையவர்.

௮௬ - ௮௫. உதயம் சிங்கம் கலை புலியன் - நூணிலுதித்த சிங்கத் தோலாகிய ஆடையையுடைய, புலிபோல்வார்; சிவபெருமானைத் தெய்வவியாக்கிரமென்றல் மரபாதலின், 'புலியன்' என்றார். இங்ஙனம் கூறுதலை இந்நூலில் ௨௦௯, ௩௯௦-ம் கண்ணிகளிலும்காண்க. இனி, உதயகலை-உண்டாகிய ஆடையை, சிங்கு அப்புலியன் - குறைந்த அந்தப் புலியினின்றும் பெற்றவரெனினுமாம். அன்பில்லாதசிலர்க்குஅந்நியரானோர். சொம்-பொருள்; என்றது சங்கமண்டபத்துக்கு எதிரே தூக்கிய பொற்கிழியை. சங்கத்து உலாத்தினன் ; "சங்கத்துலாத்துஞ் சரணத்தான்" என்பது செய்யூருலா.

௮௯. விரிச்சு=(விரித்து) இகத்து ஆராதிப்பான். வீணையையுடைய தனுசன் - இராவணன்.

௮௭. சாதகும்ப வில்லன் - பொன்னாலாகிய மேருவில்லர். விதிக்கும் சனம் கெடுத்தோன். இராசி - கூட்டம்.

௮௭ - ௮௮. பொற்சாயற் கையென்றது வரகுணபாண்டியரின் தேவியாருடையகையினை ; சிவபெருமான் திருமுடிமீது அப்பெண்மணியாருடைய திருக்கை ஏறிய சரிதத்தை, மருதவனப்புராணம், வரகுணச்சருக்கம், ௮௫ - ம் செய்யுள்முதலியவற்றாலுணர்க ; கையிலேறிய தலையென்றுவிரித்து, தலை பிரமகபாலமெனினுமாம். மேற்காலனென்றது ஊர்த்துவ தாண்டவமூர்த்தியை.

௮௯. திருமுல்லைவாய்-திருமுல்லைவாயில். குடமூக்கு - கும்பகோணம். அஞ்சைக்களம் - திருவஞ்சைக்களம். இதில் தலப்பெயர்களை அவயவப் பெயர்கள்போலத் தோற்றும்படி அமைத்திருக்கும் அழகு வியக்கற்பாலது.

௯௦-௯௧. இவற்றில் பச்சைவடம், கலை, மேற்கட்டி, சிறுபாகை, அணை, பாகு, சட்டை, கச்சு, பவந்தம், துப்பட்டி, துண்டம், கோவணம், போர்வை, வேட்டியென்னும் பருத்திநூற் காரியப்பொருள்களின் விசேடப் பெயர்கள் தொனித்தல்காண்க. பவந்தம் - திரை.

௯௦. பச்சைவடம் - ஆலமரம். பலகலைகளைப் பண்டைக்காலத்தில் உண்டாக்கியவர். அச்சிறுபாகை - அச்சிறுபாக்கம். ஆட்கொண்டோரென்பது, அத்தலத்தில் ஸ்வாமியின் திருநாமம்; "அச்சிறுபாக்கமதாட்சி கொண்டாரே" என்பது, திருஞா. தே ; "என்புற்ற வணியார்ப ரெல்லையிலா வாட்சிபுரிந், தன்புற்று மகிழ்ந்த திருவச்சிறுபாக் கத்தணைந்தார்" என்பது பெரியபு. திருஞா. ௧௦௯௯.

௯௧. பேரணையான் - திருமால். காழி - சீகாழி. சட்டையான் - சட்டைநாதர். கச்சூர் - திருக்கச்சூர். பவம் - பாவம். க்ஷீரம் - பால்.

௯௨. துப்பு அட்டி - தூய்மையான பொருள்களைச் சொரிந்து. ஆட்டினு

ன் - அடியவர்களால் திருமஞ்சனம் செய்யப்பெற்றவர். துண்டப்புள் - கூரிய மூக்கினையுடைய கழுகு; கழுகு பூசித்த கதையைத் திருக்கழுக் குன்றப் புராணம், கங்காசலச்சருக்கத்தாலுணர்க. 'சம்பாதி போற்றினுர்' என்பர்பின்னும்; ருகூகூ.

கூங. கோவண்ணத்தான்-கிரணம் பொருந்திய திருமேனியையுடையவர். போர் வையான் - போரையொழிப்பவர். பரிவேட்டி - வலம்வருதல்; இது பரிவேஷ்டிதமென்னும்வடமொழிச்சிதைவு.

கூச. - கக0. இக்கண்ணிகளில்பல வகையான மடக்கணிகள் வந்திருத்தல்காண்க.

கூச. மந்திரமாகிய அஞ்சக்கரம் - பஞ்சாக்ஷரம். பானுக்கு அருளிய அழகிய சக்கராயுதம். வீணையைத் தாங்கிய உயர்ந்த தாமரைமலர்போலுந் திருக்கரம்.

கூரு. மிருத்தியுஞ்சயேசுவர ரென்று திருக்காளத்தியில் ஒருமூர்த்தியுளராதலின், அதுபற்றி, "காலகாலன்" என்றுரென்றுமாம். பல நூல்களைச் செய்தருளியவர். பின்னுள்ள காடு - மயானம். பழசை-பழையனூர் திருவாலங்காடு; அத்தலத்தைப் பழனை யென்பது பழவழக்காதலின், சோழ நாட்டிற் காவிரிநதியின் தென்கரைக்கண்ணதாகிய திருப்பழையாற்றிலுள்ள தலங்களுள் ஒன்றாகிய ஆறை வடதளியென்னும் தலமுமாம்; பழையாறு-பழசையென வழங்குகின்றது. அதிற் சிவபெருமான் நடனம் செய்ததாக அத்தலபுராணங் கூறும்.

கூரு - கூசா. நான்மாடம் - மதுரை. மாடன் - பொன்னிறமுடையவர்; மாடு - பொன்; "பொன்பணைத்தன்னவிறை" திருச். உகசு. மாட்டினுன்-மாளச்செய்தவர், இடபவாகன முடையவர். வேடனது வேடமுடையவர். முயல் - முயலகன்.

கூஎ. சோதியான் - சோதியாதவர், ஒளியையுடையவர். தோல் - யானை. மால் - திருமால், மயக்கம்.

கூஎ - கூஅ. பாதி துகிர் ஆகத் தான் ஆகத்தான்- பாதிவடிவம் பவழம்போலத் தோற்றும்வண்ணம் திருமேனி கொண்டருளியவர். அம்பினுன் அம்பினுன் - கடலிற்றுயிலும் திருமாலை அம்பாகவுடையவர். நாகம் - மலை, பாம்பு.

கூஅ - கூகூ. சேகு-குற்றம்; சேகில் ஆசாசகேசன். பாசம்-அன்பு, பேய்.

க00. ஆனந்தன் அனந்தன். கனற்சந்தன்-கனல்போலும் அழகுடையவர். சந்தன்-வேதத்தையுடையவர்.

க0க. கடியும்வில் - பிநாகம். வில்லம் - வில்வம். கநன் அல்லன் நல்லன். குழை வல்லன்-உமாதேவியார்க்குக் குழைந்த வன்மையையுடையவர்; குழைதற்குக் காரணமாகிய வல்லை (கொங்கையை) யுடையவரெனினுமாம். வல்லம் - ஒரு திருப்பதி.

க0உ. பணி - தொண்டு, பாம்பு, ஆபரணம். அணியான் - அழகியவர், அண்ணியவர்.

க0உ - க0ங. அணி அமலையான். மலை - கைலைமலை. மலையான் - மாறுபாடில்லாதவர். கலை - பிறை, நூல்கள். கலையான் - கலைதலில்லாதவர்.

க0ச. கொக்கின் இறகையே மாலையாக வுடையவர்; மலர் விசேடமாகிய கொக்கிறகுமாம்.

க0ரு. மதி தவளம் தண் ஆம் அலையான் - திருமால். மதித்த வளத்து அணுமலை.

க0சா. கச்சாலையான் - காஞ்சிக்கண்ணதாகிய கச்சபாலயத்தையுடையவர். ஆடும் கம் பத்தான் நாடு துரகச் சாலையான்-பகைவரை வெல்லும் இராவணனது நாட்டினைக் குதிரைச்சாலையாக வுடையவர்; கம் - தலை; இராவணன் வேதத்தில் வல்லவனென்றும் அதனுல் இலங்கையில் வேதங்கள் மிக்கு வழங்கினவென்றும் கூறுவர். சிவபெருமானுக்குவேதத்தைக் குதிரையென்றல் மரபு. நாடும் கம்பத்தான், கம்பம் - திருவேகம்பம். விச்சு=வித்து - விதை.

க0எ. திருப்பாசை - திருப்பாசூர். அடங்கும் சித்தான். பவுரி-கூத்தின் விகற்பம்; திருப்பு ஆசையான்; ஆசை - திசை. நடம் குஞ்சித்தான்.

க0எ - க0அ. தருவைப் போலே இரங்குகின்ற திருக்கரத்தில் ஆய்கின்ற சோற்றை ஏற்றருளியவர். பலபுட்கள் ஒலிக்கின்ற கைலாயமலையையும் இடபத்தையு முடையவர்.

க0அ-க0கூ. மருங்கு தர வரத்தினன் - மருங்கே தருதற்கு வரத்தையுடையார்; வரதக் கரத்தினர். கடுகைத்து ஆரான் - விடத்தை வெறுத்து உண்ணுதவர்; விருப்பத்தோடு உண்டவர். பிறவியாகிய தராவிற்கு அரம்போன்றவர்; தரா - உலோக வகையில் ஒன்று. கடுக்கைத்தார் - கொன்றை மாலை.

கக0. கடாவினன்போர் - யமனுடைய போரை. அடியான் கல்லாற் கடாவினன், அடியான் - சாக்கிய நாயனார்.

ககக. ஞானம்-ஞானப்பூங்கோதையம்மை.

ககஉ. நாவின்பால் - நாவினிடத்தே. வால் - வெள்ளை.

ககங. சந்து - தூது.

ககச. மீனவன் - சுந்தரபாண்டியராக எழுந்தருளியிருந்தவர்.

ககரு. வேதப்பெருமான் பிரமன்.

ககசு. புரணம்=ஸ்புரணம் - தோன்றுதல்.

ககஎ - ககஅ. பிறருக்குப் பொருளை யுதவுதற்குத் திண்ணிய கா முன்னுட் பணிந்தகரம்; கா - கற்பகம். சிந்தாமணிகளையுமிழுகின்ற வளவிய காப்பு - சர்ப்பரக்ஷை.

ககசு. செல்வான் - சூரியன். சூரியாஸ்தமயத்தின்பின்பு.

கககூ - கஉகூ. ‘நன்கருணை’ என்பது முதல் ‘நீலத்திருச்சாந்துசாத்தி’ என்பது இறுதியாக ஒருதொடர்; அ - ம் திருநாளிரவில் திருச்சாந்தணிதல் கூறப்படுகின்றது; இது கிருஷ்ணகந்தோத்ஸவமெனப்படும்.

கஉக. பாலடைந்தார் - மதுரைக் கன்னியர்கள்.

கஉரு. வீரன்-வீரபத்திரர். தேன்-வண்டு.

கஉசு. கரியகணை - திருமாலாகிய அம்பு.

கஉஅ. காத்த மறு - விடம்.

கஙஉ. இக்கண்ணிமுதல் வெள்ளை சாத்துதல் கூறுகின்றார்: தவளத்தொடை-தும்பைமாலை; இஃது இத்தலத்தில் நிரம்ப விசேடமுடையது.

கஙங. தோளாற் பரித்து நாமகளிர் சங்கமாய்ச் சாமரைஇரட்டவென்க. சாமரையிரட்டு மகளிர் வெள்ளணியணிந்திருத்தலின், கலைமகள் போல்வாரென்பார், ‘நாமகளிர்’ என்றார்; திருமகள் போல்வாரை, ‘இந்திரைகள்’ என்பர்பின்; உ0கூ.

கஙரு. தென்பீடம் - தக்ஷிணமூர்த்தியின்பீடம்; இது வைதிகபீடமெனப்படும்.

கஙசு. காரணம் - காரணுகமம்.

கஙஎ. அருப்பை அள்ளி. பள்ளி-படுக்கை.

கஙஅ. அகிலாண்டம்- எல்லாஅண்டங்களையும். அகில் ஆண்ட - அகிற்புகையைஆண்ட.

கஙகூ. கை - கிரணம்.

கசஉ. மதவாடை - யானைத்தோலாகிய ஆடை. புண்டரிகவாடை - புலித்தோலாகிய ஆடை. ‘கரியோறு’, ‘கொம்புகொள’, ‘பொறிதாக்க’ என்பன சிலேடைகள்.

கசங. ஆதிசேடனாகிய கச்சு.

கசசு. காளத்தியானை யென்பது இத்தலத்தில் ஸ்வாமியின் திருநாமம். ஓடை - நெற்றிப்பட்டம்.

கசஎ. குழை, தோடு - என்பன ஆபரண விசேடங்கள்; இவற்றிற்கு முறையே தளிர் பூவிதழெனமற்றொரு பொருள்கொள்க. சிலை - மலை.

கசஅ - கசகூ. சிவபெருமான் மூங்கிலிற் றோன்றியவராதலின், அவரை மூத்தம் சகோதரரென்று கருதியதென்றார். மகோதரிநிலம் - விடம். மகோதரம்=காகோதரம் - பாம்பு.

கசகூ. அரா-காளனென்னும்பாம்பு

கசுக. வாகுபுரி - வாகுவலயம்.

கசுஉ. ஒன்பதுகள் திகழ.

கசுஉ - கசுங. பதைத்து அதிர. தேய்ப்புண்டமையால் சந்திரனும், உதைபுண்டமையால் யமனும், கூத்தில் தோல்வியுற்றமையால் காளியும் சிந்தை நடுங்கினர்.

கசுச. கோத்திரம் - மலை.

கசுரு. துடி - உடுக்கை.

கசுசு. நவ்வி - மான்.

கசுஎ. களாசி - காளாஞ்சி. கஞ்சுகிகள் - சட்டையிட்டோர். வேத்திரம் - பிரம்பு.

கசுஎ - கசுஅ. தெருக்கும் திருமாலுக்கும் சிலேடை: ஆழி-உருளை, சக்கரம். பொற்கொடி - பொன்றுலாகிய துவசம், திருமகள். மணிவடம் - அழகிய (இழுக்கும்) வடம், இரத்தினமாலை. சங்கம், மணி, குர்பம் ஆகிய இவற்றை; குடக்கூத்து ஆடியபொழுது திருமால் கும்பந்தாங்கினர்.

கஎ0. கம்பிக்க-அதிர்ந்து முழங்க; 'கம்பிக்குந் தெய்வமுரசு' என்பார் பின்னும்; ருப0.

கஎக. சந்திரவட்டம் - ஒருவகை விருது.

கஎஉ. அநுபமத்துமால் - ஒப்பற்றமால்.

கஎங. கிரியின் அரி - இந்திரன். எரிகின்றவன் - அக்கினி. அரி - ஆடு.

கஎச. மை உருவானவன் - யமன். தானவன் - நிருதி. பாரிடம்-பூதம்; மயிடம்=மகிஷம் - எருமைக்கடா; எதிர்நிரணிரை.

கஎரு. நீர்க்கரசு - வருணன். சமீரணன் - வாயு. மீனேறு - சுறாமீன். மானேறு - கலைமான்.

கஎசு. தோழனும் தோழனும் - குபேரனும் ஈசானனும். பெற்றவிமானம் - பெற்றுக்கொண்ட விமானம், இடபமாகிய விமானம்; பெற்றமும் விமானமுமெனக் கொள்ளினுமாம்.

கஎசு - கஎஎ. விநாயகரும் வைரவக்கடவுளும். ஞாளி - நாய்.

கஎஅ. செண்டடிப்பவன் - ஐயனார். புடைக்கு - பக்கத்தில். சொல்புகழ். கேகயம் - மயில். கயம் - யானை.

கஎகூ. கலை - கலைமான்.

கஅ0. எழுவர் - எழுமுனிவர்; சத்தகன்னியருமாம். எண்மர்-அட்டவசுக்கள். ஒன்பதின்மர் - நவக்கிரக தேவர்; பதின்மர் - தசப்பிரமர். பதினொருவர் - ஏகாதச உருத்திரர். பன்னிருவர் - துவாதசாதித்தர். ஈரெழுவர் - பதினான்கு மனுக்கள்.

கஅஉ. பல் அக்கு-பலவாகிய என்புகள். பாடினோன் - திருஞானசம்பந்தர்.

கஅங. மிதந்தான் - திருநாவுக்கரசர். அரசு - சுந்தரமூர்த்திநாயனார்.

கஅச. தண்டி - சண்டேசர்.

கஅரு. நூலின் வழிகண்டோன் - சிலந்தியாகஇருந்துவழிபட்டதேவர். கொண்டோன் - காளனென்னும் பாம்பாக இருந்துவழிபட்ட தேவர்.

கஅசு. தலைமோதி நின்றோன் - யானையாகஇருந்துவழிபட்ட தேவர். சென்றோன் - கண்ணப்பநாயனார்.

கஅஎ. வந்தேனென்றோன் - சிவகோசரியார். வித்தகன்-நக்கீரர்; 'நந்தாவிளக்கெனவே நக்கீரர் சொன்ன திரு, வந்தாதி யேகாதனி' என்பர் பின்னும்; ருஉங; "சொல்லும் பொருளுமே தூதிரிய நெய்யுமா, நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாகச் - சொல்லரிய, வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த, பெண்பாகற் கேற்றினேன் பெற்று" என்று இவர் கூறியிருத்தலால் இவரை வெண்பாவிளக்கேற்றும் வித்தகர் என்றார்; கயிலைபாதிகாளத்திபாதித் திருவந்தாதி, க.

கஅஅ. பெற்றோர்-மதுரைக்கன்னியிருவர்.

ககூ0. தொண்டையர் - ஆமொண்டைமானுடைய பரம்பரையரசர்.

ககூக. வடமடம் - சங்கர முனிமடம்; இஃது இத்தலத்திற் காலகோபுரத்திற்கு வடக்கே மேற்குத் திருவீதிக்குமேற்கே கருங்கல்மண்டப வடிவாக இப்பொழுதுள்ளது. மாமணிகங்கைத்திடமடம் - மணிகர்ணிகேசு

வரமடம். இது திருக்கோயிலுக்குத் தெற்கேயுள்ளது.

ககூசு. ஆறுகொத்தார் - யானைமுதலியவற்றிற்கு இடபமுத்திரைபோடுவோராகிய முத்திராதிகாரிகள் முதலிய ஆறுவகையினர். பதினெண்மடத்தார்-சிவாகமபத்ததிகள் பதினெட்டும் இயற்றிய சிவாசாரியர்கள் பதினெண்மர்களுடைய பரம்பரையினர்; அப்பதினெண்மர்களாவார்: துர்வாஸசிவர், பைங்களசிவர், உக்ரஜ்யோதி, ஸ்ரீகண்டர், விஷ்ணுகண்டர், ஸ்வபோதர், வித்யாகண்டர், இராமகண்டர், ஞானசிவர், ஞானசங்கரர், ஸோமசம்பு, ப்ரஹ்மசம்பு, திரிலோசனசிவர், அகோரசிவர், வருணசிவர், ப்ரஸாதசிவர், இராமநாதசிவர், ஈசானசிவரென்பவர்கள்; "பதினெண் மடத்திற் பயிலு - முதலிகளும்" என்றார் திருவானைக்காவுலாவுடையாரும்.

ககூரு. மந்திரவோலைக்கணக்குமுத்திரித்தல் - வேதாகமங்களை யெழுதுதல். கூரமுறையார - கூர ஊரிலிருந்து வந்த முறையையுடையோரென்பர்.

ககூஎ. எட்டுக்கொத்தான இளைய நாயக்கர் - திருவபிடேகத்திற்குப் பால்கொணர்தல் முதலிய எட்டுவகைத்தொண்டிற்கு உரியவர்கள்.

ககூஅ. தேவரடியார்கள் - உருத்திரகணிகையர்கள்.

உ0உ. திருமாலாகிய பகழி.

உ0ங - உ0ச. சிவநம்பி - சிவகோசரியார்.

உ0அ. பாகருலகம் - பிரமனுலகம்.

உ0கூ. இந்திரைகள் - திருமகள் போன்ற மங்கையர்கள்.

உக0 - உகக. பொன்னின்சிலை - மேருமலை. அலைவாழ் முகிலளகத்தார் - நீரமகளிர்.

உகங. அரவு - காளன்; பூண்களாகிய பாம்புகளுமாம்.

உகச. மகம்-தக்கனுடைய யாகம்.

உகரு. தாடி=தாவடி-தாண்டி.

உகசு. யானையை.

உககூ. குளிகை - மாளிகையின்மேலுள்ள அறை.

உஉக. இரதம் - தேர், சாறு.

உஉஉ. கால் - கண்ணப்பருடைய பாதம்.

உஉங. உலாத்தல் - பவனிவருதல். திருவாபரணம் - நாகாபரணம். அதற்கு - அப்பாம்பிற்கு.

உஉரு. பால் - பக்கம்.

உஉசு. இக்கண்ணியின் முதலடியில், "ஆட்டைத்தான் தின்கிறான் எலும்பையும் கழுத்திற் போகட்டுக் கொள்ளல் வேண்டுமோ" என்னும் பழமொழியின்கருத்து அமைந்துள்ளது.

உஉஎ. ஏனக்கொம்பு - பன்றிக்கொம்பு.

உஙக. திருத்தோடு - திருத்தத்தோடு.

உஙஉ. அருச்சுனன்வில்லடி. 'வல்லடி வரத்து' என்பது ஒருபழமொழி.

உஙச. சேடன் - ஆதிசேடன்; ஆதிசேடன் பூசித்தமை, திருக்காளத்திபுராணத்தில், பலரும் சிலந்தியும் பூசித்த அத்தியாயத்தில் ருசு - ம்செய்யுளால் விளங்குகின்றது; 'சேடனைடைந்த சிவபிரான்' என்பாரின்னும்; ருசு.

உஙரு. அன்னத்திற் சந்துபேசலாமோ.

உஙசு. அத்தி - என்பு, யானை. உருவால் - கரியநிறத்தால்.

உஙஎ. ஞானப்பூ-ஞானப்பூங்கோதையம்மை.

உச0. பனியிதழி - குளிர்ந்தகொன்றைப்பூ. கனியிதழிமார் - கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடையவர்.

உசஉ. வீணையிட்டீர் - வீணையையணிந்தீர். வாய்வீணை - வீண்மொழிகளை.

உசங. பாணி-கை. மானித்தோம்-பெருமையுறச் செய்தோம்.

உசரு. புயங்கேசன் - காளன்.

உசஅ. சங்கத்தோன் - நக்கீரர்.

உசகூ. சிவகோசன் - சிவகோசரியார்.

௨௫௧. கங்கைக்கரையில் மன்மதனது நீலமலர்ப்பாணம் கொலைசெய்தலில்லாததென்றபடி. கங்கைக்கரையென்பதற்கு இந்தத்தலத்தில் உள்ள மணிகர்ணிகையின் கரையெனினும் பொருந்தும். கழுவிற்புக்கார்- சமணர்; அவர்கள் விரதம் கொல்லாமை.

௨௫௨. மகம் - தக்கன் யாகம்.

௨௫௩. தக்கோரிருவர் - பிரமனும் திருமாலும். அம்பு-திருமால். ஆகம்- உடம்பு.

௨௫௫. அண்டம்- முட்டை. துண்டப்பணி - இராகுகேதுக்கள்.

௨௫௭. உன்மத்தம் - ஊமத்தமலர்.

௨௫௮. கூறு-திருமேனியின்பங்கு.

௨௬௧. மெத்து - நிரம்பிய.

௨௬௩. வேடன் - கண்ணப்பர். மேனி - சிவபெருமானது திருமேனி.

௨௬௬. எல் நிலாம்-ஒளிவிளங்கும்.

௨௭௦. - ௨௭௪. இக்கண்ணிகளிலே கடல், கழி, ஏரி, நீர்க்குளம், கால்வாய், துரவு, கிணறு, நீர்வற்றுந்தடாகம், மடு, கேணி, வாவி, ஆறு, அகழ், ஊற்று, ஓடை என்னும்பெயர்கள் தொனித்தல் காண்க.

௨௭௦. போர்க்கு அடலான்.

௨௭௧. கழியான் - நீங்காதவர். பசுமை ஏரி,-பசிய அழகையுடைய உமாதேவியார். நீர்க்குளத்தான் - தேம்பாகு போல்வார்; குளநீரென்க; குளம்-வெல்லம். கால் வாயான்-கிட்டுதற்கரிய திருவடியையுடையார்.

௨௭௨. துரவான் - நீக்காதவர். கிள்ளுகின்ற நறிய தார். நீர் - குணம். தட ஆகம் - பெரிய உடம்பு.

௨௭௩. புரம் அடுவான். புகற்கு ஏணியாவான். இதய ஆவி.

௨௭௪. ஆற்றினன் - தணித்தவர். அகழ்தலாலுண்டாகிய உதிரம். நல்ல நினைவில் ஓடுகின்ற அழகியவர்; "மலர்மிசையேகினன்" என்பது திருக்குறள், ௩.

௨௭௭. மாசிப்புதுத்தேர் - மாசிமாதத்திலே தோன்றும் தென்றல். பழந்தேர் - பூமி.

௨௮௦ - ௨௮௩. சிவபெருமானுக்கும் கரும்புக்கும் சிலேடை. இங்கே வயல், ஆலையாடல், கல்லாலை, கோது, சாறு எனக் கரும்பிற்கேற்ற மொழிகள் அமைந்திருத்தல்காண்க.

௨௮௦. அந்தஅயனுக்கும்மாலுக்கும்.

௨௮௧. ஆலைவாய்=ஆலவாய் - மதுரை. கல்லாலை - கல்லாலமரத்தை.

௨௮௨. கோது - குற்றம், சக்கை. சாற்றில் - திருவிழாவில் அல்லது சொல்லுமிடத்தில்.

௨௮௪. தேரும் கரும்பும் - தேரும் சிவபெருமானும். கரும்பு - பேதை.

௨௮௫. இக்கரும்புக்கு - இந்தக்கரும்புபோல்வாளுக்கு.

௨௮௯. பாலற்கு - உபமந்யுமுனிவருக்கு. அவன் - மன்மதன். கடலையீந்தவர் கரும்பையளித்தால் அன்றென்பார் ஆரென்க.

௨௯௦. தறுவாய் - சமயம்.

௨௯௧ - ௨௯௨. மதவெற்பு-யானை. இறை - சிவபெருமான். சர்ப்பம் - காளன்.

௨௯௩. முத்து இவர.

௨௯௮. பரி - கிளி. காகளம்-குயில். தேர் - தென்றல். பகழி - மலர்.

௩௦௦. மூரல் ஒளிவீசும் - மூரலைப்போல் வெள்ளொளியைவீசும்; பின்னும் இப்படியே கொள்க.

௩௦௧. உகிர் - நகம்.

௩௦௨. கையைப்போற் செம்மை நிறமுள்ள.

௩௦௫. மூன்றுமுதலிகள் - திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவர்; "மூவாத பேரன்பின் மூவர்முதலிகளுந், தேவாரஞ் செய்த திருப்பாட்டும்" என்பது திருவேகாம்பரநாதருலா.

௩௦௭. கரும்பில் - கரும்பைப்போல. ஐந்துதலைகளையுடைய நாகலிங்கமாக எழுந்தருளியிருத்தலின், திருக்காளத்திநாதரை 'அஞ்சுகொழுந்து' என்றார்.

௩௦௯. எழுவர் : - காளன், யானை, கண்ணப்பர், சிவகோசரியார், நக்கீரர், கன்னியரிருவர்.

௩௧௨. பாணி - நீர்.

௩௧௩. கழை தாயன் கண் தங்கு அரியான் - வேய்ங்குழலை உரியதாகக் கொண்ட திருமாலினுடைய விழி தங்கப்பெற்ற அரியவர். கழை தாயன் - மூங்கிலைத் தாயாகவுடையவர். கண்டம் கரியான்.

௩௧௪. நன்கு அழலில் ஆடியவர்.

௩௧௭. படிக்கையில் மாலும், பல் வெளியில் பிரமனும் காணாத.

௩௨௨. கைலைமலைக்கு - கயிலையி லெழுந்தருளிய சிவபெருமானுக்கு.

௩௨௩. வேணுமீது இவளைப்பார்.

௩௨௪. என்று அவர்க்கு. நின்றபே ர் - நின்ற மங்கையர்கள்.

௩௨௫ - ௩௩௯. 'ஸ்வாமீ, தொண்டு பூண்டொழுகும் அடியேங்களைத் தே வரீர் ஆட்கொள்ளாமையினால் இன்ன இன்ன அபசாரங்களைச்செய்தே னும் தேவரீருடைய திருவருளைப் பெறுதற்குரிய ஆற்றலுடையேம்; பண்டைக்காலத்தில் அவ்வபசாரங்களி யற்றியவர்களை விரைந்து ஆள வில்லையா' என்று உண்மையடியார் களுடைய செயற்கருஞ் செய்கை களும் சிவபெருமானுடைய பெருங் கருணைத்திறமும் நன்குபுலப்படும் படி கூறுவாளாயினள்.

௩௨௫. ஆசையுடையார் - திக்காகி ய ஆடையையுடையவர்.

௩௨௬. அலர் - பழிமொழி, மலர். புல்லையுடைமையால் தோற்றொன்க.

௩௨௮. குத்துடம்பு - குத்தப்பட்ட உடம்பு.

௩௨௯. சங்கித்திட்டவர் - நக்கீரர். தலையில் அடித்தவன் - அருச்சுனன். செருப்பேந்தப் பண்ணியவர் - கண் ணப்ப நாயனார்.

௩௩௧. திருநாவுக்கரசு நாயனார், பாணபத்திரர், சுந்தரமூர்த்தி நாய னார்.

௩௩௨. துவ்டார் - பகைவர்.

௩௩௩. புறம்பென்றது விறன்மிண்ட நாயனார்கூறிய 'புறகு' என்னும் மொழியை; 'புறம்புகுள்ளானேன்' என்பர் பின்னும்; ௫௪௫.

௩௩௪ - ௩௩௫. நின்றபேர் மனைபு குந்தார்.

௩௪௦. வீணை, துடி, பணியென்றது இவளுடைய உறுப்பின் விசேடங்களை.

௩௪௧. மோதை - விரலணி; "ஒள்ளிழைமகளிரிலங்குவளைத்தொடீஇ, மெல்விரன் மோதை" என்பது நற்றிணை; ௧௩௬; மோதையென்பதுவாழையின்பெயராதலின், வாழைமரத்தினடியிலெழுந்தருளிய கங்காளனெனினுமாம். முன்னுாக்க-முன்னே செலுத்த. ஆசையாகிய இருட்டு.

௩௪௭. ஆட்டுத்தலைபடைத்த அம்மான் - தக்கன். அன்னை - உமாதேவியார்.

௩௪௮. கொம்பு - தடாதகாதேவியார். வீற்றிருக்கும் அந்த மானை.

௩௪௯. கைம்மான் - விநாயகக் கடவுள்.

௩௫௧. மேலாடி - எங்கும் வியாபித்தவர்.

௩௫௨. அம்பொற் கொடி - மங்கை. ஆடல் - விளையாடல்.

௩௫௩. அப்பு - நீர். போது அப்பு - மலர்ப்பாணம்.

௩௫௮. கற்றகலை - கற்றநூல்கள். கழன்ற கலை - ஆடை.

௩௫௯. காமிக்கை - விரும்புதல்.

௩௬௩. காண்டாய்-கண்டாய். வேண்டினால் - பிரார்த்தனையினால்.

௩௬௪. ஒரூரன் - சுந்தரமூர்த்தி நாயனார்.

௩௬௫. ஆசைப்பரவை - ஆசைக் கடல்.

௩௬௭. சகலகலைமங்கை - ஸரஸ்வதி தேவி.

௩௭௧. விடம் - நீர்.

௩௭௨ - ௩௭௯. இக்கண்ணிகளில் கள்ளில், விற்கோலம், ஆலங்காடு, பூவணம், நன்னிலம், முல்லைவாயில், கருகாவூர், கூடல், வேணுபுரம், கமலாலயம், செங்கோடு, ஆலக்கோயில், வலஞ்சுழி, குறுக்கை, மாணிக்கநாகம் (திருவாட்போக்கி), அரம்பைவனம் (திருப்பைஞ்ஞீலி), கஞ்சனூர், கச்ச

பாலயமென்னும் திருப்பதிகளின்பெயர்கள் தொனித்தல் காண்க.

௩௭௨. கள் இனம்-வண்டின் கூட்டம். விற்கோலம் - வில்லின் அழகு.

௩௭௩. ஆலம் - விடம். எட்பூவின் வண்ணத்தினள்.

௩௭௪. நகையாகிய முல்லையையுடைய வாயினள்.

௩௭௫. சங்கம் நேர்கூடுதலையுடையாள். வேணுபுரம்- மூங்கிலின் உரு.

௩௭௬. செங்கோடு- செவ்வியகொம்பு. [கோபித்தலை.

௩௭௭. ஆங்கு உறுக்கை - அங்கே

௩௭௮. அரம்பை - வாழை.

௩௮௨. ஆர் - யாவர், ஆத்தி.

௩௮௩. பந்து - சுற்றம், கந்துகம். சந்து - சந்தனம், தூது.

௩௮௭. நம்பு - இச்சை, விரும்பு.

௩௮௯. ஓம் - ஆம்.

௩௯௮. குன்று-திருக்கழுக்குன்றம்.

௩௯௯. பம்பாநதி-காஞ்சீபுரத்தைச் சார்ந்த நதிகளில் ஒன்று.

௪௦௦. சிலைவடம் - கல்லாலமரம்.

௪௦௪. பிணை - பிள்ளை. புத்தரசு - மன்மதன்.

௪௦௭. பூண்டவடம் - என்புமாலை.

௪௦௮. இருவர் - திருமாலும் கண்ணப்ப நாயனாரும்.

௪௦௯. எலியென்றது மாவலியாக வந்த எலியை. புல் இக்கு - புன்மையையுடைய கரும்புவில்.

௪௧௦. மாலை - பூமாலை, மாலைக்காலம், மயக்கத்தை.

௪௧௩. நெற்றிக்கண்ணை.

௪௧௪. சலம் என்- தணியாக்கோபத்துக்குக் காரணம் யாது?

௪௨௨. பலிக்கு - சாம்பலின்கண்.

௪௨௭. குத்தி - குஸ்திப்போர்.

௪௩௦. ஈரெண்கலையோன் - சந்திரன். இம்மகளிர்க்குரிய கலைகள் அறுபத்துநான்கென்பதை, மணிமேகலை, ௨-ம் காதையின், ௨௯-ம் அடிக்குறிப்புரையாலுமுணர்க.

௪௩௧. அநங்கனுகிய அதிகாரி.

௪௩௨. முன்னாள் - திருத்தேர்ப்பவனியினது முதனாளில்.

௪௩௫. மாறுனமை - மோகினியாகிவந்து தழுவினமை. சேயிழையான் - திருமால்.

௪௩௬. அகமகிழ்வான் - பிரமன்.

௪௩௭. சந்திரன், சூரியன், இந்திரன்.

௪௩௮. மன்மதன், யமன், அக்கினி.

௪௪௧. விரவி - விரவியவர்.

௪௪௨. கண்புதைத்தது - உமாதேவியார் திருக்கண்புதைத்த திருவிளையாடல். இச்சரிதையைக் காஞ்சிப்புராணத்தில் திருக்கண்புதைத்த படலத்தாலுணர்க.

௪௪௫ - ௪௪௬. பெருமான், குழல், கண்ணி, வார் இவைகள் சிலேடை.

௪௪௮. தாணு-நடுதறி; ஸ்வாமியின் திருநாமம்; "கன்றாப்பூர் நடுதறியைக்காணலாமே" என்பதனாலுமுணர்க; திருநா. தே. பாலன் பாலாழிப் பள்ளன் - பக்கத்திலுள்ளவரும் பாற்கடலில் துயில்பவருமாகிய திருமால்.

௪௪௯ - ௪௫௦. நன்றறியாப்பாணன் - ஏமநாதன். அருட்பாணன் - பாணபத்திரர். வடநூற்பாணன் - வடநூற்புலவர். யாழ்ப்பாணன் - திருநீலகண்டயாழ்ப்பாணர்.

௪௫௩. அப்பாலன்-திருவிரிஞ்சைத்தலத்திலிருந்த சிவசர்மாவென்னும் ஆதிசைவச்சிறுவன்; இவனுக்குச் சிவபெருமான் வளைந்தருளியதைத் திருவிரிஞ்சைப்புராணத்துள்ள பாலனுக்குத் திருமுடிவளைத்தசருக்கத்தாலுணர்க.

௪௫௧ - ௪௫௨. முப்பாலாம் முத்தி- சாலோகமுதலிய பதமுத்திகள்; முத்தி - பரமுத்தி.

௪௫௩. 'தன் கண்கரிச்ச' என்றது தவத்தால் வருந்தியதைப் புலப்படுத்துகின்றது.

௪௫௪. மரிச்சவரை -மரித்தவரை. இருவர் - கம்பளர் அச்சுவதரர்.

௪௫௫. பரத்தையடையார் செவியான் - முத்தியையடைதற்கு உரிமையில்லாதவர்களால் ஜபிக்கப்படாதவர். செவி=செவ்வி - அழகு, சமயம். காடு - தேவதாருவனம்.

௪௫௭. தானை - சேனை, ஆடை.

௪௬௦. பூவிற் புலி - தாமரைப்பூவிற் பொருந்திய பிரமதேவர். உறக்கும்- கிள்ளும். ஆவிற்புலி- சிவபெருமான்.

௪௬௧. உண்டோ - பயன் உண்டோ. தன்கலையும் - தனது ஆடையையும்.

௪௬௬. நாரி - வண்டு. வாமம் - துடை.

௪௬௭. சிவனமுது - விடம்.

௪௬௮. துண்டம் - மூக்கு.

௪௭௧. கந்தம் - மணம்.

௪௭௨. இடையா - பின்னிடாத.

௪௭௩. கொங்கைகளை மணக்கச்செய்த மகளிர். வாசித்தார்=வாசிகைத்தார் - கோக்கும் மாலைகளுக்குரிய பூ.

௪௭௬. மஞ்சரிகள் கூட்டமிட.

௪௭௭. கிளை - மூங்கில். முலை - முல்லைக்கொடி.

௪௭௯. வசந்தன்- தென்றல்.

௪௮௫. தேங்கு அண்ணத்தில்.

௪௮௮. மத்தகம் - தலை. முத்தமென்பது சிலேடை.

௪௮௯. கீரம் - கிளி.

௪௯௦. வேதனை - பிரமனை, துன்பம்.

௪௯௧. பச்சிமவாசல் - மேற்குவாயில்.

௪௯௫. சுமப்பான் - திருமால்.

௪௯௬. சுமப்பான் - பிரமன்.

௪௯௭ - ௪௯௮. பூபரண குண்டலம் - ஆதிசேடனாகிய குண்டலம்.

௫௦௦. விண்ணோர்கள் கண்டன் - தேவர்களைச் சிக்ஷித்து நடத்துபவர். நீள் அகண்டன். கீள் - இலங்கோடு.

௫௦௩. சுக்குண்ணல் - பொடியாதல். மாற்றான் - மன்மதன்.

௫௦௬. விருது - சார்ந்தாரைக்காத்தாரென்னும் சிறப்புப்பெயர்.

௫௦௮. இசையுள் ஈரெண்ணிரண்டு - முப்பத்திரண்டு இராகம்.

௫௧௦. விண்ணோரசனம் - அமுதம். ஒருத்தி - ஊமை.

௫௧௬. இடை இடையும்.

௫௨௬. வண்சிலம்பு - வளவியமலை.

௫௨௮. ஆடு அரங்கு- மாலைகள் ஆடுகின்ற அரங்கு.

௫௩௩. ஓர்பாதியை - வலப்பாதியை.

௫௩௬ - ௫௪௦. இக்கண்ணிகளில் மலைமுதலிய தசாங்கங்கள் கூறப்படுகின்றன.

௫௪௩. மான் - மகத்தத்துவம்.

௫௪௫. சந்தாய் - தூதாகி.

௫௪௬. சிதம்பரத்திலிருந்தநாதசன்மாவென்பவருடைய நூல்களைத் திருடிய பீமனென்பவன் அவரால் சபிக்கப்பெற்று ஊமையாகிப் பல இடங்களிலுமலைந்து வருந்தி ஸ்ரீசைலத்திருந்த உரோமசமுனிவர்கட்டளையின்படி இத்தலத்தையடைந்து சிவபெருமானை வழிபட்டு மூலத்தானத்திற்குத் தெற்கேயுள்ள சக்திக்ஷேத்திரத்தில் சிவலிங்கப்ரதிஷ்டைசெய்து பூசித்து வாக்குண்டாகப்பெற்றுச் சிவபெருமானையும் ஞானப் பூங்கோதையையும் துதித்து உய்ந்தனனென்பது புராணவரலாறு; அஃது ஸ்துதி மூகஸ்துதியென இக்காலத்து வழங்கும்.

௫௪௮. கோடு - கரை. நீற்றை - நீற்றறையை.

௫௫௦. சிவந்த - சிவந்த நிறமுள்ள அசைந்தாடு மாலைகள். பசந்தாடி - பச்சைநிறமுள்ள அசைந்தாடு மாலைகள். நரை - சாமரை.

௫௫௨. கூடல் - கூடலிழைத்தல்.

௫௬௧. ஐயம்புக்கு - பிச்சைக்குப் புகுந்து, ஐந்து பாணங்களுக்கு.

௫௬௪. ஒருவன் - நக்கீரர்.

௫௬௭. வெண்டு - மரங்களின் உள்ளீட்டைப் போக்கும் ஒருவகை நோய். தொண்டானோர் - திருநாவுக்கரசுநாயனார்.

௫௬௯. என்னுள் இருக்கவே. கொச்சை - இழிவு.

௫௭௧. நினைந்து ஏனோதான்.

௫௭௩. நாகம் - நாகருலகம்.

௫௭௮. அபிராமம் - பேரழகு.